ராட்டூர் வீரன்-துர்க்கா தாஸ்.

வங்காளக்கவி சம்ராட் துவிஜேந்திர லால் ராய்
எழுதிய சரித்திர சம்பந்தமான தேசீய நாடகம்
க்ஷத்ரபதி சிவாஜி, ரஜபுத்திர சிங்கம் ப்ரதாப சிம்மன்,
வீர விளக்கு க்ஷத்திரஸால் முதலிய இந்திய வீர
தெய்வங்களுடன் இணையான வெற்றி வீரன்
துர்க்காதாஸ் ஒருவனே.
ஆரம்ப முதல் இறுதிவரை வீரம்! வீரம்!! வீரம்!!!
தேச பக்தி ததும்புகிறது; சத்தியம் ஜெயிக்கிறது.
திலேர் கானின் தீரம், மஹா மாயாவின் மாயா, [illegible]
ரஸியாவின் கவிதா விலாசம், காஸிமின் பிரமாணிக்க ஊழியம்
எல்லாம் அற்புதம்! ஆச்சர்யம்!! இன்பம்!!!
ஆவேச நடை! அலங்கார பாஷை! மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!
விரைவில் வெளிவரும்.
"பாரதி" புத்தகாலய வெளியீடு.

பாரத நாட்டின் வீரப் புதல்வி

ஜான்ஸி மகாராணி லக்ஷ்மீ பாய்

ஜீவிய சரித்திரம்.
பிரதி 1-க்கு விலை அணா 0—2—0.
வேண்டுவோர் தபாற் செலவிற்கும் சேர்த்து இரண்டரையணா
ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும்.
10 பிரதிகள் வாங்குவோருக்குத் தபாற் செலவு இனாம்.
"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

நெப்போலியன் போனபார்ட் சரித்திரம்.

பண்டித N. M. உஷன்கான் அவர்கள் எழுதியது.
கொடுங்கோலர் துன்பத்தினின்றும் விடுதலையடைந்து, நாட்டு
மக்களனைவர்க்கும் பூரண சுதந்திரத்தைக் கொடுத்த, பிரெஞ்சு நாட்டு
உவமையற்ற வீராதி வீரன், நெப்போலிய சக்ரவர்த்தி சரிதம்.
விலை அணா 4.
தபாற் செலவுக்கும் சேர்த்து 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
"பாரதி" புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

பொருள் அடக்கம்.

192845

மாலை 4. ஆங்கீரஸ–கார்த்திகை. மணி 8.

தொடர் எண்		பக்கம்.
1.	வெண்ணிலா—	505
2.	இந்திய இராஜரீகம்—	506
3.	ஸ்ரீ அரவிந்தப் பெருந்தகையார்:— திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள் ...	512
4.	தமிழரின் தற்கால நிலை:— திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் ...	524
5.	ஸ்ரீமுக சாதவாகனன் தண்ட யாத்திரை:— திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் ...	527
6.	சீனதேச கேசரி சன-யாத-சேனன்:— திரு. தினகரன் அவர்கள் ...	533
7.	பாரத நாட்டின் பண்டைக் கலைகள்:— திரு. O. P. தேசிகன் அவர்கள் ...	544
8.	டாக்டர் சாமுவேல் ஜான்ஸன்: திரு. பரமசிவம் அவர்கள் ...	557
9.	தோட்டக்காரன் மகள்:—("தினமணி")	570
10.	ஆராய்ச்சி மேடை—	579
11.	ஆசிரியர் குறிப்புகள்—	581

'பாரதி'யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு	ரூ.	10—0—0
,,	,,	½-க்கு	,,		5—8—0
,,	,,	¼-க்கு	,,		3—0—0
கவர்	,,	2 & 3	,,		15—0—0
,,	,,	4	,,		20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.
நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்,
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, போசிரியர். ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை 4	ஆங்கீரஸ–கார்த்திகை 1932-ஞு நவம்பர்-டிசம்பர்மீ	மணி 8

வெண்ணிலா.

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே—ஒரு
தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே. 1

காதமுடி மேலிருந்த வெண்ணிலாவே—அங்கே
காணும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 2

சச்சிதாநந் தக்கடலில் வெண்ணிலாவே—நானுந்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 3

இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலாவே—நானும்
இருக்க வெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே. 4

தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலாவே—நானுஞ்
சிவமயம தாய்விழைந்தேன் வெண்ணிலாவே. 5

போதநடு ஆடிருந்த வெண்ணிலாவே—மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 6

ஆருமறி யாமலிங்கே வெண்ணிலாவே—அரு
ளாளர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே. 7

அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலாவே—யெங்கள்
அய்யர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே. 8

—திருவருட்பா.

இந்திய இராஜரீகம்.

ஓரஞ் செய்திடாமே—தருமத்
துறுதி கொன்றிடாமே
சோரஞ் செய்திடாமே—பிறரைத்
துயரில் வீழ்த்திடாமே
ஊரை யாளுமுறையே—உலகில்
ஓர் புத்த்து மில்லை.

*　　*　　*

நாட்டு மாந்த ரெல்லாந்—தம்போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யா மென்—றுலகை
அரச ரெண்ணி விட்டார்.

—பாஞ்சாலி சபதம்.　　—பாரதியார்.

காலம் வந்துவிட்டது. அரசியலை அமைக்க வேண்டும். இந்தியாவிலே ஒரு புதிய சகாப்தத்தைப்* பிறப்பித்தோம்; ஐக்கிய பாரதத்தை ‡ ஆக்கினோம். இனிச் செய்ய வேண்டியதென்ன? அரசியலை அமைக்க வேண்டாமா? ஆமாம். அவ் வேலையையும் இம் மதியிலே தானே முடித்துவிடுவோம்.

இங்கேயொரு புரட்சி நடக்கின்றது. அதன் ஆத்ம அலைகளிலே பட்டுத் தீண்டாமையும், சமயப் பிளவுஞ் சிதைந்துவிட்டன. பழைய அரசியலை அழித்துப் புதியதோர் தர்ம ராஜ்யத்தை நிறுவ வேண்டும். அதற்காக இராஜரீக சாஸ்திரத்தின் பண்டைச் சுவடிகளையும், இப்பொழுதைய ஏடுகளையும் சவிஸ்தாரமாக வல்ல, ரத்தினச் சுருக்கமாகத் தானே சில பக்கங்களிலே படித்துவிடுகிறோம்.

சரித்திரத்தின் உஷற் காலத்திலே சூர்ய சந்திர வம்ஸத்துச் சக்கிரவர்த்திகள் இந்தியாவை, ஐம்பத்தாறு தேசத்து அரசர்கள் கப்பங் கட்ட, பிரபஞ்ச முழுதிலுமிருந்து வீர விருதும், வாகுவ

* இந்தியாவின் புதிய சகாப்தம்—"பாரதி" புரட்டாசி மணி.
‡ ஐக்கிய பாரதம்　　"　　ஐப்பசி　　"

லயங்களும் வந்து சேர ஏகச்சக்ராதிபதிகளாகத் தானே அரசாண்டார்களாம். அப்புறம் மகதாதிபதிகளாகிய மௌரியர்கள் சிம்மாசனமேறி, லோகம் புகழச் செங்கோல் செலுத்தினார்கள். சந்திரகுப்தனுடைய சக்ராதிபத்யம், அசோகனது சம்ராட்பதம், விக்ரமாதித்யனுடைய திக்விஜயம் இவைகளை யெல்லாம் எண்ணினால் இந்தியன் விடுகிற நெடுமூச்சு ஐந்து கண்டங்களுக்குங் கேட்கிறது. ஹா! நெஞ்சு விம்மி நேர்வதென்ன? அந்தக் காலம் இன்னொரு தரம் வரப் போகிறதா?

இவ்வாறாக இந்திய மன்னர்கள் இந்தியாவை ஆண்டதுவரை எங்கள் இந்தியாவின் சௌபாக்கியரவி தனது கேந்திர ஸ்தானமாகிற உச்சி வானத்திலே, எந்த மேகத்தாலும் மறைக்கப்படாமல் ஸ்வயம் பிரகாசமாகத்தானே உஜ்வல்யமாக ஜோதிமானாகவும், நீதிமானாகவும் செம்மை யரசு செய்துகொண் டிருந்தான். அப்பொழுது மத்தியானம் போய்ப் பொழுது சாயுங் காலத்தில், மேற்கிலிருந்து கைபர்க் கணவாய் வழியாக, ஒரு சூரைக் காற்றுக் கிளம்பி வந்து இந்தியாவுக்குள்ளே புகுந்தது. இடி முழக்கம்! இருள்! அவைகளைத் தொடர்ந்து பிரளயம்! அந்தப் பிரளயத்தின் நடுவிலே மொகல் சிம்மாசனம் எழுந்தது. நாதிர்ஷாவின் கொள்ளைத் தொழிலையுந், தைமூரின் வேட்டைச் செயலையும் விட்டு பேபர், ஹுமாயூன் முதலிய மொகலாய மன்னர்கள் இந்தியர்களாக இந்தியாவை இந்தியாவுக்காகவே அரசாளத் தொடங்கினார்கள். மஹா அக்பர் பாதுஷாவின் அரசாட்சி காலத்திலே இந்தியா ஸ்திரமான இராஜரீகத்தை யடைந்து பிரஜா உரிமையும், விவசாயச் செழிமையும், வியாபாரப் பெருமையுமுற்று விளங்கிற்று. அப்புறம் ஐரோப்பிய வர்த்தகர்கள் வந்து புகுந்தார்கள். அவர்களுடைய கண்-அந்தக் கண்ணிலே தீப்பாய, இந்தியாவின் மர்மத்தே பாய்ந்து சாக்ஷாத் பாரத தேவியைப் பிச்சைப் பிழைப்பிலே புகுத்திவிட்டது. 150 வருடங்களாக அவள் அன்னியர்களின் நுகத்தடியிலே கிடந்து அவதிப்படுகிறாள். அந்தப் பரிதாபகரமான காட்சியை இதர எந்த நாட்டுச் சரித்திரமுஞ் சொல்லாது. சிம்மாசனத்திலே யிருந்த சீமாட்டி புழுதியிலே கிடந்து புழுங்குகிறாள். ஸ்வச்சமாகத் தனக்குத் தானே சமானமாகவும், தன்னுடைய பிரேம பிரஜைகளின் மஹா ராணியாகவும் இருந்தவளின் வாழ்க்கைச் சக்கரம் குடை கவிழ்ந்து கேவலம் பரதேசிகளின் பாத தூளியை யபிஷேபித்துக்கொண்டு பசிபிழந்து திரிகிறாள். 'பிக்ஷாந் தேகி' யென்று வந்து அவளது மணி வாசலிலே காத்திருந்தவர்கள் இப்பொழுது அவளை அன்பாலும், ஆதர்ஸத்தாலுமல்ல—அதிகாரத்தால் ஆளுகிறார்கள். புன்முறுவல் பூத்திருந்த நமது நஞ்சை புஞ்சைக ளெல்லாம் முத்துக் கொழிக்காமல் விவசாயிகளின்

கண்ணீரை யுகிர்க்கின்றன; சிற்பக்கலை செத்துவிட்டது; கைத்தொழிலைக் காணோம்; நாகரீகம் நசித்துவிட்டது; இலக்கியம் இல்லை. சமஸ்த ஜெகத்திற்கும் ஜீவபூமியா யிருந்த பாரத வர்ஷம், பாலை வனத்தைப் போல வெறுமையுங் கருமையும் அடைந்திருக்கிறது. நிலமகன் நிலத்தைப் பிளந்து, கொழு முனையிலே விதைத்து, அரிவாள் கருக்கிலே அறுத்து, ஒப்படி செய்து சர்வ ஜீவப் பிராணிகளுக்கும் விருந்து செய்யச் சந்தர்ப்பமளிக்கப்படாமல் சமுசாரிகள், தீர்வைத் தண்டல்காரர்களாலும், வட்டி வசூல்காரர்களாலும் அலைக்கழிக்கப்படுகிறார்கள். இரவு பகல் இருபத்திநான்கு மணி நேரமுந் தொழிலாளி இரத்த வியர்வை சொட்ட உழைக்கிறான். ஒரு வேளையாவது அவனுடைய ருச்சாண் வயிறு கூட நிரம்பவில்லை. நாட்டு வியாபாரம் நாட்டு மக்களிடத்திலே கிடையாது. ஞான, பௌரிஷ, பாக்கிய சம்பத்துக்களனைத்தும் பாழ் போயின.

இந்த அதிர்ஷ்டக் கேடுகளெல்லாம் யாராலே வந்தன? நமது தலையிலே நாம்தானே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டோம். கடைக்காரன் வந்து தனது வர்த்தகத்தை நமது மத்தியிலே நடத்திக்கொள்ளுவதற்கு அனுமதி கேட்டானே பிச்சா பூர்வமாக, அன்று நாம் நமது தயாளச் சிந்தையைத் தாராளமாகக் காட்டி அவன் கேட்டதற்கு மேலே தந்துவிட்டோம். வர்த்தகச்சாலைகளைக் கட்டினான். தன்னையுந் தனது வர்த்தகத்தையுந் தற்காத்துக் கொள்ளச் சைன்யம்! சைன்யந் தங்கக் கோட்டைகள்! துப்பாக்கி, பீரங்கி வெடி மருந்துகளெல்லாம் ஐரோப்பாவிலிருந்துங் கப்பல் கப்பலாக வந்து இறங்கின. இப்படியாக நமது கெதி ஒட்டகத்திற்குத் தலைசாய்க்க இடங் கொடுத்துக் கூடாரக்காரனே வெளியேற நேர்ந்த கதையைப்போல் முடிந்தது. ஆனால் அந் நயவஞ்சகத்திற்கு நல்ல மூடி போட்டு, வீர கற்பனையைக் கற்பித்து, வாள் வலியால் நம்மை வென்றதாகவும், வாள் வலியாலேயே நம்மை யாளுகிறதாகவுஞ் சொல்லப்படுகிறது.

அரசாங்கங்கள் அழியலாம். ஆனால் அரசாளப்படும் ஜனங்களின் ஆத்மம் அழிகிறதில்லை—அழிக்கப்படுகிறதில்லை—அழிக்கவும் முடியாது. மிதிக்கப்பட்ட பயிர்கூட மறுபடியும் நிமிர்ந்து கொள்ளுவது போல, நசுக்கப்பட்ட நாடும் ஒரு நாள் நிமிர்ந்தே தீர வேண்டும். உயர எறியப்பட்ட கல்லானது பூமியின் ஆகர்ண சக்தியால் இழுக்கப்பட்டுக் கீழே விழுந்துவிடுகிறது போல, நில மக்களின் அத்யாத்ம சக்தியானது ஆஸ்மான சிம்மாசனத்திலிருக்கிற சக்கிரவர்த்திகளையும் தரையிலே யிழுத்தெறிந்துவிடும்.

'காங்கிரஸ்' என்கிற சுதந்திர சூரியன் தோன்றினான். இழச்சிங்கம் தாதாபாய், கோக்லே, திலகன், மேத்தா முதலிய தேசப்

புலவர்கள் திருப்பள்ளியெழுச்சி பாடினார்கள். தாஸன், லஜபதி, நேரு, காந்தியாகிற தேச கேசரிகள் தோன்றின. நேரு திட்டம் வரையப்பட்டது. குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் கேட்டோம். சர்வ மான்யமாக நம்மைக் கட்டி யாளுகிற தாதாக்கள் ஏனென்று கூடக் கேட்கவில்லை. இனிமேல் இந்தச் செவிட்டுக் காதிலே ஊதி ஊதி என்னதான் செய்கிறது? நமக்கு நாமே பாடுபட்டும், உயிரை விட்டும், சுயராஜ்யம்—பூரண சுயராஜ்யம்—பரிபூரண சுயராஜ்யம் வாங்கியே தீருவோம் என்று 1929-ல் லாகூரில் சபதம் எடுத்துக்கொண்டோம். காந்திஜீ உப்புக் கேட்டார். பாரைக் கல்லை இர்வின் பிரபு தூக்கிக் கொடுத்தான். சத்தியப் போர் ஆரம்பமாயிற்று. ஆடுகளைப் பட்டியிலடைப்பது போலத் தேசத்து அபிமானிகள் லட்சக் கணக்கானோர் சிறையிற் பூட்டப்பட்டார்கள். வலக் கரத்திலே வாள், இடக் கரத்திலே சீர்திருத்தம்; உதட்டிலே உறவு, நெஞ்சிலே விஷம். அதே மாதிரி இந்தியாவிலே அடிதடி, அடக்குமுறை; லண்டனிலே வட்ட மேஜை, அரசியற் சீர்திருத்தம். இந்தியர்களின் கோரிக்கைகளான குடியேற்றநாட் டந்தஸ்தோ, பூரண சுயேச்சையோ அங்குப் பேசப்படவேயில்லை. ஐக்கிய சமஷ்டியாம்; மாகாண சுயாட்சியாம். இவைகளைப்பற்றித்தான் மூன்று மேஜைகளிலும் மூச்சுப் போகப் பேசித் தொலைக்கிறார்கள். சரி. இப்போது உங்கள் முன்னே நான்கு திட்டங்கள் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மாகாண சுயாட்சி, ஐக்கியச் சமஷ்டியாட்சி, குடியேற்ற நாட்டரசியல், பூரண சுயராஜ்யம். இவை நான்கையும் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பேசுவோம்.

இந்தியா ஒரு பரந்த நிலம்—விசாலமான கண்டம்—18,08,679 சதுர மைல் விஸ்தீரணமானது. ஜனத் தொகை 1931-ம் வருஷக் கணிதப்படி 35,28,37,778. இதில் ஹிந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர், சீக்கியர், சொராஸ்தியர், புத்தர், ஜைனர் எனப் பல வேறு சமயத்தவர்க ளிருக்கின்றனர். இப் பாகுபாடின்றி நிலப் பிரிவினையும் உண்டு—ஆட்சி வேற்றுமையு மிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியா ஒரு பகுதி; சமஸ்தான இந்தியா இன்னொரு பகுதி. இவற்றில் பிரிட்டிஷ் இந்தியா பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பம்பாய், பாஞ்சாலம், ஐக்கியம், மத்தியம், வங்காளம், பீஹார்—ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புறம், பர்மா முதலியவைதான் அம் மாகாணங்கள். அவைகள் தனித் தனியே தங்கள் தங்கள் மாகாணங்களைத் தனி நிர்வாகத்தின் கீழ் அரசாட்சி செய்துகொள்ளுவது மாகாண சுயாட்சியாகும். பின்னர் இவைகள் இன்னும் விசாலமாகப் பிரிந்து பாஷைச் சுயாட்சியாகவும், ஜாதிச் சுயாட்சியாகவும் ஆகிவிடலாம். ஆகையால் இவ் வரசாங்

கம் இந்தியாவைச் சுக்கு நூறாய்ச் சிதைக்குமேயல்லால் ஐக்கிய பாரதத்திற்கு ஒவ்வக்கூடிய திட்டமாயில்லை. என்றாலும் மத்திய சர்க்காருக்கு மாகாணங்கள் கட்டுப்பட்டவைகளா யிருந்தால் அப்பொழுது அதற்கு ஐக்கிய அல்லது சமஷ்டி (Federal) அரசாங்கம் என்கிற பெயர் அமைகிறது. இவ்வாறு மாகாணங்களும், சமஸ்தானங்களும் தனித்தனி (Unitary)யாகவும், மத்திய சர்க்காரில் (Central Government) சமஷ்டியாகவும் ஆளப்படுவதற்கு மாகாண சுயாட்சியுடன் கூடிய சமஷ்டித் திட்டம் (Provincial Autonomy with the Federal Legislatures) என்று கூறப்படுகிறது. ஆனால் சமஷ்டியாகவோ, தனியாகவோ மத்திய சர்க்காரில் பொறுப்பாட்சி பெறாதவரை பிரயோஜனமில்லை. பிரிட்டிஷ்காரர்களின் கையில் விசேஷ பாதுகாப்புகளும், வைஸ்ராயிடம் பொக்கிஷம், இராணுவம், அன்னியநாட்டுச் சம்மந்தம் ஆகிய ஜீவாதாரப் பிரச்னைகளும், எதேச்சாதிகாரமும் இருக்குமட்டும் இந்தியாவுக்கு எந்த விதமான சுயராஜ்யங் கிடைத்துவிட்டதாகவும் அர்த்தமில்லை. ஏனெனில் தங்களுக்குத் தாங்களே மன்னர்களாகப் பிரஜாதிபத்திய உரிமையின்மேல் சமஷ்டியாக ஆளப்படுகிற அமெரிக்கா (United States of America), ஸ்விட்ஜர்லாந்து, கானடா, ஆஸ்திரேலியா, ருஷியா முதலிய நாடுகளெங்கே, பிரிட்டிஷ் பிரபுத்துவத்தின் கீழ் சமஷ்டி இந்தியா எங்கே?

குடியேற்றநாட் டந்தஸ் தென்பது இந்தியா சம்மந்தப்பட்டமட்டில் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், எல்லைக்குட்பட்ட சில அதிகார வரம்புகளைச் சில குறிப்பிட்ட காலமட்டும் பிரிட்டிஷ்காரர்கள் நிர்வஹிக்கும் ஜனநாயக ஆட்சியாகும். இது ஏகமாகவோ சமஷ்டியாகவோ இருக்கலாம். என்றாலும் இங்கிலாந்துக்கு எந்த அதிகாரத்தையும் இந்திய ஜனங்களின் சம்மதியின் பேரிலும், அனுமதியின் பேரிலுமே அடையப் பாத்தியதை யுண்டு. அல்லாமல் பிரிட்டிஷ்காரர்கள் தாங்களாகவே ஜீவாதாரமான அதிகாரங்களை வைத்துக்கொள்ளுவது எந்த விதத்திலும், எந்த அரசாங்கத்திற்கும் பொருந்தாததாகும்.

சுயராஜ்யத்தைப்பற்றி வியாக்கியானஞ் செய்யவேண்டியதில்லை. ஜனங்களின் நன்மைக்காக ஜனங்களைக்கொண்டே எந்தவொரு அரசன் அல்லது அரசாங்கத்திற்குங் கட்டுப்படாமல் அரசாளுவது சுயராஜ்யம். அதைத்தான் இந்தியா வேண்டுகிறது.

இராஜரீகத்துக்கு முரண்படாமல், அரசியல் முறைப்படி அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்திற்குச் சர்க்கார் அல்லது கவர்ண்மெண்டு என்பது. அத்தகைய ஸ்தாபனம் ஏன் ஏற்படவேண்டும்? ஜனங்கள் ஒவ்வொருவரும் அல்லது ஒவ்வொரு குடும்பஸ்தரும் தனித்

தனியாகத்தானே அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு பிறத்தியார்பேரில் வெறுப்போ விரோதமோ செய்யாமல் வாழ்ந்துவிடக் கூடாதா? வாழலாம். ஆனால் ஜனங்கள் வெகு காலந்தொட்டு அரசாங்கத்தின் கீழ் வாழ்ந்து பழகியிருக்கிறார்களன்றிச் சுயேச்சையாக வாழக் கற்றதில்லை. ஆகவே சமூகப் பிராணியாகிய மனிதன் சச்சரவில் இறங்கி, தேசத்திலே கூச்சலையுங் குழப்பத்தையும் உண்டாக்கி, எளியாரை வலியார் அடக்கி யாளாமற் பார்த்துக்கொள்ளுவதற்காகவும், பிறநாட்டார், நாட்டு வேட்டையால் படையெடுத்தாற் றடுத்துத் தற்காப்பதற்காகவுமே அரசாங்கம் அவஸ்யமாகிறது. மற்றும் உள்நாட்டு வியவகாரங்களாகிய நீதி, நிர்வாகம், வியாபார முறை, தொழி லொழுங்கு, இராணுவ அமைப்பு, அன்னிய தேச சம்மந்தம் போன்ற காரியங்களை நேர்படுத்துவதற்காகவும் ஒரு தேசத்திற்குத் தலைவன் அல்லது பஞ்சாயத்துத் தேவைப்படுகிறது.

என்றாலும் அத்தகைய அதிகாரத்தை ஜனங்கள் சர்க்காருக்கோ, சர்வாதிகாரிக்கோ இச்சாபூர்வமாகவும், அவஸ்யார்த்தமாகவுந் தரவேண்டும். அந்த அதிகாரத்தை அரசாங்கத்தார் துஷ்பிரயோகஞ் செய்தபோது அவர்களைக் கண்டிக்கவும், ஜன உரிமையை ஸ்தாபிக்கவும் ஜனங்களுக்கு ஸ்வாதந்தர்யம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஜனநாயகம் என்கிற பெயர் பொருந்துமா? ஜன சுதந்திரந் தான் நிலைக்குமா?

பெயரிலே என்ன இருக்கிறது? தத்துவத்திலேதான் சர்வமும். மாகாண சுயாட்சியல்ல, குடியேற்ற நாட்டாட்சியல்ல, பூரண சுயராஜ்யந்தானுமல்ல, குடும்பக் குடியாட்சியாயிருந்தாலும் பரவாயில்லை ஜனங்களுக்கு ஜவாப்தாரியா யிருக்கவேண்டும்—ஜனங்களின் வாக்குரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய உரிமைகளில் தலையிடாமல் ஜன சம்மதியோடு இராஜரீகஞ் செய்யவேண்டும். அத்தகைய அரசாட்சியிலேதான் ஜனங்கள் சுபீக்ஷமாக வாழ முடியும்.

அரசாங்க மென்பது பிரஜைகளுக்குப் பாரமா யிருத்தல் கூடாது. நிர்வாகச் செலவில் வரிப் பணத்தைக் கொட்டித் தொலைக்காமல் ஜனங்களின் கல்விப் பயிற்சி, விவசாய முன்னேற்றம், கைத்தொழில் மேம்பாடு, நீர்ப்பாசனம், போக்கு வரத்து வசதி முதலிய ஆக்க வேலைகளிலும், அபிவிருத்தி வேலைகளிலுஞ் செலவுசெய்து நாட்டின் க்ஷேமத்தை உயர்த்திக், கூடுமானவரை சிக்கனமாகச் செலவு செய்யவேண்டும். சர்க்காரின் நிர்வாக இலாக்கா (Executive body) வானது ஜனப் பிரதிநிதிகளின் சபையான சட்டசபைக்கும், பிரதம நீதிமன்றத்திற்கும் (Supreme Court of Justice) கட்டுப்பட்டதாயிருத்தல் வேண்டும். நீதிமன்றம் சட்டசபைக்கோ, சர்க்கா

ஸ்ரீ அரவிந்தப் பெருந்தகையார்.

திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள்

க. தெய்வப் பெருமை.

சொற்கண்டார் சொல்லே கண்டார்!
சுடர்மணிச் சோதி மேனிப்
பொற்கண்டார் பொன்னே கண்டார்!
பொருள்கண்டார் பொருளே கண்டார்!
*நிற்கண்டார் தெய்வ சக்தி
நிறைவிளை யாடல் கண்டார்!
அற்புதங் கண்டார் நின்னி
னதிசயங் கண்டார் யாரே?

அமுதினைச் சுவை செய்தன்ன அழகினுக்கு அழகு செய்வார் யாரே? உலகம் பல அற்புதங்களைக் கண்டிருக்கிறது. வீரச் சிங்கங்கள், அமுதக் கம்பன், அருட் கவிகள், தெய்வத் தவராஜர், யோக சக்தி சித்தர்கள் இவ்வுலக ரங்கில் அவ்வப்போது மிளிர்ந்து, தமது ஆடலின் அருட் பயனை, வாடாக் கனியாக உலகிற் களித்துச் சென்றுளர். எத்தனையோ அரிய தெய்வ மனிதரை, பாரத தேவியின் புகழ்முடிபோ லுயர்ந்த இமயம் கண்டுள்ளது. ஆனாற் கடலினுங் கலைப்பெருக்கும், மலையி

ருக்கோ கட்டுப்படாததா யிருக்கவேண்டும். ஜன சமத்துவமும் ஜன சுதந்திரமும் எக் காரணத்தை முன்னிட்டும் பாதிக்கப்படலாகாது. சர்க்காரை அமைப்பதில் பிரதியொரு பிரஜைக்கும் எவ்விதமான தாரதம்மியமின்றிச் சமத்துவம் அளிக்கப்படவேண்டும். பட்டம் பதவிகளைக் கொண்டும், பணத்தையும், படிப்பையுங் கொண்டும், ஜாதி, சமய உயர்வு தாழ்வுகளைக் கொண்டும், மனித பாத்தியதை பறிமுதல் செய்யப்படாமல் சர்வ சாமான்யனும் சர்வாதிகாரியுஞ் சமானமாக மதிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் ஜனாதிபத்தியம் சர்வ மான்யம் அடையாது.

---

* உன்னைக் கண்டவர்.

னும் மாண்பும், கதிரினுஞ் சோதியும், காற்றினுஞ் சுயேச்சையும், நதியினும் அருட்பெருக்கும், நெருப்பினுந் தூய்மையும், கனிமரத்தினும் இனிய பயனும், தாயினுங் கருணையும், இணையற்ற சக்தியும், தனை ஒவ்வாத தவத் திறனும் ஒருங்கே உருவாகி ஒளிரும் ஒரு அற்புதத்தை இன்றுலகமே ஒரு மௌன மணிப் பெட்டகத்திற் காண்கிறது! தான் ஒருவனாகத், தன்னைச் சுற்றி யிருக்கும் அனைத்துந் தனது அருள் வல்லபத்தின் விரிவாகவே கொண்ட ஒரு சுத்த—முத்த—சமத்வ—யோகசக்தி—சித்தனைப் பாரத தேவியே இன்று அவதரிக்கப் பெற்றாள்.

சுமார் கால் நூற்றாண்டிற்கு முன் பூரண சுதந்திர வீரனாக விளங்கி, பாரத நாட்டின் வீரக் கனலைக் கொழுந்தெழத் தூண்டிய பாபு அரவிந்த கோஷை யறியார் உலகில் யாருமிலர். 26 ஆண்டுகளாகத் தனது ஆத்மசித்தி யோகத்திலே ஆழ்ந்து, தெய்வ சக்தியைத் தன்னுள்ளடைந்து தனது யோக சித்தியால் தானே தானாகி நின்று, தற்பரமுஞ் சிற்பரமும் ஒன்றி யிலங்குந் தெய்வ சித்தன், சக்தி நாதன், ஸ்ரீ அரவிந்தன், கலியுகக் கண்ணனை முற்றும் யாரே யறிவர்! அவருடைய கவிக் கற்கண்டை யுலகம் உண்டு பாராட்டியதுண்டு. அவருடைய நாட்டன்புக் கனலில், அடிமைக் குளிரால் வாடும் மக்கள் வீரச் சுடரேற்றியதுண்டு. அவருடைய அருவி பாயும் அருட் சொற்பொழிவைத் தெவிட்டத் தெவிட்டச் செவி விருந்துடன் மன விருந்தென அருந்தியோருண்டு. வந்தே மாதரம், தர்மா, கர்மயோகின் எனுந் தாள்களில் (News papers) அவருடைய பொன்னெழுத்துக்களைப் புலம்பெற நுகர்ந்தவருண்டு. மொழிக்கு மொழி வேத மொலிக்கும் ஆத்ம விருந்தான **ஆசியா** மாஸிகையின் (Monthly) தெய்வப் பொருளையுஞ் சிலர் அத்யாத்மப் பசிக்கு அருந்தியோருண்டு. ஆனால் அவருடைய அவதாரப் பெருமையையும், அதனால் உலகிற் கெய்தத் தகும் தெய்வத் திருப்பயனையும் உலகம் இனியே இனிதறியும். யோகத்தின் வான்முடியில் அரியணை வஹிக்குஞ் சுத்த முக்தரான ஸ்ரீ அரவிந்தர், வேதமும், உபநிடதமும், கீதையுமே திருவடிவு கொண்டு இன்றிலங்குகிறார்.

"முக்த புருஷன் தனக்கெனப் புகழிலான்; தன்னல வினையிலான்; தனக்கென வுடைமையு மில்லான். தெய்வ சக்தி தந்ததை யுகந்து, விருப்பு வெறுப்பற்றிருப்பவன் அவனே; வருவதில் மயங்கான்; சென்றதிற் கலங்கான்! பற்றுடன் எதனையும் பற்றுவோனல்லன்; செல்வதைச் செல்கெனக் காலச் சூராவளியில் விடுத்து, ஒன்றையுங் கருதாத உட் சுயேச்சையன்; தனது மனமுயிர்க் கெல்

லாந்தானே யரசன். இதயமும் ஜீவனும் புறப் பொருள்களிற் கட்டுப் படாது, ஆசை யெழுச்சியும், மோகச் சுழலுமின்றி” அகந்தையின் வடுவுமின்றி, தன் மூலமாகத் தெய்வமே தனது தனி யிச்சையை நடத்த நிலவும் பெரியோனே **சுத்த முக்தன்**.

நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

இத்தகைய **சக்தி மலை** இன்று என்ன செய்கிறது? தன்னைச் சுற்றும் எத்தனையோ இயக்கங்கள் கொந்தளிக்கையில், இவ் வியக்கங்களனைத்தையுந் தானே தனி நின்று வெல்லுந் தெய்வ ஆற்றல் பெற்றும் இந்த **சக்தி** ஏன் இப்படித் தனிமையின் பின்னே தணவிட்டு நிற்கிறது? பாரத தேவி ஏன் தனது சக்தி மைந்தனை இன்று யோகத் துரியத்தி லாழ்த்தியது? **நாடு** அவரைக் கூவி யழைக்கிறது! **நாட்டின் நிலைமை** அவரைத் தொழுது வேண்டுகிறது! **புவியன்னை** அவருடைய சுத்த சமரஸ சக்திக்குக் கடும் பசியெடுத்து முறையிடுகின்றாள். **கவி மடந்தை அழகும், அருளும்** பெய்தாற்றிய தனது கலை முடியை அவருக்கே சூட்டக் காத்திருக்கிறாள். புகழ் மடந்தையோ அவருடைய திருவடியிற் காதல் கொண்டு வாடுகிறாள். வீர சக்தியும், ஆத்ம சக்தியும் வானையும் உலகையும் வாடா மலர்ச் செண்டாக அவருடைய திருக்கரங்களில் வைக்கக் காத்திருக்கின்றனர்! செல்வியுங் கலையுங், காளியும், மகேஸ்வரியுந் தங்கள் சக்திகளுக்கும் அவரையே உறைவிட மாக்கினர்! இத்தகைய அற்புதத் **தெய்வ சித்தன்** இன்று ஏன் மோனத் தனிமையில் ஆழ்ந்திருக்க வேண்டும்! வெளியே வந்து பொது நலம் புரிந்தாலாகாதா என்பதே உலகெங்கும் வினவும் **புற வினா**? இதற்கு விடையொன்றே: **தெய்வ இச்சையின் திருவிளையாட்டிற்குக் காலம் உண்டென்பதே!** அந்தியிற் செவ்வொளி காந்தி மறைந்தான் கதிரவன்; உலகம் இருளில் வருந்துகின்றது! கூ கூவென் றலமறுகின்றது! “ஏ சூரியனே நீ எண்டிசைக் கதிர்! எல்லா மறிந்தவன்! அனைத்திற்கும் ஆவி போன்றவன்! நீயே உலகின் இன்பன்! ஏ சமரஸக் கதிரே! நாங்கள் இரவின் கொடுமையால் தளர்வதை யறியோயோ! எல்லாம் அறிந்தவனே! உடனே யேன் வந்து எம்மை யாட்கொள்ளாய்!” என்று உலகம் தேறுகின்றது. எனினும் **நிசியிற் பகலோன் வருவதுண்டா!** அவனுக்குத் தெய்வ இச்சை குறித்த காலம் உண்டு! **உஷா தேவி** அவனைக் காதலுடன் அழைக்கும் போதே அவன் ஆயிரங் கிரணங்களுடன் ஒளிர்வான்! அது போலவே உலகம் இப்போது நள்ளிரவின் கொடுமையில் வருந்துகின்றது. **புது யுக**மென்னும் வைகறை தனது பொற்றிரையை நீக்கும்போது அரவிந்தக் கதிர், அத்யாத்மக் கதிர், **பாரத சக்திக் கதிர்** உலகனைத்தையுந் தனது தெய்வச் சமரஸத்தில் ஒரு குல **நரநாராயணராக** இணைத்து விளங்கும். உலகக் கோயிலின் திருச்சந்நிதியில் இத் தெய்வக் கதிரையே சாதி, மத, வகுப்பு, தேச, வர்ணபேதமற்று ஆத்ம சக்தி வீரராக, தெய்வ சக்தி நாதனாக உலகு வணங்கு மென்று இன்று யானெழுதுவது மிகையாகத் தோன்றினும் நாளை யுலகு அதன் தகைமையைக் காட்டும். **ஒரு அற்புதத் திறமையாளன், முப்பது ஆண்டுகள் புரிந்த அரிய யோக சக்தியின் ஆற்றற் பெருக்கு, எத்தகைய வியன் பணிகளைப் புரியுமென்பதைச் சற்று ஆய்ந்தாலும் அவருடைய பெருமை புலப்படும்!**

“வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப்படும்”

ஸ்ரீ அரவிந்தரைக் காணுந்தோறும், அவருடைய ஆத்ம சக்தியைப் பருகுந்தோறும், **திருவருட் பிரகாசரான வள்ளலாரின் வாக்குகளையே** திருவுருவாக நான் காண்கின்றேன்! அப்படியே அவரைக் காண்பாருங் காண்பார்!

“நினைந்து நினைந் துணர்ந் துணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந் தன்பே
நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண்
ணீரதனா லுடம்பு
நனைந்து நனைந் “தருளமுதே! நன்னிதியே! ஞான
நடத்தரசே! என்னுரிமை நாயகனே” யென்று
வனைந்து வனைந் தேத்துது நான்
வம்மின் உலகியலீர்!
மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாங் கண்டீர்!
புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற்
புகுந்தருண மிதுவே!”

என்று எனது **ஆவி** உலகை உண்மை யன்புடன், ஆர்வுடன் அழைக்கின்றது! வள்ளலார் “**வருவோம்**” என்று மொழிந்து சென்ற “**சித்தீசுரர்**” இவரே யென எனது உள்ளம் உறுதி முழக்குகின்றது!

சாதியிலே மதங்களிலே, சமயநெறி களிலே,
சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே,
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்!
அலைந்தலைந்து வீணேநீ யழிதலழ காவே!

நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவர் **ஒருத்தர்** அவர்தாமே
வீதியிலே யருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே!

என்பதே எனது ஆவியின் பேரிகை!

அரவிந்தர் உலகை வெறுத்து **அநிர்வசநீயத்தில்** உறங்குகின்றாரா? அல்லது **ஆனந்தச் சோம்பலில்** அழுந்தித் தன்னல முக்தியை யடைந்தாரா! இல்லை இல்லை! அவர் உலகைப் பொய் யென்னும் **மாயாவாதி யன்று!** அவர் உயிர், இறை, உலகு மூன்றுந் தெய்வ மயம், ஆனந்த மயம் என்னுந் **தெய்வ லீலாவாதி!** அவர் அருளிய ஆரியாவில் "**தெய்வ வாழ்வு**" என்னுஞ் சிறந்த நூலில் உலகம் மாயையெனும் பொய்யைப் பொய்யெனக் காட்டி, உலகம் ஆண்டவனின் திருலீலை யரங்கம், உலகம் ஆனந்த மயம், தெய்வ மயம், **சர்வம் ப்ரஹ்ம மயம், வாஸுதேவம் ஹிதம் ஸர்வம்** என்னும் உண்மையை மெய்ப்பிக்கவும், மனிதன் சுகதுக்கம் போன்ற உலக வாழ்வைத் தாண்டித் **தெய்வ வாழ்வு** வாழும் வகையையும் விரிந்து, பரக்க, விளக்கிப் பொன் மணி வாசகம் விடுத்துள்ளார். அவர் பேசாத பெரிய மோனம் புகுந்து உலகம் எப்படியேனும் போகட்டும் என்று "**சும்மா**" இருக்கும் மதத்தைச் சேர்ந்தவ ரல்லர். அவரைப் போன்று ஒவ்வொரு விநாடியையும் சுருசுருப்பான நாளாக்கி வாழும் ஒரு **'வினையாளி, கர்ம யோகி** இதுகாறும் உலகி லுதித்ததில்லை. அவர் எடுத்த வினை விண்ணையும் மண்ணையும் ஆன்மாவில் இணைத்து மனிதனைத் தெய்வ வாழ்விற்கு உயர்த்தி, உலகை **நர தேவரின்** ஆலயமாக்கி, அதற் கேற்ற **விக்ஞான சக்தியைத்** தூல வாழ்விலுங் கொணர்ந்து தெய்வ வுடல், தெய்வ வுயிர், தெய்வ மனம், தெய்வ ஞானம், தெய்வ சச்சிதானந்தம் பொருந்திக் **கிறிஸ்து நாதர் சொன்ன வானரசை** (Kingdom of Heaven on Earth) ஒவ்வொருவர் உள்ளும் புறமுங் கண்டு மாந்தர் தெய்வ பரிபூரண வாழ்விற் பிறங்க வேண்டு மென்பதே: **அவர் யோகம் தன்னல யோகமல்ல;** அது **உலகளாவிய அண்ட பரிபூரண யோகம்.**

புத்த பகவானுக்கு மோட்ச வாயில் தனது தாளை நீக்கிற்று. ஆனால் கருணைப் பெருக்கான பகவான் கீழே உல குயிர்களின் இன்னலை நோக்கினார்! பேரிரக்கம் பூண்டார்! "இவ் வுலகில் இன்ப முறாது **இன்னும் ஒரு ஜீவ னிருக்குமேனும்** நான் இந்த மோட்சக் கதவின் நிலைப் படியையுந் தாண்டேன்" என்று சபதஞ் செய்தார். அது போலவே ஸ்ரீ அரவிந்தரின் யோக சித்தி அவருடைய தனி மோட்சத்திற்காக வன்று. அப்படித் தன்னல மோட்சத்தைக் கருதின் அவர் 20 ஆண்டுகளுக்கு முன்பே அதை, யடைந்து

"சும்மா" இருந்திருக்க முடியும். ஆன்ம சுதந்திரமும், அகண்ட சுதந்திரமும் (சுயராஜ்ய சாம்ராஜ்யச் செல்வம்) அடைந்து மக்கள் தேவராகி, ஆண்டவனுக்கே குடியாகி, நமனை யஞ்சா **அமுதவாழ்வு**டன், ஒரு குலமாக, எவ் வகை வேற்றுமை யின்றி, ஆண் பெண்கள் **சிவ சக்திகளாக இவ்வுலக சிற்சபையில்** நீடூழி வாழ வேண்டு மென்பதே அவருடைய யோக சக்தியின் நன் முயற்சி!

உலகில் தோன்றிய தெய்வ அவதார ரெல்லாங் கண்ட கனவு இதுவே! இதைச் சிலர் சொல்லாற் சொல்லினர், சிலர் எழுதினர், சிலர் குறித்தனர்! எத்தனையோ மத நூல்கள், வியாக்கியானங்கள், புராணங்கள், இதிகாசங்கள், மந்திர தந்திரங்கள், யோக சாதனங்கள், இதைக் குறித்தே பல வழியில் முயன்றன வெனினும் இதை ஆடம்பரமும், விளம்பரமும், மேடை, பத்திரிகை டமாரங்களு மின்றி, தெய்வ இச்சையைக் கொண்டு, உயர்ந்த பக்தியும், ஞானமும், யோக சித்தியுங் கூடிச், செயலிற் காட்டும் மஹா புருஷன் **ஸ்ரீ அரவிந்தரே!** அவரது யோகம் சாமான்யமான தல்ல. அது ஹட யோகம், ராஜ யோகம், பக்தி, ஞான, கர்ம, வேதாந்த, தாந்திரிக யோகப் பயன்களை யெல்லாந் தன்னுள் ளடக்கி எல்லை யற்று, மீதும் பரந்து விரிந்த சுத்த, முக்த, சமத்வ, சத்ய, சக்தி பரிபூரண சித்தி யோகம் என்பதை அறிவோர் அறிவர்! அவருடைய அகண்ட சித்திப் பெருமை மனிதனின் சிற் றறிவிற்கும், அவசர ஆத்திரத்திற்கும் எட்டியதல்ல. அது காலதேச வர்த்தமானங்களை வென்றது! மீண்டும், மீண்டும், இடை விடாது **தெய்வமே** தனது சக்தி, **இயற்கை யன்னையின்** மூலம் மனித சமுதாயத்தை மனோ மயத்தினின்று, விஞ்ஞான மயத்திற்கு உயர்த்தப் புரிவது; "**வாழ்வு மாயை! உலகு பொய்!** என்பதை அது அறவே அலட்சியஞ் செய்வது! **இறப்பிற்கும் பிறப்பிற்கும் அது அஞ்சாதது!**

ஸ்ரீ அரவிந்தரின் மணி வாசகத்தைக் கேளுங்கள்:—

"புத்தர்களைப் போல வாழ்வு துன்பம், அதை யொழிப்பதே சிறப்பு என்று 'நீ நினைப்பா யாகில்; அல்லது **மாயா வாதிகளைப்** போன்று வாழ்வையும் உலகையுந் தப்பி யோடுவதே பொருளென்றெண்ணுவாயாகில், என்னிடம் உனக்கு வேலை யில்லை. நான் **தாந்திரிகன் (லீலா மயன்).** உலகம் ஆனந்தத்திற் பிறந்து, ஆனந்தத்தில் உயிர்க்கிறது! **ஆனந்தம், சக்தி,** இவையே வாழ்வின் உண்மை! வானைப் புவியில் விளக்குவதே நமது வினை! **மனித வுலகின் எச்சிறிய மூலை முடுக்கிலுந் துன்பமும், தளர்வும் இல்லாது ஓட்ட வேண்டும்!** இவ் வுலகைப் படைத்த பிரம்மன் முட்டா ளல்ல, குடிகார னல்ல, தீக்கனவாளி யல்ல, ஏமாந்தவ னல்ல. அவன் பொய்யைப் படைக்க

வில்லை; உலகம் பொய் என்பதை நான் வேதத்திற் காணவில்லை. நான் **ஸ்ரீ கிருஷ்ணனின்** எண்ண முடையவன்! என் காரியம் தேவ காரியம்! சாத்வீக அகங்காரத்திலுங் கட்டுப்பட்ட தல்ல; நான் எதிலும் **ரஸக்ராஹி**! நான் ப்ரஹ்மன்! நான் அவன்! என்னைப் பாபம் தீண்ட முடியாது என்பது என் அனுபவம். எனது யோகம் தன்னல மோட்சத்திற் கல்ல; அது மனித ஜாதி யனைத்திற்கும் இயற்கையால் வகுக்கப்பட்ட அகண்ட யோகம்! அது தெய்வானந் தம்! கிறிஸ்து நாதரின் வானரசு! வேதம் மொழியும் சத்ய யுகத்தை இங்கு விளக்கும் முயற்சி யாகும்! ஆத்ம நித்ய முக்தன், கட்டும் காலமும் மனவிகாரம்! உலகின் தெய்வ லீலையை பரமாத்மாவே தனது சக்தியால் நடத்துகிறார்; அவன் இச்சை யின்றி அதைத் தப்ப எவருக்கும் ஒண்ணாது! இவ்வுலகில் தீமையென்ப தில்லை; நாம் வெறுக்கத்தக்க தெதுவு மில்லை. உலகம் ஆண்டவன் லீலை; **பாரத தேசத்தையே ஆண்டவன் தனது ஆடரங்காகக் கொண்டு (Arena) உலக லீலையை நடத்துவான்**; பாரத நாடே தெய்வ சக்திக் கலன்! முதலில் ஆண்டவன் தனது லீலையின் தொடக்கத்தில் பாரத நாட்டை உலகின் முன் தாழ்த்தி, துர்ப்பலப் படுத்தி அதற்கு **ஓய்வு கொடுத்துப்** பிறகு அதனை உலகொளிபிறங்க உயர்த்தி, எழில் பரப்பச் செய்கிறான்! (விளக்கைத் தூண்டுவதற்குத் திரியைச் சற்று இறக்கிப் பின் உயர்த்துவது போன்று)! தெய்வ சக்தியின் **லீலா வட்டம்** சத்ய யுகத்தி னின்று கலி யுகத்திற்கு வந்துவிட்டது! மீண்டுங் கலியி னின்று சத்ய யுகத்திற்கு முன்னேறி வளர்ந்து செல்லுகின்றது! இனி மனிதனின் தத்துவங்க ளனைத்தையுங் கைக் கொண்டு, மனிதத் தன்மையினின்று தெய்வத் தன்மைக்கு உயர்த்தி ஒளியும், களிப்பும், சக்தியும், சுதந்திரமும், உண்மையும், தூய்மையும், சமரஸமும் உள்ளும் புறமும் நிலவச் செய்தலே நமது வேலை. கடவுளின் தூய கருவியாக உங்களை முழுதும் அர்ப்பணியுங்கள்! களிப்புந் துணிவுங் கொள்ளுங்கள்! மனமே படகு! உறுதியே துடுப்பு! ஆத்ம ஸமர்ப்பணமே திசைக் கருவி! சக்தியே அதை முன் செலுத்துந் திறன்! ஆண்டவனே தலைவன்! அகந்தை யறுமின்! அடைக்கலம் புகுமின்!! தெய்வ சக்தி மைந்தனுக வாழ்மின்!!!" என்ற மங்கல மொழியைக் கர்ஜித்து அதைத் தன் அருள் வல்லபத்தால், யோக சக்தியால், ஆத்ம பலத்தால் செய்கையிற் காட்டி உலகில் ஆத்ம சக்தி நிலையத்தை, தெய்வ சங்கத்தை நிலை நிறுத்துவதே ஸ்ரீ அரவிந்தரின் **மலையினும் மாண்புடை முயற்சி!** ராஜஸ தாமஸ அகந்தையில், ஆகாய வானம் போலப் பறந்து விழும், தற்கால இயக்கங்களுக்கும் அவருடைய தெய்வப் பெருமைக்கும் எவ்வளவு வித்தியாஸம் என்பதை நேயர் இதனின் றறியலாம்! அரவிந்தர் கண், மனம், செவிகளால் அறியக் கூடாத தெய்வப் புரு

ஷோத்தமர்! அவரை ஆன்ம ஞானத்தினாலேயே அறியலாம். அவரைப் பெரும் புலவரென்றும், ஆவேச மொழியாள ரென்றும், இணையற்ற நாட்டு வீரரென்றுமே இதுகாறும் உலகு அறியும். இச் சிறப்புக ளெல்லாம் ஸ்ரீ அரவிந்தப் பெருமானின் **நிழலே** யாகும்!

1906-ம் ஆண்டுகூட-அவருடைய ஆத்ம சக்தி விளக்கம் குடத்துள் விளக்காக மிளிர்ந்த ஞான்றும்-அவரை மாஜினி போன்ற தேசாபிமானி யென்றே பெசண்டம்மையார் உரை யாடிய ஞான்றும், நமது **ரவீந்திர நாதரின் கவிப் புலமை** அவரை எவ்வாறு வணங்கியது என்பதை வங்க மொழியி னின்று மொழி பெயர்த்து ஈண்டு தமிழ் விருந் தூட்டுகின்றேன்! வங்கத்தில் இக் கவியை யான் சுமார் 20 தடவை படித்தும் இன்னும் இன்னும் படிக்கப் படிக்கத் தேனூறும் படி அவ்வளவு இன்பமாக ரவீந்திரக் கவியின் வாக்கு அரவிந்தரைத் துதிக்கின்றது. அது நீண்ட கவி யாதலின், அதன் சிற்சில பகுதிகளையே ஈண்டு தருகிறேன்:—

அரவிந்த நமஸ்காரம்.

அரவிந்தன் ஏலுக ரவீந்திரன் வணக்கம்!
திருப்பெரு நண்பனே! தேச பந்துவே!
சுதேச ஆன்மாவின் சுதந்திர வாணியே!
மதித்திலை சுயநல மானமுந் தானமும்
பொருளும் போகமும் புல்லியல் முகமும்!
இரவோடு கொண்டுன் கரத்தினை விடுத்திலை!

ஸ்ரீ அரவிந்தர் பிறர்க்கென வாழவே பிறந்தார். அவருடைய அபாரக் கல்வியும், புலமையும் அவரை லௌகீக வாழ்வின் சிகரத்தில் ஏற்றி வைத்திருக்கும். எனினும் அனைத்தையும் உதறித் தள்ளி, மனிதரின் புனிதப் பணிக்கே செல்வத் துறவறம் பூண்டார். அவர் ஒருவரிடம் கை நீட்டி எதுவுங் கேட்டதில்லை; அவருடைய அருள் வல்லபத்தாலேயே அனைத்தும் நிகழ்கின்றது. இதையே கவி ஈண்டு குறிக்கின்றார்.

வரையறு பூரணம் வாய்த்திட வென்றும்
இருக்குனை விழித்தே— நரதேவன் அதற்கே,
கடுந்தவம் ஆழ்ந்தனம் கங்குலும் பகலும்!

அப்பூரணத்திற்கே,

குடியிசைப் புலவன் இசைக்குனன் அருட்கவி!
மாவீரர் செய்குனர் நோவுறு யாத்திரை!

உனதருமை மொழியால்,

சாவச்ச மொழிந்தது; தன்னலச் சுகமும்
வெட்கிச் சிரத்தை விளங்கவ் வனல்முன்
உட்கிக் குனித்ததே— உனக்கிவ் வுயர்வரம்
பூரண வரசோடும் பூரண னீந்தான்!

நீயே ஆண்டவனிடம்,

எண்ணரும் உறுதியோ டன்னை நாட்டின்
அடங்கரும் அவாவை யளியெனக் கேட்பாய்!
கடவுளுன் முறைக்குக் காதுசாய்த் தானே!
அதுவோ முழங்குவ தவன் செயசங்கம்!
அதுவோ வெவ்விய லன்புடன் கவலையும்
வடமீன் எனநாட் டடரிருட் குடையும்
கொடுங்கனல் விளக்கைக் கொடுத்தனன் வலக்கரம்!
வெற்றியாகுக! வெற்றியுனக்கே!

யார் கண் வடிப்போன்?
யாரின் றஞ் சுவோன்?

யார்அக் கயவன்— ஆண்மை யற்றவன்—
தன்னலக் காப்பிற் குண்மையைப் பிழைப்போன்!
உன்றுயர் கண்டுமெய் யுறுதியைப் பூணான்!

துடைத்திடு, விழியே,
துடைத்திடாய் விழிநீர்!

அருட் கவி ரவீந்திரர், ஸ்ரீ அரவிந்தரின் பெருந் தியாகத்தையும் நாட்டிற்காக அவர் கொண்ட வீரத் துறவையும் எண்ணிக் கண்ணீ ருகுக்கிறார்! அவரைக் கவி ரவீந்திரர் உலகிற்கு எவ்விதம் அறிமுகப் படுத்துகிறார்! என்பதை நோக்குவாம்.

II வேறு.

துலங்கு தெய்வச் சுடருடன் போந்தனன்
உலகிற் கிந்த வுருத்திரத் தூதனே!
யார் அரசன் அவனை பொறுப்பவன்
காரிருட் சிறைக் கட்டுக ளாலரோ?
பந்தச் சங்கிலி பாதந் தழுவியே,
*வந்தனை செயுமே! *சிறை வாவெனும்*

** சிறைகூட அவரை எதிர்கொண்டழைத்துச் சிறப்புடன் ஏற்கும். அவரை இன்னலுறுத்தாது என்பது பொருள்.*

தெய்வச் சூரியனைச் சின **ராகு***தன்*
கைவி ரித்துக் கவர்ந்திடிற் சாயையாய்
விண்டற் றுகும்! விநாடியிற் றேய்ந்திடும்!
தண்டனை! தண்டனை! *எவனுக் கரோ?*
அஞ்சித் தண்டனை யாவன்றன் பொய்மதில்
வஞ்ச மண்டிலந் தாண்டி வராதவன்,
அச்ச மற்ற சுயேச்சை யணிந்தெவன்
மெச்சி மெய்யினை மேவத் துணிந்திடான்
நேர் முகத்தில் அநீதி அநீதியென்
றார்சொ லான்றினமும் அந்தப் பேடியே,
ஆண்மை யாகிடும் ஆண்டவ னீகையை
பேணரும் உரிமை தனைப் பேர்நகை
*அச்சத்தால் *அவை யின்முன் மறுத்திடும்*
துச்சன் துர்க்கதி யிற்பெருமை கொள்வோன்,
தாயின் கேட்டில் தாகு புரிகுவோன்
தாயு திரத் தனத்திற் கொழுப்பவன்!
கொற்றவன் சிறை யற்றுமக் கோழையே
நித்தி யச்சிறை நீடடைந் துட்குவான்;
தண்டனை! தண்டனை! *எவனுக்கரோ?*

கவி ரவீந்திரர், ஸ்ரீ அரவிந்தர் அக் காலத்தில் அஹிம்சையும் ப்புமுள்ள வீரப் பணி புரியுங்கால் அவருடைய வீர வெழிலைப் ழ்ந்து வணங்குகிறார்?

(வேறு.)

பந்த துக்கம் இடர்இகழ்வு சுற்றுமுறப்
பார்த்தனன் உனது மூர்த்தியை!
சிந்தை யின்பமுறப் பந்தமற்ற திருத்
தீர்த்த யாத்திரைக் கீர்த்தனம்!

[வங்காளத்தில் சைதன்யரால் ஏற்பட்ட **யாத்திரைச் சங் கீர்த்தனம்** *மிகவும் புகழ் பெற்றது. அதிற் சுயேச்சையாக அன்பர் கடவுட் பாட்டுகளைப் பாடி யாடி, சம்ஸார பந்தங்களை மறந்து, தெய்வச் சுதந்திரத்துடன் செல்வது போலவே, நினது வாழ்வும் சுற்றுமுள்ள துயர்களைக் கருதாது, தனது பணியில் முந்திச் செல்லுகிறது என்று இவ்விடம் கூறுகின் றார்.]*

** தனது உரிமையை உலகின் முன் தண்டனைக் கஞ்சி நிலை நிறுத் தாது எவன் காந்துறைகின்றானோ அவனே கைதி என்பது பொருள்.*

பொன்றி லான்மவா னந்த விச்சையுறு
  பூரணம் நிறையு மின்பமே
யுண்ட தென்செவி யுதார வீரவுல்
  லாஸ கம்பீர வாணியே!

ரவீந்திரர் ஸ்ரீ அரவிந்தரின் சொற் பெருக்கையும், பொருளமுதையும் பலவாறு தேர்ந்த கவிச் சித்திரத்தால் வர்ணிப்பது இணையற்ற புலமையாகும். கேண்மோ!

பாரதத் திலகு வீணை—வாணி யருட்
  பார்வை நாட்டினாள் உன் முகம்!
*வாரி மீட்டு ஜங்காரத் தில்லை துயர்
  வறுமை யச்ச மவ மானமே!

பாரத சக்தியே, பாரத வீணா பாணியே அவர் வாக்கினின்று பேசுகிறாள். அவருடைய வாக்கில் என்றுந் தெய்வ ஊற்றையே துயரறப் பருகத் தக்கது! அதில் அச்சத்தின் மச்சமில்லை என்று குறிக்கிறார்!

ஸ்ரீ அரவிந்தரின் திருவாக்கிற்குக் கவிப் புலவர் சில வுதாரணங்கள் தருவது பார்மோ!

வெம்புயற் கடலின் விம்மு கர்ச்சனையும்,
  வெறிநடம் புரியு மருவிதன்
கண்ணிலா விரைவிற் கற் றகர்ப்பதுவுஞ்
  $கந்தரத்தை யிடி யார்த்துமே,
தடதடென்று கம் பீர வீரமாய்த்
  தட்டியே விழிப் பூட்டிடும்,
இடைமுழக்கில், இர வீந்த்ரன் அஞ்சலியை
  யேற்றருள்வை யரவிந்தனே!

இதுகாறும் ஸ்ரீ அரவிந்தரின் தெய்வ வீரத்தையும், வாக்கையும், அது மக்களைக் கர்ச்சித்து எழுப்பிய வேகத்தையும் வர்ணித்தார். இனி வருஞ் சில மொழிகளிலேயே உலகிற்கு அரிய தீர்க்கதரிசனத்தைக் கவி விளக்குகிறார். கவி, கடவுளைத் தொழுகிறார். அது ஸ்ரீ அரவிந்தருக்கே முற்றும் பொருந்திய சிறப்பாயிற் றென்பதற்கு அன்று மொழிந்த கவி வாக்கிற்கு இன்று சாட்சியாக ஸ்ரீ அரவிந்தருடைய தெய்வ சக்தி வடிவு நிலவுகின்றது! என்னை?

* வீணை. $ மேகம்.

(வேறு.)

உலகங்களைப் புதிதாகவே
  யூழிக்கன னின்றே,
யளவற்றதன் றிரு லீலையால்,
  ஆக்கும் இறை யெவனோ,
மாய்வைத் தவிர்த் தமுதீபவன்
  வறுமைதனிற் செல்வம்,
யாவன் சிரி முகத்தோடு தன்
  னன்பர் தமை யடர்கான்
வெங்காரிருட் பகைவர் முனை,
  வெறுங்கையுடன் அனுப்பும்
பொங்குந் திரு முயற்சிக் கருட்
  புதுச் சித்திகட் கதிபன்.

இவ்விடத்தில் கவி, ஸ்ரீ அரவிந்தர் ஆத்ம சித்தி பெற்றுத் தனது யோக சித்தியால் புது வுலகமாக்கி உலகிற் சாவை யொழித்து, அமர வாழ்வை யீந்து, தீது, வறுமை நீக்கி, மாந்தர் திருவாகி, மாந்தரின் தெய்வ முன்னேற்றத்திற்குத் தடை செய்யும் வீரியப் பகை வன்மைகளை வெல்வதற்கு அப் பகைவர் உறையும் மடமை, கொடுமை, அகந்தை யிருட் காட்டிற்குந் தனது **சித்திபெற்ற சாதகர்களைத்** தெய்வ சக்தியே துணையாய் ஆயுதமின்றிப், புன்சிரிப்புடன் வெற்றித் துணிவுடன் அனுப்பத் தன் தெய்வ நோக்கத்தில் வெற்றி பெற்றுப் புதிய அற்புதங்களை நடத்தப் போகும் தீர்க்கதரிசனங் கூறப்பட்டுள்ளது!

முடிவில்,

பலநாவுகள் பலகாப்பியம்
  பலவாய்த்துணிந் துரைக்கும்
அளவற்ற வனந்தன், அவன்
  அருளைத் தினம் பணிவாம்!

என்று கம்பீரமாகப் பாடி, மீண்டும் ஸ்ரீ அரவிந்தரின் தெய்வ சக்தி யுலகில் மாந்தர் அச்சமும் இன்னலுஞ் சாவுமின்றி யுலாவும் வீரத்தையும் அறை கூறி முடிக்கிறார்.

இல்லை துன்பம்! இல்லை வீண்மை!
  யில்லை யில்லை யச்சமே!
இல்லை வேந்தன்; சாயல்! வேந்(து)
  (இ)டர்செய் யின்ன லேதடா!
கருக்கு சாவு மேதடா
  கயவனே தலைநிமிர்!

தமிழரின் தற்கால நிலை.

ஆரியூர் திரு. வ. பதுமநாப பிள்ளை அவர்கள்.

நொண்டிச் சிந்து.

நெஞ்சு பொறுக்குதிலையே—தமிழர்
நிலை யின்றிங் கிருப்பதை நினைத்துவிட்டால்
பஞ்சைகள் கோழைகளோ—இன்றிப்
பைந்தமிழ் நாட்டினில் மலிவதந்தோ?
வஞ்சனை சூழ்ச்சிகளும்—பல
வகைப்பட்ட தந்திர மோசங்களும்
கொஞ்சமோ இருப்பனவே!—அந்தோ!
கொடுமைகள் இவை என்றுங் குறைந்திடுமோ?—(நெஞ்சு) 1.

வீரர்கள் பேரறிஞர்—பல
மெய்யன்பர் நிலவிய நாட்டினிலே
ஈரமில் மனத்தினரும்—அடிமை
இழி தொழில்களை நாடி அலைபவரும்
கோர உயிர்க்கொலையில்—நெஞ்சங்
கொஞ்சமும் அஞ்சாத கொடியரும்
பாரமாய்ப் பூமிக்கே—வாழும்
பான்மையைத் தாய் எண்ணிக் குமுறுகிறாள்!—(நெஞ்சு) 2.

இருக்கின்றேன்! இருக்கிறாய்!
இருக்கு தென்று முண்மையே!

நான் தெய்வம் இருக்கிறேன்! என் மயமான நீ என்று முள்ளாய்! நீ யடைய வேண்டிய வுண்மை யென்றுமுள்ளது! சத்ய-தர்ம ராஜ்யம் உனக்குள்ளும் புறமுமுள்ளது! அஞ்சாதே! கோழை யாகாதே! உனக்குச் சாவில்லை! நீ ஆன்மா! நித்தியன்! உடற் சட்டையின் விகாரங்களைக் கடந்த சாசுவதன்! நீயே உனக்கு மன்னன்! எதனாலும் உனக்கு இன்னலில்லை! உன் வாழ்வு வீணில்லை! தலைநிமிர்! என்று ஸ்ரீ அரவிந்தரே மனித உலகை இக் கவியின் மூலம் கூவுகிறார்!

என்னப்பன் என்னிறைவன் ஏந்தல் அரவிந்தன்
பொன்னடிக்கே யெல்லாம் புகழ்!

ஒரு பரம்பொரு ளதுவே—பல
உருவு கொண்டருள்வதைக் கருத்திருத்தார்;
தருக்கங்கள் பல புரிவார்—உண்மைச்
சமரஸ நெறியினைச் சிறிதறியார்;
பெருகு பல் வாதங்கள்—செய்து
பெரும் பகையொடு சென்று வழக்கிடுவார்;
அருள் நெறி மறந்தாரே!—பெரிதும்
அலை மனம் உடையவர் நிலைமை என்னே!—(நெஞ்சு) 3.

கோத்திரம் உயர் வென்பார்;—'இல்லை;
குணமதே உயர்வெனக்' கூறிடிலோ,
ஆத்திரம் மிகுந்திடுவார்;—'பிறவி
அவரவர் விதிப்படிக் கிடைப்பதனால்,
சூத்திரர் பஞ்சமர்கள்—என்றுந்
தூய்மையை அடைந்திடார்' எனப் பகர்வார்;
'சாத்திர நெறி மீறில்—தெய்வத்
தண்டனைகள் பல விதிக்கும்' என்பார்.—(நெஞ்சு) 4.

சைவரும் வைணவருந்—தத்தம்
சமயத்தைச் சிறப்பிக்க முயல்பவர் போல்,
வைவர் பல் இழி மொழியால்;—இந்து
மதத்தினர் இருவரும் என நினையார்;
உய்வு செய் நெறி யனைத்தும்—இறைவன்
ஒருவனையே சொலும் உண்மை தெளியார்;
பொய் சொலக் கொஞ்சமும் அஞ்சார்—சமயப்
போரினில் மகிழ்வொடு தலைப்படுவார்.—(நெஞ்சு) 5.

வஞ்சக வலையினிலே—பிறரை
மாட்டுவ தெவ்விதம் என நினைப்பார்;
கொஞ்சம் மயங்கிடிலோ—வஞ்சக்
கொடுமைகள் பல செயத் துணிந்திடுவார்;
தஞ்ச மெனக் கருதித்—தம்மைச்
சார்ந்தவர் தங்களைக் கைவிடுவார்;
வெஞ்சினங் கொண்டென்றும்—பிறர்மேல்
வெடு வெடெனப் பலர் விழுந்திடுவார்.—(நெஞ்சு) 6.

கழனியில் இருந்து பயிர்த்—தொழிலிற்
காலை முதல் மாலை வரை உழைத்தாலும்—
மழையினில் நனைந்தாலும்—மிக
வாட்டுங் கொடும் வெய்யிலிலே தவித்தாலும்

உழவு செய் எளியவர் மேல்—என்றும்
ஓதும் எசமானருக்குக் கருணை இல்லை!
பழகிய மாடுகள் போல்—நெஞ்சிற்
பாவித்(து) அவர் எளியரை வருத்துகிறார்!—(நெஞ்சு) 7.

“பறையனும் படிப்பதுவோ?—‘கொடிய
பாவப் பயன் அக்குலத்தில் பிறப்பதுவாம்;
அறை அவன் நிழல் பட்டால்—நம்மை
அப்பொழுதே ஒட்டிக்கொண்டு விடுந் தீட்டு;
இறைவனார் உறை கோயில்—அருகில்
ஈனன் அவன் வந்துவிடில் தோஷமாம்” என்பார்
முறைகொலோ இந்த மொழிகள்!—**எளியர்**
முறையீட்டை ஆண்டவனார் கேட்பதிலையோ?—(நெஞ்சு) 8.

சாதிகள் நான்கல்லால்—ஐந்தாம்
சாதியையும் ஈசன் முன்பு படைத்தாரோ?
வேதிய ராயினுமே—இழிந்த
வினைகளைப் புரிபவ ராயினுமே
ஓதவன் குணங் கண்டே—அவனை
உண்மையில் மதித்திட வேண்டுமன்றோ?
நீதியில் பாரபட்சம்—புரிவோர்
நிமலன் செய் தண்டனை பெறுவரன்றோ!—(நெஞ்சு) 9.

கீழ்க் குலத்தின ரென்றே—சிலரைக்
கேடு செய் வறுமையொ(டு) அறியாமை
வாழ்க்கையிற் புக விடுத்தே—பல
வகைப்பட்ட இழி தொழிற் படுத்திவிட்டே
‘ஊழ்வினை அவர் துன்பம்’—என்றே
ஒதுக்குதல் அறிவுடைச் செயல்தானோ?
தாழ்த்தப்பட் டவர் தம்மை—உயர்த்தல்
சமரச சன்மார்க்கப் பணியலவோ?—(நெஞ்சு) 10.

வறிஞர்களிடம் இரங்கின்—தெய்வம்
மகிழ்வொடு திருவருள் புரியுமன்றோ?
சிறு தொழிற் புரிவோரை—இனித்
திருத்தி நல் வழியினிற் புகுத்துவது
அறிஞர் தங் கடனலவோ?—அன்பை
அகங் கொளின் வேற்றுமை விளைந்திடுமோ?
குறுகிய கொள்கைகள் தாம்—மறந்து
கோதிலாச் சமரசம் பெருகாதோ?—(நெஞ்சு) 11.

ஸ்ரீமுக சாதவாகனன் தண்ட யாத்திரை.

திரு. சி. கு நாராயணசாமி முதலியார் அவர்கள்.

இன்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், நமது பாரத தேசத்தில் ஒரு முறை மக்கள் ஜாதி வேற்றுமை யற்று ஒற்றுமைப் பட்டிருந்தது. கேவலம் வம்ஸ பாரம்பரியத்தினால் ஞான, பௌருஷ, பாக்கிய, சம்பத்துக்கள், ஒரு கிளையினரை ஆசிரயித்திரா தன்றோ! அங்ஙனம் ஆசிரயித் திருப்பினும், அவை வீரமுடையனவாக யிருப்பதற்கில்லை. நூதன பத்ததிகளில் **சாதவாகனனது ‘தண்ட யாத்திரை’** நவீன மார்க்கங்களில் நன்மை தரத் தக்கதா யிருந்தது. ஸ்ரீமுகனது நன்மையான யத்தனத்தால், பிராமண—க்ஷத்திரிய—வைசியர்களும், மற்றுமுள்ள ஜாதியார்களும், அந் நன்மையை விருத்தி செய்துகொள்வதிற் குறிக் கொள்ளாமல், பண்டைப் பழக்கத்தைப் பின்பற்றியே தமது சமுதாய கௌரவத்தை நிலைநிறுத்த நினைத்தார்கள். அத்தகைய மேன்மை, தமது தகுதியினால் உண்டாகும்போது, வஞ்சனையின் அநுகூலத்தால் அதனை நிலை நாட்டவும் முயன்றனர். இது வரையும் பூர்வ கர்மத்தினால் மேற் காட்டிய சமுதாய கௌரவமின்றி வாழ்ந்த அவர்கள், நீச வர்க்கத்தாருடைய அநுபவத்தினால் உத்தம ஜாதியிற் சேர்வதற்கு நற் கருமத்தில் ஈடுபட்டனர். **பிராமண—க்ஷத்திரிய—வைஸ்ய** வருணங்கள் என்பது. தமது மிகுதியான முயற்சியினால், தாழ்ந்த வருணத்தார் உயர்ந்த வருணத்தாரை ஆக்கிரமிக்கத் தொடங்கி

தண்டமிழ்த் தாய் பெரிதும்—சிந்தை
தயங்குகிறாள்; மிக மயங்குகிறாள்!
சண்டைகள் குழப்பங்கள்—விளைக்குந்
தமிழர் தந் தாய் படுந் துயர் நினையார்!
கண்டிலர் ஒற்றுமையை!—அந்தோ!
கடைப்பட்ட தொழில்களில் தலைப்படுவார்!
பண்டையச் சிறப்பவர்க்கு—இனிப்
பகவனார் அளித்திட நினைப்பாரோ?—(நெஞ்சு) 12.

னார்கள். இச் சமுதாயப் போராட்டம் எத் தேசத்தில் இல்லையோ, அத் தேசம் ஜீவனற்றது. இத் தொந்திரவு நாட்டுக்குக் கெடுதலான தென்றுஞ் சிலர் கூறுவர். ஆனால், இது இல்லாத ஜன சமுதாயம், பிரவாகமற்ற நதியின் நீரைப்போல் துர்க்கந்த நிறைவுடைய தாய்க் கெடுதலை யுண்டாக்கும். இங்ஙனஞ் ஜாதிகள் ஒன்று சேர்ந்த பொழுது, நமது ஆந்திர நாயகனான **"ஸ்ரீமுக சாதவாகனன்"** ஜாதிகளுக்குப் புனர் ஜீவனைத் தருவதற்குத் தனது **திக் விஜயத்தைத்** தொடங்கினான்.

தலை நகரான **"தான்ய கடகம்"** தன தான்யங்களினால் உயர்வு பெற்றிருந்தது. ஸ்ரீமுகன் பாரத தேச தர்ம சம்பத்தில் அபிவிருத்திகளைச் செய்வதற்குத் தனது கொடியை உயர்த்தி நிறுத்தினான். ஜாதி மதங்களைக் குறுகிய புத்தியுடன் நோக்காமல், விசாலமான அறிவுடன் நோக்குகின்றவர்கள் இம் மணிக் கொடியின் கீழ் ஒன்று சேர வேண்டுமென்று அவன் விளம்பரப்படுத்தினான். தேசோத்தாரணத்திற்காகத் தொண்டு செய்கின்றவர்கள், தொண்டு செய்ய வேண்டும்; பொருள் கொடுக்கின்றவர்கள், பொருள் கொடுக்க வேண்டும்; உயிரைத் தருகின்றவர்கள், உயிரைத் தரவேண்டும்; அறிவையும் உதவியையும் உதவக் கூடியவர்கள், அவற்றை உதவ வேண்டும் என்றும், அங்ஙனம் உதவி செய்தால், ஜாதி பேதத்தை மீண்டும் நிலை நாட்டுகிறே னென்றும்; நாட்டில் முன்னர் நிலையாகயிருந்த வருண பேதங்களில் விருப்ப முடையவர்கள் இவ் வொற்றுமைக் கொடியின் கீழ் ஒன்ற வாருங்க ளென்றும், இங்ஙனஞ் சேருகின்றவர்கட்கு விருந்து வகைகளில் வேற்றுமை யின்மையும், ஐக்கிய விவாகங்களில் தம்பதிகளுள் ஒற்றுமையும் உண்டாவதன்றி வேறு விவாதங்க ளில்லை யென்றும் பறை அறைவித்தான். இங்ஙனம் பறை அறைவித்த பின், அவன் தனது யாத்திரையை வேறிடங்களுக்குச் செலுத்தினன். சிறிது நாட்களுக்குள் ஆங்காங்குள்ளவர்கள் மிகுதியாகக் கூடினார்கள். சிறு உப நதிகள் சேர்ந்து ஒரு மகா நதி யாவதுபோல், அவனது நீதியைக் கேட்ட உப சமூகங்களுங் கூடிப் பிரதான சமூகத்தை விருத்தி செய்யத் தொடங்கினார்கள். இம் மகா ஜன வேகம், எந்தத் தேசத்தைத் தாக்கி யாது செய்யக்கூடுமோ என்று யாவரும் மிகவும் அக்கரையாகக் கவனித்துக்கொண் டிருந்தார்கள்.

நாடுகளுக் கெல்லாந் தலைமை நாடாகப் பல் வகைச் சிறப்புக்களுடன் விளங்கியது **மகத நாடு.** இது—புராதன காலந்தொட்டு மேலான பிரசித்தி பெற்றிருந்தது. மகா நதிகளுக் கெல்லாம் நாயகனாய் விளங்கிய இம் மகத தேசம் ஒரு காலத்தில், மகா வீரனான **"ஜராசந்தன்"** இருபத்தொரு முறை, துவாரகை வாசனான

ஸ்ரீ கிருஷ்ணன் மீது போர் தொடுக்கும் பெருமை பெற்றிருந்தது. அதன் பின்னர் **சந்திரகுப்த, அசோக சக்கிரவர்த்திகளின்** அரசாட்சியின் கீழ் மகா வைபவத்துடன் இவ் விராஜ்யம் ஒப்பற்ற கீர்த்தியுடன் உயர்ந்து சிறந்திருந்தது. சந்திரகுப்தர்கள் மௌரியர்களான பின், **"சுங்க விமிச"**த்திற் புகழ் பெருகித் திகழ்ந்த **"புஷ்யமித்திரன்,"** பிராமண மதத்தை விட்டு நீங்காமல், உற்சாகச் சிந்தையில் அசுவமேத யாகங்கள் பல செய்து தனக்குக் கீர்த்தியையும், மகத நாட்டுக்குப் பெருமையையுஞ் சம்பாதித்தான். இத்தகைய நன் முயற்சியினால், இவனும், இவனது வமிசத்தினர்களும் பார்ப்பனப் பரம்பரையின ராயினர். வர்த்தகர்கள் பொருளீட்டுதலினால் வைசியர்க ளாயினர். உடல் வலியுள்ளவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வாளைக் கைக்கொண்டதினால் க்ஷத்திரியர்க ளானார்கள். தக்ஷாத்திரனால் பிரஜைகளுக்குத் துன்பம் வராமலிருப்பதற்கு அறிவைச் சம்பாதிப்பதற்காக அம் முயற்சியில் மிகுதியான கவனஞ் செலுத்தப்பட்டதனால் அவர்கள் அந்தணர்க ளானார்கள். இதனை அவர்கள், அந்தர்ணர்க ளாயின பின்னர் அறவே மறந்தும்; தாம் தாழ்ந்த நிலையினின்று மேலான நிலைக்கு உயர்ந்ததை ஊன்றி யுணர்ந்தாலும், தாம் சுயமாகவே சொர்க்கத்தினின்றும் இறங்கியவர்க ளென்று மமதை கொண்டு, அறிவு திருந்தாதவர்களுடைய நலன்களையும் நாடாமல், பகைமை கொண்டு அவர்களுக்கு இடையூறுகள் இயற்றியும், தேசாபி விருத்தியில் அசட்டையா யிருந்தும், சிலரைக் கேவலமாக மதித்துத் துன்புறுத்தியும் வந்தார்கள். இக் குற்றங்களை அப்பொழுது மகத நாட்டுக்கு அரசர்களா யிருந்த சிரேஷ்டர்களைப் பழிக்குள்ளாக்கின. அவர்களில் முதன்மை யானவன் **"சுசர்மன்"** எனப் பெயரிய பேரரசன்.

இச் சக்கரவர்த்தியின் வைபோகம் விவரிக்கக் கூடியதன்று. இவனது அந்தப்புரத்து இராஜ மாளிகையிற் பற்பல நாட்டு அழகு மிக்க இளமாதர்கள் பலர் சிறைசெய்து வைக்கப்பட்டிருந்தனர். அரசிறை வருமானங்கள் அம் மாதர்களது அலங்கார வகைகளுக்கே போதாதிருந்தன. மிகுந்த பொருட் செலவில் எண்ணற்ற உத்தியான வனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தும், அவைகள் உலாவுதற்குப் போதியனவாயில்லை. அரசன், அம் மாதர்களுக்கு அளவற்ற அநுகூலங்கள் செய்து கொடுத்திருந்தும் அவர்கள் சாந்தியும், சந்தோஷமும் அற்றிருந்தார்கள். பாவ மந்திரங்களே அவர்களது மனத்திலும் வாக்கிலும் உருவேறிக்கொண்டிருந்தன. ஒரு நாளேனும் அவர்கள் அரசனிடத்து முக மலர்ந்து சம்பாஷித்தார்களில்லை. எந்த நேரத்

திலும் மோசக்காரர்களுக்கும், துராலோசனை யுள்ளவர்களுக்கும் அரண்மனையில் மிகுதியான வேலை யிருந்துகொண்டிருந்தது.

ஸ்ரீமுக சாதவாகனனது சேனைகள், மகதநாட்டுக் கோட்டையின் பரந்த வெளியிற் கூடாரமடித்துத் தங்கியிருந்தன. இச் செய்தியுணர்ந்த சுசர்ம மகாராஜா, தனது அரியாசனத்தில் இருந்தபடி கிடுகிடென்று நடுங்கிக்கொண்டிருந்தான். பிரதான நிர்வாகஸ்தர்கள் யாவரும் அரசனைத் தனியே விட்டு அரிதில் மறைந்தனர். அற்பப் புத்தியினரும், மந்த மதிகளுமே மீந்தவர்களாய் அரசனைச் சூழ்ந்திருந்தனர். இக் கயவர்கள் தம்மையும், தமது அரசனையுந் துன்பப்படுத்தக் கூடாதென்று பணிந்து கொண்டாடித் தணிந்து மன்றாடக் கூடியவர்களாயிருந்தனர். இவர்களே ராஜாங்க நிர்வாகிகளும் ஆவர்.

ஸ்ரீமுக சாதவாகனன், காண்போர்க்குத் தீக்ஷண்ய கிரணத்துடன் பிரகாசிக்கும் திவாகரனைப் போன்றிருப்பினுந், தனது இருதயத்தில் தண்ணிய அமுத மயமான எண்ணத்தைக் கொண்டிருந்தான். அவனது பயங்கரமான ஹாஸ்ய ரஸத்தைக் கண்டு பகைவர் வியப்பர். அவனது திருவிளையாடல், மாலை வேளையிற் குமுறலுடன் கூடி மின்னிப் பிரகாசிக்குங் கார்மேகத்தைப்போன்றது. அவனது தோற்றம், மாலை யென்னும் மங்கை அஸ்தமன சமயத்தில் தனது திவ்விய சுந்தர வடிவுடன் துலங்கித் தாம்பூலத்தினாற் சிவந்த உதடுகள் செவ்வானத்தின் செந்நிற மொப்பத் திகழ்ந்துகொண்டிருப்பதுபோலிருந்தது.

ஸ்ரீமுகன் தனது படை முகாமில் வீற்றிருந்து, தனது தோழர்களுடன் பற்பல விஷயங்களைப்பற்றி விநோதமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அச் சமயத்திற் போராடை தரித்த ஒரு யௌவன வீரன் அங்கு வந்து ஸ்ரீமுகனுக்கு வணக்கஞ் செய்து நின்றான்.

ஸ்ரீமுகன் அவனை “நீ யார்?” என்று வினவினன்.

வீரன்:—நான் பாடலிபுரத்தான்.

ஸ்ரீமுகன்:—நீ இங்கு வந்ததென்?

வீரன்:—தாங்கள் நடாத்தும் போரில் நானுங் கலந்து ஊழியஞ் செய்வதற்காக.

ஸ்ரீமுகன்:—சந்தோஷம். ஆனால், எனது கட்டளையின்றி நீயாகவே யாதொரு காரியத்தையுஞ் சுதந்திரமாகச் செய்யக் கூடாது.

வீரன்:—தாங்கள் எனது ஒரு கோரிக்கைக்கு மாத்திரம் அனுமதி யளிப்பதானால் அப்படியே யாகட்டும்.

ஸ்ரீமுகன்:—அஃதென்ன?

வீரன்:—தாங்கள் யுத்த காரியங்களைத் தொடங்கும்பொழுதெல்லாந் தங்களின் அருகில் நான் மெய்க்காப்பாளனாக இருக்க வேண்டுமென்பது.

ஸ்ரீமுகன்:—அச் சொற் கேட்டதும் அவ் வீரனை ஊன்றிக் கவனித்து “அப்படியே ஆகுக” என்றான்.

வீரன் தனது வீர வாளை ஸ்ரீமுகனிடத்துக் கொடுத்து, அதனை ஆசீர்வதித்துக் கொடுக்கும்படி வேண்டி, அப்படியே பெற்றுக்கொண்டான்.

இரண்டொரு நாளிற் சமாதான சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. ‘சுசர்ம சக்கரவர்த்தியினுடைய பாதங்களை ஸ்ரீமுகன் வணங்குவதாகவும்; ஸ்ரீமுகனுக்குச் சுசர்ம சக்கரவர்த்தி ராஜ்யத்தைத் தாரைவார்த்துக் கொடுத்துத் தான் காட்டுக்குச் சென்று தபசு செய்யப் போவதாகவும்’ ஒரு விசித்திரமான ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி நன்னாள் ஒன்று நிர்ணயிக்கப்பட்டது. அந் நாளில் அரண்மனையின் நடுவில் நவரத்தின மயமான சிம்மாஸனத்தில் சுசர்ம மகாராஜா கம்பீரமாக வீற்றிருந்தான். அரசனைச் சூழ்ந்து அவனது உத்தியோகஸ்தர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அரசு போயினுந், தங்களது கௌரவத்தை நிலைநாட்டுவதற்கு வசதி வாய்த்ததற்கு அவர்கள் மனதினுள்ளே மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இத் தருணத்தில் ஸ்ரீமுகன், தனது ஆண்மைக்கேற்ற வீர உடை தரித்து, சர்வாடம்பரங்களுடன் தனது சகாக்கள் சகிதம் சபையினுட் பிரவேசித்தான். பிரவேசித்த அவன் மத நிரம்பிய ஒரு ஆண் யானையைப்போல் நின்றிருந்தான். அவனது இரு பக்கங்களிலும் மின்னிப் பிரகாசிக்கின்ற வாளாயுதங்களைக் கைகளிலேந்திய இரு வீரர்கள் நின்றிருந்தனர். முன்னர்ச் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, ஸ்ரீமுகன், சுசர்ம சக்கரவர்த்தியினுடைய பாதங்களைப் பற்றுவதற்காகத் தனது சிரத்தை முழங்காலின்மீது சாய்த்துத் தனது கைகளினாற் பாதங்களைப் பற்றிக்கொண்டான். ஆனால், தான் சிரங்குனிந்து மற்றொரு அரசனுக்கு நமஸ்காரம் செய்வதற்குத் தலை சாய்ப்பதேயன்றித் தலை வணங்குவதில்லை. இப்பொழுது தான் தனது சிரசினருகே இவனது பாதங்களைக் கொண்டு செல்லுகின்றேனென்று கூறி, அவ் வரசனது இரு பாதங்களையும் பற்றித் தலைகீழாகத் தூக்கிக்கொண்டு, ‘தாங்கள் தேவலோகத்தினின்றும் இறங்கிய திவ்விய புருஷரன்றோ! அங்ஙனமாயின், தங்கள் திருப்பாதங்கள் அத் திசைக்குச் செல்வது அவசியமானது. இதோ! அத் திசைக்குத் தங்களை அனுப்புகிறேன்’ என்று வீரச் சிரிப்புச்

சிரித்துப் பரிகாசஞ் செய்து, அவனது சிரம் பூமியைத் தொடும்படி தலைகீழாகத் தூக்கிப் பிடித்து ஒரு சுழற்றுச் சுழற்றி பூமியில் நிறுத்தினான். இப் பயங்கரச் செய்கையைப் பார்த்த சுசர்மனது படை வீரர்கள் தமக்கும் இக் கதி நேருமென் றஞ்சி மின்னென மறைந்தனர். ஸ்ரீமுகனது சேனைகள் கொல்லென்று நகைத்தனர். சுசர்மனது நெஞ்சிற் பிராணன் துடுக்குத் துடுக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. இத் தருணத்திற் புதிதாக மெய்க் காப்பாளர் பதவி யேற்ற பால்ய வீரன், திடீரெனத் தனது கூரிய வாளால் சுசர்மனது மார்பைப் பிளந்தான்.

சபை முழுதும் இரத்தம் பீறிட்டு, செங்குருதிச் சேறாயிற்று. ஸ்ரீமுகன் வியப்புற்றான். அரங்க முழுதும் அல்லோலகல்லோலமா யிருந்தது. வீரர், அப் பால்ய வீரனது செய்கைக்கு முனிந்து அவனது சிரத்தைக் கொய்ய வாளை ஓங்கினர். அது கண்ட அப் புது வீரன் சற்றுப் பொறுங்கள் என்று இரு கைகளையுங் கூப்பி வேண்டினன். ஸ்ரீமுகன் அவனைச் சினத்துடன் பார்த்து,

"யுவகனே! உனது செயல் மிகவும் துணிகரமானது! எனது ஆணையை இதுவரையும் எவரும் மீறியதேயில்லை. உனக்கேன் இத் தகைய சாகஸம்! நான் இவ்வளவு நாள் போர்புரிந்தும் ஒருச் சொட்டு இரத்தங்கூடச் சிந்தினேனில்லை. எனது பெயரால் யாருமே இதுகாறும் இரத்தஞ் சிந்தக்கூடிய பாவத்தைச் செய்தாரு மில்லை. நீமட்டும் ஆதரவற்ற ஒரு அரசனது மார்பைப் பிளந்து அவனது உயிரைக் குடித்தது ஒரு ஆண்மையென்று கருதிக்கொண் டனையா?" என்றான்.

வீரன்:— "அரசர் பெரும! ஆண்மையைக் கருதி இச் செய்கையைச் செய்ய நான் கருதினேனில்லை. நான் அவ்வாறு கருதுவதற்கு ஆண்மகனுமல்ல. நான் ஒரு பெண்பால்; கொலை செய்த குற்றத்திற்குத் தண்டனை பெறகத் தயாராய் இருக்கிறேன்" என்றாள்.

ஸ்ரீமுகன் வியந்து, "என்ன! நீ பெண்ணா? இவன் மீது உனக்கு இவ்வளவு பகை யேன்?"

பெண்:— 'வீரர் தலைவ! நான் விரும்பிய கணவனை இவன் அநியாயமாய்க் கொன்றுவிட்டான். என்னையுஞ் சிறைசெய்ய முயன்றான். நான் ஒருவாறு தப்பித்துக்கொண்டு பழிக்குப் பழி வாங்க முயன்றுகொண்டிருந்தேன். எனது முயற்சி முற்றுப்பெற்று, எனது நாயகனது ஆன்மாவுஞ் சாந்தியடையுமாறு செய்துவிட்டேன். இனி எனக்கு இவ் வுலகத்தில் வேலையே யில்லை. தாங்கள் என்னைக் கொன்று எனது ஆருயிர்த் தலைவனை விரைந்து காணும்படி செய்யுங்கள்' என்றாள்.

ஸ்ரீமுகன்:— நான் கொலை புரிகின்றவனல்ல. அதிலும் பெண் கொலை செய்வது பெரும் பாவம்.

பெண்:—தண்டிப்பதற்குரிய குற்றஞ் செய்துள்ள என்னைக் கொல்லுவதனாற் பாவம் பற்றுதற்கில்லை. குற்றஞ் செய்த கொடியரைக் கொல்லும் அரசர்க்குப் புண்ணிய லோகஞ் சித்திக்கின்றதெனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஸ்ரீமுகன்:— நீ என்னுடன் சாஸ்திரவாதஞ் செய்யாதே. இக் கணமே நீ இங்குநின்றும் வெளியேறிச் செல்லுவதே நல்லது.

அச் சொல்லைக் கேட்டதும் அம் மாது நல்லாள், தனது சட்டைப் பையினுள் மறைத்து வைத்திருந்த கத்தியை யெடுத்துத் தனது மார்பிற் குத்திக்கொண்டு உயிர் நீத்தாள்.

ஸ்ரீமுகன் இதன் பின்னர் மகத நாட்டிற்குத் தனது தோழர்களுள் ஒருவனை அரசனாக நியமித்து, ஆட்சிபுரிய ஏற்பாடு செய்துவிட்டு, வருணாச்சிரமங்களை யாவரும் சம்மதிக்கும் பொதுமுறையில் ஏற்பாடு செய்து, அங்கிருந்தும் பெயர்ந்து தனது படையெடுப்பு, பாரத தேசத்துப் பொது தர்மத்தின் பிரசாரத்திற் கென்பதை விளக்குவதற்காகச் சிறிது காலந் தரணிக்கோட்டையில் தங்கியிருந்தான்.

சீன தேசகேசரி: சன யாத-சேனன்.

(DR. SUN YAT-SEN.)

திரு. தினகரன் அவர்கள்.

I

ஸ்வதந்திர தேவிக்கு வேலை யில்லையா? இப்படி யேன் எல்லோரையுங் கிள்ளிவிட்டுக் கொண்டே யிருக்கிறாள்? எல்லாத் தேசங்களையுந் தூண்டிக்கொண்டே வருகிறாள்? பிரகிருதியைப் படைத்து இயற்கைச் சேதனங்களையும், அசேதனங்களையும் ஆக்கி; அவைகளனைத்தையும் அனுபவிப்பதற்காக மனுஷ்ய ஜாதியையுஞ் சிருஷ்டித்த தரும தேவதை, ஓரிரண்டு நூற்றாண்டுகளாகளாக ஸ்வாதந்தர்ய மாதாவை மலினமாக்கிவிட் டிருக்கிறது. பேராசைப் பேயைச் சாரணியாகவும், சேனை நாயகியாகவுங் கொண்டு,

அடிமைச் சைதானி யானவள் சர்வாதிகாரியாகச் சமஸ்த ஜெகத்திலும் ஆட்சி—கொடுங்கோ லாட்சி செய்து வந்தாள். ஏற்றத்திற்குப் பின் இறக்கமும், மலை யடிவாரத்தில் பள்ளத்தாக்கும் இருப்பது போலவும், இரவுக்குப் பின் பகல் விடிவது போலவும், அடிமையாகிற மூத்தவள் ஆதீனத்துக் குப்பிறகு ஸ்ரீதனச் செல்வியாகிற இளையவள் இப்பொழுது இவ் வுலகத்திலே கொலு வீற்றிருக்கிறாள். சுதந்திர தேவியும் விஜய லக்ஷ்மியும் அவளே யாவள்! வாரீர் உலகத்தீர்! வாரீர் வணங்குதும்! ஜெய காளியை வணங்குதும்!

1911-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் நாள் கிறிஸ்மஸ் வாரத்தில் ஒரு சுப தினம். அன்றைக்குச் சீனர் நாட்டிலே பெரியதோர் கொண்டாட்டம். ஒவ்வொரு வீடும்—சிறு சிறு குடிசையிலிருந்து பெரிய பெரிய மாளிகைக ளெல்லாந் தரையிலிருந்து முகடு மட்டும் அழகாய் அலங்கரிக்கப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு வீட்டின் துவஸ்தம்பத்திலும் சீன தேசத்துக் கீர்த்திக் கொடியானது சுயேச்சைக் காற்றோடு கலந்து, வானத்தை முத்தமிடுவது போலவும், ஆகாசத்தோடு கொஞ்சிக் குலாவுவது போலவுங் காம்பீர்யமாகப் பறந்துகொண் டிருக்கிறது. சீனர்களெல்லாம் என்றைக்கு மில்லாத கேந்திர ஸ்தானத்திலேதானே யிருந்துகொண்டு, எந்த மனுஷ்யனுக்கு மெட்டாத தலை யெடுப்பில் ஆஸ்மான முகட்டையே முட்டிக் கிழித்துவிடுகிறவர்கள் மாதிரி சர்வ தாரிகளாகத் திரிகிறார்கள்.

இருளடர்ந்த அடிமை அந்தகாரத்திற் பாழடைந்து கிடந்த சீன நாட்டிலே எந்தச் சௌபாக்கிய ரவி உதயமா யிருக்கிறான்? நேற்று வரை அன்னியர்களின் பாதத்தடியில் நசுக்குண்டும், பலி சிழந்து மிருந்த சீனர்கள் இன்றைக்கு விடுதலை யடைந்துவிட்டார்களா? ஆம். அவர்களுக்கு இன்று சுதந்திர தினம். வேற்று அரசர்களின் கையில் பொம்மையைப்போ லிருந்து, சீனர் நாட்டிற்குக் கௌரவ ஹானியையுங் கணக்கில்லாத நஷ்டத்தையுங் கொடுத்துக் கொண்டிருந்த மஞ்சூ அரசனை நீக்கிவிட்டுப், பிரஜாதிபத்தியத்தை நிர்மாணித்த நாள் இன்று. இனிமேல் சீனத்தில் அரசனுக்கு வேலை யில்லை. அந்த ஸ்தானத்திற் பிரஜைகளின் பிரதிநிதியாகப், பிரஜைகளாலேயே தேர்ந் தெடுக்கப்பட்ட ஒரு சாமான்யப் பிரஜை, ஜன நாயகத்தின் தலைவனாக இருந்து ஜனங்களின் நன்மைக்காகவே இராஜரீகஞ் செய்யப் போகிறான். சீனக் குடியாட்சியின் முதலாவது தலைவனைச் சீனர்கள் யாரை நியமிக்கப் போகிறார்கள்? ஓரிரண் டாண்டுகளல்ல இருபத்தைந் தாண்டுகள் இடை விடாது பாடு பட்டு, உயிரையும், உடலையும், உள்ள தனத்தையுந் தேச மாதாவின் பலி பீடத்திலே சமர்ப்பித்து விட்டு, சிரமத்திற்கு மேல் சிரமத்தையுங் கஷ்டத்திற்கு மேல் கஷ்டத்தையும் வலிய வரித்துக்கொண்டு போராடிச் சீனருக்குச் சுதந்

திரத்தைக் கொண்டு வந்தானே அந்தத் தேசாவேசக் கேசரி சன-யாத-சேனனைச் சீனர்கள் மறந்துவிடப் போகிறார்களா? பிரஜாதிபத்தியத்தின் முதல் பிரபுவாக சன யாதன் அத்தியக்ஷ பதம் அளிக்கப் பெற்றான். அவனது வாழ்க்கை வரலாற்றைத்தான் இங்கு நாம் படிக்கப் போகிறோம்.

ஒவ்வொரு மனுஷ்யனும் ஒவ்வொரு காரியத்தைச் செய்து முடிப்பதற்காகவே ஸ்ருஷ்டிக்கப்படுகிறான். வேலை யற்றுப்போய் பிர்மதேவன் இந்தச் சிருஷ்டித் தொழிலைச் செய்துகொண் டிருக்கவில்லை. கர்மாவைச் செய்வதற்காகத்தான் விஸ்வ கர்மன் ஒவ்வொரு சேதனா சேதனப் பொருள்களையும் ஓயாமற் படைத்துக்கொண் டிருக்கிறான். சிலர் வந்த காரியத்தை அவசர அவசரமாகச் செய்து முடித்ததும் இனிமேல் தமக்கு இவ்வுலகத்தில் வேலை யில்லை யென்றபோது போய் விடுகின்றனர். சிலர் வந்த காரியத்தை மறந்து, கோலாகலமான லௌகீகத்திலே மன லஹரிதப்பட்டு, அத்யாத்மீகமான காலத்தைச் செலவழித்துவிட்டு நோய்க்கோ, நொடிக்கோ இரையாக மாண்டு போகிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு ஆத்மா பிறந்தது, வாழ்ந்தது என்பதையே மனுஷ்ய ஜாதி வெகு சீக்கிரத்திலே மறந்துவிடுகிறது. ஆனாற் கர்ம வீரர்களை, மஹாத்மாக்களை உலகம் ஒரு நாளும் மறக்காது. நித்திய சோபிதையோடும், சர்வாந்தர்யாமியாகவும் அந்தத் தெய்வ மனுஷ்யர்கள் பூதவுடம்பு இறந்தும், புகழுடம்பு இறவாமல் வாழுகிறார்கள். சன யாத-சேனன் அந்த ஜாதியைச் சேர்ந்தவன். அவனது கீர்த்திப் பதாகை கேந்திர ஸ்தானத்திலே பறந்துகொண் டிருக்கிறது.

1870-ம் வருஷம் நவம்பர் மாதம் 24-ந் தேதி அடிமைச் சீனத்திலே சுதந்திர வீரன் சன யாத-சேனன் பிறந்தான். அப்பொழுது சீனத்தின் கை ரொம்ப ரொம்பத் தாழ்ச்சி. கிழக் கிந்தியக் கம்பெனி யென்கிற வர்த்தகக் கூட்டம், சூழ்ச்சியான போத்தைப் பேசிக் கீழ் நாடுகளிலே பிரிட்டிஷ் மகுடத்தைச் சூட்டிக்கொண் டிருந்த காலம். இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சி; பர்மாவையுஞ் சீன ராஜனிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். 1839 முதல் 42 வரை நடந்த அபினிச் சண்டையும், 1856-ம் வருஷத்து அம்புச் சண்டையும், அதன் பின் 1860-ல் ஏற்பட்ட பெக்கிங் முற்றுகையும் பிரிட்டிஷ்காரர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் நல்ல நஷ்ட ஈட்டைத் தந்தன. காலூன் பிரிட்டிஷ் பிரதேசமாகி விட்டது. உசூரியும் அதன் கீழ்ப் பாகமும் ருஷியாவுக்குச் சொந்தம். சீனத் துறைமுகங்களில் ஐரோப்பியக் கப்பல்கள் தாராளமாக நங்கூரம் போடலாம். வெள்ளைக்காரர்கள் அவரவர் இஷ்டம்போல் எந்த ஊரிலுங் கடை வைத்து வியாபாரம் செய்வதை சீனத் தரசன் ஏனென்றுகூடக் கேட்கப்படாது. இவ்வளவு மான ஹானியையும், பொருள் நஷ்டத்தையும், பூமிச் சேதத்தை

யும் எந்த மானி பொறுப்பான்? சீனர்களால் இக் கௌரவ நாசத்தை கண் கொண்டுதானும் பார்க்க முடியவில்லை. அவர்களின் அரசனாகயிருந்த மஞ்சூ மன்னன் மண்ணாய்ப் போக—அவனது ஆண்மையற்ற சர்க்கார் மீது இடி விழுகச், சீனர்கள் புரட்சி செய்யத் தலைப்பட்டார்கள். தேசியக் கட்சி யொன்று சேர்க்கப்பட்டது. தெய்ப்பிங் என்கிற இடத்தில் அரசனுக்கு விரோதமான கலகம் பிறந்து, இரத்தப் புரட்சி மும்முரமாக நடந்தது. அன்னிய அரசர்களின் உதவி மஞ்சூவுக்கு ஏராளமாக இருந்ததால் புரட்சிக் குழு 1864-65-ல் பூழ்தி செய்யப்பெற்றது. இச் சந்தர்ப்பத்திலே ஒரு சிறு ஞாபகம். இந்தியாவிற் சிப்பாய்க் கலக மென்கிற சுதந்திரப் போர் (1857) நடந்ததும், துருக்கியில் ருஷியாவுக்கு விரோதமான சண்டை நிகழ்ந்ததும் அக் காலத்திலேதான். மேல் நாட்டிற்கு அடிமையான கீழ் நாடுகளில் ஸ்வாதந்தர்யம் என்கிற ஜோதிக் குழந்தைகளைப் பிறப்பித்து, புரட்சி யாகிற வீரப் பாலை ஜெய தேவி ஊட்டிக்கொண்டு வந்தாள். சன யாத-சேனனும் பால் குடித்தான், வளர்ந்தான், ஓடி விளையாடினான் அந்த விளையாட்டுக்களிலுந் தேசியங் கலந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. இருக்கத்தான் செய்யும். தேசத்திற்காகவே பிறந்தவ னல்லவா சன யாதன்? அவனது விளையாட்டும் தேசிய மயமாகத்தா னிருக்கும்.

பால பருவங் கடந்து, பள்ளிப் பருவம் வந்தது சேனனுக்கு. அவனது தந்தை கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்தவராகையால் சன யாதன் ஓர் அமெரிக்கக் கிறிஸ்தவக் கல்லூரியில் வித்தியாப்பியாசத்திற்காக விடப்பட்டான். நல்ல பையன்; நன்றாய்ப் படிக்கிறான்; புத்திசாலி என்கிற பெயரோடு, ஆசிரியர்கள் மெச்ச இலக்கியக் கல்வியை முடித்துக்கொண்டு, வைத்தியப் பரீட்சையிலுந் தேறித் தனது 25-வது வயதில் சீனத்தில் சன யாதன் பிரக்கியாதிபெற்ற சத்திர வைத்தியனாக விளங்குகிறான். இதுவரை அவனது வாழ்க்கைச் சரித்திரத்தில் ஸ்வதந்திர தேவி தனது தெய்வீகக் கரத்தை வைத்து ஆசீர்வதிக்கவில்லை இனிமேல்தான் கதை ஸ்வாரஸ்யமா யிருக்கும்.

தெய்ப்பிங் புரட்சியில் தேசீய சீனத்தார் தோற்றுப்போனாலும் இவர்கள் ஏற்றிவைத்த விடுதலை விளக்கு அணைந்து போய்விட்டதில்லை. திரி நன்கு சமைந்து, ஏராளமான எண்ணெயும் பெய்யப்பெற்றுப் புரட்சிக்காரர்கள் வேக கதியில் வேலைசெய்து வந்தார்கள். மஞ்சூ மன்னனுக்குச் சிறிது தயவு பிறந்தது; சில சீர்திருத்தங்களைச் செய்ய முன் வந்தான் அவைகளும் புரட்சிக்காரர்களின் இரத்தக் கொதிப்பைத் தணிக்கவில்லை. வானம் இடிந்து விழுகையில் சுண்டைச்சாயால் அண்டைக் கொடுக்க முடியுமா? அரசன் ஸ்வச்சமாகத் தானே செய்த

தவறுகள் ஒருபுறமிருக்க, அன்னியச் சத்துருக்கள் சீன மண்ணைச் சுரண்டுவதைப் பார்த்துக்கொண்டு மிருக்கிறானல்லவா? என்கிற ஆத்திரத்தை ஜனங்களால் அடக்க முடியவில்லை. பிரிட்டன், பிரான்ஸு, ஜெர்மனி, ருஷியா, அமெரிக்கா முதலிய தேசங்களோடு ஒப்பந்தஞ் செய்துகொண்டு மஞ்சூ மன்னன் சீனாவைச் சுக்கு நூறா யுடைத்துவிட்டான். இவ்வளவு துர்த்தசையின் மத்தியில் அடுத்த வீட்டுக்காரனும் பகைவனானான். ஜப்பான், சீனத்தின்மீது 1895-ல் படையெடுக்கலாயிற்று. இரண்டு வருடங்கள் சீனரும் ஜப்பானியரும் இரணகளத்திலே நின்றிருந்தார்கள்.

சீனத்தை மீட்கப் பிறந்த சன யாதன் எங்கே? என்ன செய்துகொண்டிருக்கிறான்? வைத்திய அறைகளிலே சத்திரச் சிகிச்சையும், மருத்துவச் சிகிச்சையுஞ் செய்துகொண்டிருந்தான். 2,200 வருடங்களுக்கு முன்னே ரோம, கிரேக்க, இந்திய நாகரீகத்தோடு போட்டிபோட்டுக்கொண்டிருந்த பழைய சீனம், அவனது ஒளி பொருந்திய கண்களின் முன்னே நின்றது. இப்பொழுதைய சீனத்தையும் பிரத்தியக்ஷமாகக் கண்டான்; இரண்டையும் ஒரு முறை ஒப்பிட்டுப் பார்த்தான். அவனால் சகிக்கமுடியவில்லை. துர்பாக்கிய சீனத்தைச் சத்துருக்களின் கரத்தினின்றும் விடுவித்து, முன்னைய நிலைமைக்கு உயர்த்த ஏதாவதொரு வழி கிடைக்காதா என்றெண்ணிக்கொண்டும், திட்டங்கள் தயாரித்துக்கொண்டும் இருந்தான். கோரியாவையுஞ் சீனம் இழந்தது. இவ்வாறாக 100-க்கு 85 விகிதாச்சாரத்தில் சீன நிலம் சீனர்களுக்கில்லாமல் வேற்று நாட்டானுக்கென்றாகிவிட்டது. இது தெரிந்தும் சன யாத-சேனன் இனியுந் தனது சிகிச்சை யறைகளில் சத்திரக் கத்தியையும், மருந்துப் புட்டிகளையும் உபயோகித்துக்கொண்டிருக்க விரும்பாமல், தேச வெறி பிடித்து வெளிக் கிளம்பினான். தம்பட்டச் சத்தங் கேட்ட சிங்கம், பயங்கரமான கர்ஜனையைச் செய்து வால் சுழற்றி யெழுந்ததுபோ லெழுந்தான் யாத-சேனன்.

போர்செய்து தோல்வியுற்றதாலோ அல்லது சத்துருக்களுடன் சந்திசெய்து. தோற்கப்பட்ட பிரதேசங்களிலே ஏற்றத் தாழ்வுகள் பேசுவதாலோ ஒரு அரசாங்கமானது தனது பிரபுத்துவத்தை யிழக்கலாம். ஆனால் ஒரு ஜாதியார்—ஒரு தேசத்து ஜனங்கள் தங்களது பிறப்புரிமையான சுதந்திரத்தை—தலைமுறை தலைமுறையாக அடிமையாக்கப்பட்டிருந்தாலும், எத்தனை எத்தனை முறைதான் அடக்குமுறைக் கரத்தால் அடித்து வீழ்த்தப்பட்டபோதிலும் அருமையான சுதந்திரத்தை அடையாமல் அமையமாட்டார்கள்

II

சன யாத-சேனனுக்கு இப்பொழுது வயது இருபத்தைந்து. வாலிப தேஜஸ் அவனுடைய முகத்தில் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்தது. க்ஷத்திரிய ஜோதி அவனது கண்களிலே வீர்ய ஜ்வாலையைக் கக்கிக்கொண்டிருந்தது. ஸ்வாதந்தர்ய உணர்வு அவனுள்ளத்தில் அக்கினிக் கொழுந்தாய் எரிய, ஹிருதய அறைகளிலே இரத்தம் மழுவாய்க் கொதித்துக்கொண்டிருந்தது. பாழாய்க் கிடந்த சீன சாம்ராஜ்யத்தை ஊன்றி நோக்கினான். அதன் அதிர்ஷ்டஹீனர்களான சீனர்களை உறுத்துப் பார்த்தான். சஹாராப் பாலைவனத்தைப் போன்று வாழ்க்கையும், எண்ணமும் வெறுமையடைந்தது. அடிமை மேகத்தாற் சூழப்பட்டு அந்தகாரமாயிருந்த சீன தேசத்தில் சன யாதனுடைய ஸ்வாதந்தர்ய ஆதர்ஸம் மின்னலைப்போன்று பளிச்சிடா நின்றது. அதன் பின்னே இடிமுழக்கம் போன்ற புரட்சி! அப்புறம் தண்ணிய மழை பொழிந்தாற்போன்ற விடுதலை!

டாக்டர் யாத-சேனனுடைய ஓவியத்தை முன்னாலே வைத்துக்கொண்டு, அவனது முக படலத்திலே நான் கண்டவற்றையும் படித்தறிந்தவற்றையும் இங்கு எழுதுகிறேன். சீன சாம்ராஜ்ய முழுவதும் அதன் முந்திய மீசுர ஸ்தானம்—இப்பொழுதைய தீன ஸ்திதி—அந்த இரண்டு பாவனா சித்திரங்களும் அவனது அழகிய முகத்திலே அழுத்தமாய் வரையப்பட்டிருக்கின்றன. அகன்ற நெற்றியிலே கேந்திர—நீச சீனங்களின் திவ்ய சரித்திரம் எழுதப்பட்டிருக்கின்றது. விசாலமான கண்களிலே சீன வீரம் ஸ்புரிக்கிறது. மூச்சிலே ருத்திராங்கார களை ஜ்வாலையைக் கக்குகிறது. உதடுகளிலே பிடிவாதம்! கன்னங்களிலே உத்தண்ட ஜோதி! காதுகள் விரிந்து தேசீயச் சீனர்களின் இரகசியத் தீர்மானங்களை நன்றாய்க் கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தன! கழுத்திலே வாகை மாலை! கபோலத்திலே வெற்றிக் குடை! பிரகிருதி மாதா அவனுடைய வாலிப வதனத்திலே அழகு முத்திரையை அப்படியே வைத்திருந்தாள். கர்ம தேவதைக்கு சன-யாதனின் விசால மார்பு நடனசாலை! வீர லட்சுமிக்கு அவனது தடம் புயங்கள் இரண க்ஷேத்ரம்! எவ்வளவு கஷ்டத்தையும், எத்தகைய சீதோஷ்ணத்தையுந் தாங்கக்கூடிய ஆஜானுபாகுவான சரீரம்! அதற்குள்ளே அஞ்சாத நெஞ்சம்! வீர ஹிருதயம்! தேசத் துடிப்பு! அருள் வல்லபம்!

சன யாத-சேனன் போர்க்கோலங் கொண்டுவிட்டான். சீனத்தின் ஸ்வாதந்தர்யக் கொடியைக் கையிலே பிடித்துக்கொண்டு சைன்யந் திரட்டுகிறான். சாரணனாகத் திரிந்து தேசீயப் பிரசாரஞ் செய்த சன யாதனைக் கண்டவுடனே சூறாவளியைக் கண்ட சமுத்திர அலை

களைப்போலச் சீனர்கள் கொந்தளித் தெழுந்தார்கள். அவனது பிரசண்ட பிரசாரத்தைக் கேட்டவுடனே பிடாரனுடைய மகுடிச் சப்தத்தைக் கேட்ட கிருஷ்ண சர்ப்பத்தைப்போலச் சீறி யெழுந்தார்கள். சன யாத-சேனனின் வீர, உதார, சரள வாக்கியங்களுக்கு ஆகர்ண சக்தி யிருந்தது. தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் தேவமணி போலச் சன சேனன் கண்டவர்களை யெல்லாந் தன் கட்சியிலே சேரப் பண்ணினான். அவர்களைக்கொண்டு ஓரிரகசிய சங்கத்தை ஸ்தாபித்து, மலைக் குகைகளிலும், மாளிகை மத்தியிலும் மர்மமாகக் கூட்டங்களைக் கூட்டுவதும், அந்தரங்கமாக ஆட்கள் சேர்ப்பதுமாக, ஜரூராகத்தானே வேலைகள் நடந்துவந்தன. இச் சங்கப் பிராப்த காலத்தில் சர்க்கார் கொஞ்சம் அஜாக்கிரதையா யிருந்தது சன சேனனுக்கு நல்லதிர்ஷ்டமாயிற்று. மேலும் மஞ்சூ மன்னன் சுத்த மண்டு; தூரதிருஷ்டி கிடையாது; கூர்த்த புத்தியுமில்லை. சாத்மீகமான வழியில், சகோதரச் சீனர்களின் இரத்தத்தைச் சிந்தாமல், தீவிரமாகக் கிளர்ச்சிசெய்து சுதந்திரம் பெறுகிறது என்கிற பாதையிற் சென்றுகொண்டிருக்குஞ் சன யாத-சேனனை மஞ்சு சர்க்கார் சரியாய் மதிப்பிடவே யில்லை. சன சேனன், சீன சர்க்காரை வாய் மடுக்கக்கூடிய பெரிய எரிமலையா யிருப்பானென்று, குறும் பார்வையுடைய மஞ்சுக்குத் தெரியாமல் போய்விட்டது. இருந்தாலுஞ் சட்டங்களெல்லாம் மஹா கடுமையானவை. அரசனுக்த விரோதமாக மூச்சு விட்டாலும் மரணத் தீர்ப்பு! புரட்சிக்காரனென்று ஒருவனை அநுமான மாத்திரத்திலே கண்டாலும், நடுத் தெருவிலே நாயைப்போலச் சுட்டுக் கொல்லக் கட்டளை யிருந்தது! இதற்குப் பயந்து ஹோட்டல்காரர்களும், வியாபாரிகளுங்கூட "இராஜீய வியவகாரங்களை இவ்விடத்திலே பேசப்படாது" என்ற விளம்பரப் பலகைகளைத் தொங்கவிட்டிருந்தார்கள். அரசியலைப்பற்றித் தாழ்ச்சியாக எவனாவது பேசினால் அவ்வளவுதான் கைக்கு விலங்கு, கழுத்துக்குக் கயிறு, எல்லாம் வந்துவிடும்! அத்தகைய அடிமை வாழ்க்கையிலே கிடந்த சீனத்தில் சன சேனன் எவ்வளவு தைரியமாகப் புரட்சித் தீயை மூட்டிக்கொண்டு திரிகிறான்! "உயிரை விட்டவன் வாழ்வான்; விடாதவன் வீழ்வான்" என்கிற கிறிஸ்துவின் வாக்குக்கு சன யாதன் திருஷ்டிப் பொருளாகிவிட்டான். அப்புறம் பிராண பயம் அவனுக்த ஏது? ஜெனனீ ஜென்ம பூமியாகிற தேச மாதாவின் பலிபீடத்திலே ஜீவனைப் பலிப் பொருளாக வைத்துவிட்டிருக்கிறானல்லவா?

நாட்கள் சென்றன. ஜனங்களின் ஆதரவு சன-சேனனுக்கு நாலாபக்கங்களி லிருந்துங் கிடைத்தது. புரட்சிக் கூட்டம் வளர் பிறைச் சந்திரிமாவைப்போல் நாளுக்த நாள் வளர்ந்தது. அதன் அபாயத் தோற்றத்தைச் சொப்பனத்திற் கண்டதுபோல அரசன்

கண்டுவிட்டான். ஒற்றர் குழாத்தையும், வேட்டை நாய்களையும் ஏவித் தனக்கு விரோதமாக வேலை செய்கிறவர்களை யெல்லாம் பிடித்து வரும்படி கட்டளையிட்டான். வேவுகாரர்கள் எல்லாப் பக்கங்களிலுங் கண்ணிலே திரிப்போட்டுப் பார்த்துத் திரிந்தார்கள். 'உச்சமான ஸ்வரத்தில் கூவிக்கொண்டு மரத்தைக் கொத்துகிறது மரங்கொத்திப் புள். ஆனால் அது எந்த மரத்தைக் கொத்துகிறதென்று பார்த்தாலோ தெரியாது.' எங்கோ எப்படியோ மறைந்துகொள்ளுகிறது. அப்படிப்போல இருந்தது ஒற்றர் காரியமும், புரட்சிக்காரர்களின் தேவ ரகசியமும். என்றாலும் விட்டார்களில்லை. ஜாகரூகர்களாகத்தானே புலம் விசாரித்துவந்தார்கள். எங்கேனும் ஓரிடத்தில் நிச்சயமான சமாச்சாரம் அகப்பட்டதுபோ லிருக்கும்; நெருங்கிப் பார்த்தால் ஒன்றுமே யிராது. இப்படியெல்லாம் முயன்று ஒரு நாள் கண்டு பிடித்தே தீர்த்தார்கள்,

இரவு நடுநிசி. கழுகுங் கண் படுக்கும் வேளை. ஊர் நன்றாய் உறங்கிவிட்டிருந்தது. சீன ராஜ்யத்தின் தலைநகரியான காண்டனில் (Canton) ஒரு வீட்டைப் போலீஸார் முற்றுகை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்? அந்த வீட்டுக்குள்ளே என்ன நடக்கிறது? ஒரு பதினெட்டுப் பேர் கூடி ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். நமது வீர கேசரி சன யாத-சேனன் யாதோ திட்டத்தின்மீது சரமாரியாகப் பேசுகிறான். எல்லோருங் கண்ணிமைக்காமல், கருத்துச் சிதறாமல் காதுகளை அகலத் திறந்து கேட்டவண்ண மிருக்கிறார்கள். கடைசியில் ஒவ்வொருவருக்கும் என்னவோ கட்டளையிடுகிறான். எல்லாருந் தலைவணங்கித் தமக்கிடப்பட்ட உத்திரவை நிறைவேற்றுவதாகச் சபதமெடுத்துக் கொள்ளுகிறார்கள். இந்தக் கட்டத்திலே கதவு திறக்கப்படுகிறது. அனைவரும் அப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். ஒவ்வொருவன் நெற்றிக்குங் குறியாகத் துப்பாக்கிக் குழாய்கள் நீட்டப்பட்டிருக்கின்றன. எல்லோருங் கைதிசெய்யப்பட்டனர். ஆனால் கை விலங்கிடப்பட்ட கூட்டத்திலே சன யாத-சேனனைக் காணோம். எப்படியோ போலீஸ்காரர்களின் கண்களிலே மாயப் பொடியைப் போட்டு மறைந்துவிட்டான்!

போலீஸ்காரர்கள் அந்தப் பதினேழு பேர்களையுங் கூட்டிக்கொண்டு நகர சிறைக்குப் போய்விட்டார்கள். அப்புறம் ஒரு உருவம் முகமூடி யணிந்துகொண்டும், உடலையெல்லாம் நன்றாய்ப் போர்த்திக்கொண்டும் அந்த வீட்டை விட்டு வெளிவருகிறது. அதை எவருந் தொடரவில்லை. நேரே ஒரு வீட்டைத் தட்டிக், கதவைத் திறந்த ஆளிடத்திலேதானே அந்த மாய மனிதன் என்னவோ காதுக்குள்ளே சொன்னதுங், கொஞ்ச நேரத்திலே பத்துப் பதினைந்து பேர் வெளி வந்ததுஞ், சந்தடி செய்யாமற் பல தெருக்களைக் கடந்து நேரே

கோட்டைச் சுவரண்டை செல்லுகிறார்கள். முகமூடி யணிந்த உருவம், அங்கிருந்த அனைவரையும் ஆலிங்கனஞ் செய்துவிட்டு, கோட்டை மதிலிலே தொங்கிய நூலேணி வழியே யேறுகிறது—மறுபுறத்தில் இறங்குகிறது. இப்பொழுது நமது மஹா வீரன் சன யாத-சேனன் காண்டன் நகரத்துக்கு வெளியிலே நிற்கிறான். முகமூடி யணிந்திருந்தவன் சன யாதன்தா னென்று சொல்லித்தானா தெரியவேண்டும்?

மறுநாள் சன யாதனைப் போலீஸார் ஊரெல்லாம் வலைபோட்டுப் பார்த்தார்கள்; எவ்வளவோ உழவும் விசாரித்தார்கள். யாத-சேனனைக் காண்டனில் கண்டதாக ஒரு ஆள்கூடச் சொல்லவில்லை. போனவன் போனவன்தான்; பிடிபடவே கிடையாது. போலீஸார் என்னென்ன வழிகளிலோ முயன்று பார்த்தார்கள். பிடித்துக் கொடுப்பவருக்குப் பதினாயிரக் கணக்கான ரூபாய்கள் பரிசளிப்பதாகவும் விளம்பரஞ் செய்தார்கள். ஒன்றுமே பலிக்கவில்லை.

III

டாக்டர் சனயாத-சேனன் இப்பொழுது சீன தேசமெங்கும் நாடோடியாக அலைந்து திரிகிறான். இன்றைக் கோரூர் நாளைக்கோரூராக அவன் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமா? சேர்ந்தாற்போல் இரண்டு நாளைக்கு ஓர் இடத்தில் இருக்க முடியாது. வேளா வேளைக்குச் சோறுண்டா? இளைப்பாற வீடும், படுக்கையுங் கூடக் கிடைத்ததா? இப்படி யெல்லாம் உடல் வருந்த, உள்ளம் நோக, சன யாதன் பிச்சைக்காரனிலுங் கேவலமாகத் திரிந்தான். நடந்து நடந்து, கால் மூளையுஞ் செத்துவிட்டது. எத்தனை நாளைக்குத்தான் மஞ்சு வேவுகாரர்களின் கண்ணுக்குத் தப்பலாம்? பிடிபட்டால் தன்னுயிர் போய்விடுமே—தன்னைத் தூக்கிலே போட்டு விடுவார்களே யென்கிற பயம் அவனுக்கு எள்ளத்தனையு மில்லை. ஆனால் தான் செய்த அவ்வளவு முயற்சிக்கும் பலனைப் பார்த்த பிறகுதான் சாகவேண்டும்—சுதந்திர சீனத்திலேதான் தனது உடல் சமாதி செய்யப்பட வேண்டும் என்கிற ஒரு ஆசைக்காகவே சன சேனன் அவ்வளவு சிரமத்தையுஞ் சகித்துக்கொண்டு ஜப்பானுக்கு ஓடினான். அங்கேனும் நிம்மதியாக இருந்தானா? நிர்பயமாக வாழ முடிந்ததா? வேட்டை நாய்க் கூட்டம் அங்கும் வந்து தொலைந்தது. சன யாதனை ஜப்பானிலும் சீன வேவுகாரர்கள் அவனது நிழலைப் போலத் தொடர்ந்து திரிந்தார்கள். சன-சேனன் தனது தேசத்தின் பொருட்டாக, ஜீவனைக் கையிலே பிடித்துக்கொண்டு ஜப்பானியரோடு ஜப்பானியனாய்த் திரிந்தான். ஆபத்தை அணைந்து கொண்டு, விபத்தின் வாய்க்குள் ளிருப்பதுபோலிருந்தது அவன் வாழ்க்கை. உயிரோடு பிடிக்க முடியாவிட்டாலுஞ் சுட்டுக் கொன்றாகிலும் பரிசைப் பெறுகிறது என்கிற ராக்ஷஸத்தோடு ஒற்றர்கள் சன யாதனைத் துரத்துகிறார்கள். என்ன செய்வான் நாடோடி? அயலவர் நாட்டில்,

மனித சகாயமின்றித், தன்னந் தனியனாய்த், தலை மறைவாய் மாறு வேஷத்தோ டிருக்கிறான். மண்டையில் மயிர் முளைத்த நாள் முதலாய் அருமையோடு வளர்த்து வந்த அடர்த்தியான கூந்தலைக் கத்தரித்தும், மீசை வளர்த்தும் ஜப்பானியனைப் போல உடை யணிந்தும் பார்த்தான். அந்தக் கோலமும் அவனை ஒளிக்க முடியவில்லை. இனிமேல் முடியாது—இவ் வேட்டை நாய்க் கூட்டத்திலிருந்துந் தப்ப முடியாது என் றேற்பட்டபோது சன யாத-சேனன், ஜப்பானிலிருந்து விடை வாங்கிக்கொண்டு ஹனலூலு என்ற தீவிற்குக் கப்பலேறிவிட்டான். அங்கும் அமைதி கிடைக்கவில்லை. தீவு வாழ்க்கையுஞ் சன யாதனுக்குச் சரிப்படாது போயிற்று. அமெரிக்கா என்கிற புதிய உலகத்திற்கு யாத்திரை புறப்பட்டான். சுதந்திர அமெரிக்காவில் சுதந்திரமாக வாழலா மென்பது சேனன் தன் ஆசை. ஆனால் அங்கும் அந்தப் படுபாவிச் சத்துருக்கள் தொடர்ந்து விட்டார்கள். "இனிமேல் இன்னொரு இடம் பார்க்க வேண்டியதுதான். எங்கே போகலா" மெனச் சிந்தித்தான். லண்டன் அவன் கண் முன்னே வந்து நின்றது. அவ்வளவுதான் பயணப்பட்டு விட்டான்.

லண்டன் வாழ்க்கையில் சன-சேனனுக்கு ஒற்றர் துயர் அத்தனை அதிகமா யில்லை. என்றாலும் இன்னொரு கொடூரமான தீக் கண் அவன் மீது பாய்ந்துவிட்டது. லண்டனில் சீன தேசத்து ராயபாரியா யிருந்த ஒருவன் சன-சேனனைச் சீன சர்க்காரிடம் பிடித்துக் கொடுப்பதற்குச் சூழ்ச்சி செய்தான். இவ்விடத்தில் ஒரு குடில நீதி கையாளப்படுகிறது. சன யாத-சேனனுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாக ஒரு கதையைக் காட்டி அதற்குச் சில வயிற்றுப் பிழைப்பு வைத்தியர்களின் கையெழுத்தையுங் காசுக்கு வாங்கிப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே அவனை அடைத்துவிட்டான். இனிமேற் சேனன் ஏற்றுமதி செய்யப்பட்டுத் தூக்கு மேடையிலே தூங்க வேண்டியதுதான். ஆனால் ஆண்டவன் சங்கல்பம் அப்படி யில்லை. "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் ஆண்டவன் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலுந் தரையிலே விழாது—மனுஷ்யன் தலையிலுள்ள மயிர்கள் கூட எண்ணப்பட்டிருக்கின்றன—அநேகம் அடைக்கலான் குருவிகளைவிட மனிதன் எவ்வளவோ விசேஷமானவன்"—என்பது மகாத்மா இயேசுவின் வாக்குறுதி. அதைப் பொய்ப்பிக்கச் சீன ராயபாரியாலும் மற்றெந்த மனுஷ்யனாலுந்தான் முடியும்?

பைத்தியச் சாலையிலே பனிரெண்டு தினங்கள் பைத்தியகாரப் பட்டம் கட்டப்பட்டுக் கிடக்கின்றான். நம்பிக்கை கிடையாது. இனிமேற் சாவைத் தவிர வேறு மீட்சி யில்லை யென்று தீர்ந்துவிட்டது. அன்னியர் நாட்டில்—சத்துருவின் தேசத்தில்—சுற்றத்தாருஞ் சிநேகி

தர்களு மில்லாத வேற்றூரில் சன யாதன் எந்த வழியிலிருந்து சகாயத்தையோ விடுதலையையோ எதிர் பார்க்க முடியும்? ஆனால் அவனைப் படைத்த தெய்வம்—சீனத்தின் விடுதலைக்காகச் சேனனை ஸ்ருஷ்டித்த கடவுள் அவனை அவன் வேலை முடிவடையு முன்னே அழைத்துக் கொள்ளுவதாக இல்லை. நாளைச் சன-சேனன் கப்பலேற்றப்படுவான் என்றிருந்த கடைசி நாளிலே அவன் எதிர்பாராத இடத்திலிருந்து உதவி வந்தது. அவனுக்குச் சகாயஞ் செய்யக்கூடிய ஆள் அங்கிருக்கிறா னென்பதே யாத-சேனனுக்குத் தெரியாது. நாதியற்ற அவனுக்கு நாதியாக ஒருவன்—ஒரு நண்பன் லண்டனிலிருந்ததை அவன் அறியவே அறியான். டாக்டர் காண்டலே—அவனும், அவன் பிள்ளைகளும், பிள்ளைகளுக்குப் பிள்ளைகளும் நன்றா யிருக்கச் சன-சேனனுக்கு உதவி செய்ய ஓடி வந்தான். அவசர அவசரமாகச் சீன ராயபாரியிடஞ் சென்றான். அவனது குடில புத்தியையும், சதிச் செயலையுங் கண்டித்து யாத-சேனன் பைத்தியக்கார னல்லன்; யதார்த்—ஸ்வபாவ புத்தியிலேதா னிருக்கிறான்; சிறிதுஞ் சித்த பேதமில்லை யென்பதைத் தனது வைத்திய நிபுணத்வத்தாலும், வாக்கு வன்மையாலும் நிரூபித்துக் காட்டினான். ராயபாரிக்குத் தனது தூர்த்தச் செயலை, துஷ்ட வர்த்தனையை, இனியுஞ் சாதிக்க வகையில்லாமல் சேனனை, டாக்டர் காண்டலேயின் ஜாமீனில் விடுதலை செய்தான். டாக்டர் காண்டலேயுஞ் சீன சுதந்திரச் சரித்திரத்தில் ஸ்திரமான இடம் பெறுகிறான். ஆம். அவன் பெற்ற ஸ்தானம் அவனுக்கு நிச்சயமானதுதான்; நிரந்தரமானதுதான். நட்புரிமையாலும்—சன யாதன் மீதிருந்த அன்பாலும் ஆதர்ஸத்தாலும் மாத்திரந்தான் டாக்டர் காண்டலே சன சேனனை மீட்டினானா? சன சேனனுக்குச் சகாயஞ் செய்தானா? அகில சீனத்திற்குஞ் சன சேனன் வழியாகச் சேவை செய்தான்.

ஆயிரம் பாரங் கல்லைச் சுமப்பவன், ஒரு வசவைத் தாங்க மாட்டானாகில் என்ன பலன்?

* * *

சுதந்திரத்தின் சக்தி கொடுங் கோலினும் வலியது.

* * *

ஏ பணக்காரர்களே! உங்களுக்கு நியாய உணர்ச்சியும், எங்களுக்குத் திருப்தியும் ஏற்பட்டால், உலகில் துயர்கள் நீங்கும்.

* * *

ஏ கிழவி! உன் வெளுத்த கூந்தலைக் கறுப்பாக்கினாலும், உனது வளைந்த முதுகை நிமிர்த்த முடியாது.

—ஸூபி ஸாதி.

பாரத நாட்டின் பண்டைக் கலைகள்.

ஓர் ஆராய்ச்சி.

(181-ம் பக்கத் தொடர்ச்சி.)

திரு. O. P. தேசிகன் அவர்கள்

III.

அரசியற்-பொருளாதாரக் கலைகள்.

பூர்வீக ஹிந்துக்கள் கேவலங் கனவு காணும் வகுப்பின ரல்லர்; அவர்களுடைய முயற்சிகளும், உயர் லட்சியங்க ளனைத்தும் அரிய பாரமார்த்தீக உண்மைகளைக் கண்டறிவதிலேயே முடிவுற்றதாகக் கூறிவிடுவதற்கு மில்லை. மனித வாழ்க்கையின் உன்னதமான லட்சியங்களின் முடிவாம் பேரின்ப நிலையினை அடைவதற்குரிய சாதனங்களை, நுணுகி யாராய்வதில் மட்டுமே யன்றி, உலக வாழ்க்கையின் இன்ப நுகர்ச்சிக் குரித்தான ஒவ்வொரு துறையிலும், அவர்கள் தமது ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தியே வந்துள்ளார்கள். ஆங்கிலேயர் இந் நாட்டிற் காலடி யெடுத்து வைக்கும் வரையில் பூர்வ காலந் தொட்டு, இந் நாட்டில் நிலவி வந்த அரசியற் கொள்கைகளையும், பல் வகைப்பட்ட அரசாங்க அமைப்புகளையும் எடுத்துக்கொள்ளுவோம். பூர்வீக இந்தியச் சரித்திரத்தையும், ஹிந்து தர்ம சாஸ்திரஞர்களுடையவும், அரசியல் வாதிகளுடையவும் ராஜீய சித்தாந்தங்களையுந் துருவி யாராய்ந்து பார்ப்பவர்களுக்குப், "பெறுப்பாட்சி" யென்றும் "ஜனநாயக ஆட்சி" யென்றும், தற்காலத்திய நூலாசிரியர்களால் இன்னும் பல விதங்களாகவும் விளம்பரப் படுத்தப்படும் அரசியல் தத்துவங்கள் அனைத்தும் நமது நாட்டிற்குப் புதுமைக ளல்லவென்றும், அம் முறைகளையே பெரும்பாலும் அனுஸரித்த ஆட்சி முறையும், சம்பிரதாயங்களுந் தொன்று தொட்டு இந் நாட்டில் வேரூன்றி யிருந்து வந்தன என்பதும் சந்தேக மின்றிப் புலனாகும்.

வெகு காலமாக, மேனாடுகளில் இந்தியாவைப் பொறுத்த வரையில் ஓர் தவறான நம்பகம் பரவி வந்துளது. அஃது யாதெனில். இந்தியாவின் குடி மக்கள் யதேச்சாதிகாரத்தையும், கொடுங் கோன்மை

யாட்சியையுந் தவிர வேறு எவ்விதமான ஆட்சி முறையையும் அறிந்திருக்கிறார்க ளில்லை யென்பதேயாம். பல நூற்றுக் கணக்கான வருடங்களாக ஹிந்து மன்னர்கள், தம்மிடம் வழங்கப்பட்டிருந்த நிரங்குசமான அதிகாரத்தை யோர் வரையறை யின்றிச் செலுத்திக் குடிகளைப் பல்காலுஞ் சஹிக்க முடியாத அளவிற்கு வைத்துத் துன்புறுத்தி வந்திருக்கிறார்கள் என்று அவர்கள் மனத்தில் பதியுமாறு,குடில நீதியால் எழுதப்பட்ட பற்பல புத்தகங்களே மேனாடுகளில் இது போழ்து உலவி வருகின்றன. சமீப காலமாக இந்தியச் சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் அறிஞர்கள், அந்த மூட நம்பகம் எவ்வளவு தவறான தென்பதைப் பற்பல மறுக்க முடியாத ஆதாரங்களின் வாயிலாக—உண்மைச் சான்றுகளின் வாயிலாக—மறுத்தும், விளக்கியும் வருகிறார்கள்.

ஹிந்துக்களின் அரசியலில் மன்னர்களின் ஸ்தானம்.

உண்மையில் ஹிந்து அரசர்களின் அதிகாரம், ஓர் வரையறைக் குட்படாத தன்று; அவர்கள் நினைத்தவா றெல்லாந் தமது அதிகாரத்தைச் செலுத்தி, மக்களின் உரிமையை உதாசீனஞ் செய்துவிடவும் முடியாது. அரசனது பதவி உன்னதமான தென்பது பொதுவாக அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்த தாயினும், அவனுடைய பொறுப்பு வாய்ந்த பதவியை நிர்வகிக்கும் விஷயமாக அப்போதைக்கப்போது நானாவிதமான விவஸ்தைகளும், நிர்ப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அரசன் கொடுங்கோன்மை யாளனாக இருப்ப தென்பது ஒருபொழுதுஞ் சாத்தியமான தன்று. அவனுடைய ஒவ்வொரு செய்கையும், அரசாங்க நிர்வாக விஷயமாக அவன் மேற்கொள்ள உத்தேசிக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும்—அவனுடைய மந்திரி சபையையும், மந்திராலோசனைச் சபையையுஞ் சேர்ந்தவர்களுடைய அனுமதியையும், அங்கீகாரத்தையும் முன்னதாகப் பெற வேண்டி யிருந்தது. அன்றியும் அவை பண்டை நாள் தொடங்கி அனுஷ்டானத்தி லிருந்துவருஞ் சம்பிரதாயங்களுக்கும், சட்ட திட்டங்களுக்கும் இணங்கியதாக இருத்தல் வேண்டும். இவைகள் யாவற்றினும் மேலாக. பொது ஜன வாக்கு என்கிற மக்களின் உரிமைச் சாஸனத்தை உல்லங்கனஞ் செய்து, அதை மீறி நடப்ப தென்பது மிகுந்த ஆபத்துகரமானது.

மந்திரி சிரேஷ்டர்களுடைய ஆலோசனையை, உதாசீனஞ் செய்து தனது மனம் போன போக்கில் நடந்தொழுகும் மன்னன் ஓர் கொடுங்கோலனே யாவன். அக் கொடுங்கோன் முறையில் நடந்து வருவதன் காரணமாக, அவன் கொடிய தண்டனைக்கு நிச்சயம் உட்பட

வேண்டியவனே. அந்தத் தண்டனையின் தன்மையுங் கடுமையானதாகவே யிருக்கும். அரசன் அதன் விளைவாகத் தனது இராஜ்யாதிகாரப் பதவியையே ஒருக்கால் இழந்துவிட நேரினும் நேரும். ஹிந்து தர்ம சாஸ்திரிகளிற் சிரேஷ்டமானவராக விளங்கும் மனுவே இவ்வாறு விதித்திருக்கிறார்.

பூர்வீக நூலாசிரியர்களின் அரசியற் சித்தாந்தங்கள்.

சுக்ர நீதிஸாரமென்னும் அரிய ராஜ நீதி சாஸ்திரத்தை யியற்றிய சுக்ராச்சாரியார் இன்னும் ஓரடி முன் செல்லுகிறார். அரசுரிமை—அதாவது பிரஜாதிபத்யம்—என்னும் பதவியின் உயர்வையும், அதனுடைய புனிதத் தன்மையையும் ஒருவாறு ஒப்புக்கொள்வதற்கு அவர் தயங்கவில்லை யாயினும், முக்கியமான அம்ஸங்களிலுங், குணா குணங்களிலும், மனிதனுக்கு மனிதன் வேற்றுமை கற்பிக்கப்படுவதை அவர் அழுத்தமாகக் கண்டிக்கிறார். சமூகத்தில் தனிப்பட்ட ஓர் மனிதன் என்ற முறையில் ஓர் மன்னனை, மற்றவர்களைக் காட்டிலும் எந்த விதத்திலும் விசேஷமான கௌரவத்திற்கு அருகதை யுள்ளவனாகக் கருதுவதற்கு அவரது மனச் சாட்சி சிறிதேனும் இடங்கொடுக்கவில்லை. அப்படி யிருக்க "அரச பீடத்தில் ஏறியவுடன் கேவலம் ஓர் நாய் கூட அரசனைப் போன்று காணப்படுகின்றதல்லவா? கவிச் சிரேட்டர்கள் அரச பதவியை, நாயினும் இழிவானதாகக் கருதி யிருப்பது வாஸ்தவ மல்லவா?" என்று அவர் வினவுகிறார்.

தற்கால அரசியற் பண்டிதர்களால் "ரீக்கால்" (Recall) "திருப்பியழைப்பது"—என்று வழங்கும் ராஜீயக் கோட்பாடுகள் கூட ஹிந்துக்களுக்கு நூதனமான தன்று. சுக்ராச்சாரியார் ஓரிடத்தில் "நூறு மனிதர்களாற் பஹிரங்கமாகக் குற்றஞ் சாட்டப்படும் அதிகாரியை அரசனானவன் தக்ஷணமே தனது பதவியினின்றும் விலக்கவேண்டும்" என்று ஆலோசனை கூறியிருக்கிறார். குடிகளுடைய நலன்களுக்கு விரோதமாக அரசாங்க அதிகாரிகள், தமது அதிகாரத்தைச் செலுத்திவர வொட்டாமல் தடுத்து, அவர்களுக்குத் தமது கடமையையும், பொறுப்பையும் அறிவுறுத்தி, அதிகாரிகள் உண்மையில் பிரஜைகளின் ஊழியர்களே யென்னும் உயரிய தத்துவத்தை அனுபவத்தில் விளக்கிக் காட்டுவதற்கு இதனினுஞ் சிறந்த ராஜீய சாதனம் தேவையில்லை. மக்களின் உரிமைகள் இத்தகைய அநுபவ நெறிகளால்—சட்ட திட்டங்களால்—அரண் செய்யப்பட்டு வந்த தென்பதற்கு இஃதொன்றே போதிய சான்றாகும்.

ராஜநீதி சாஸ்திரங்களை யொட்டி, அரிய நீதி நூல்களை வரைந்த தர்ம சாஸ்திரிகள், பகிரங்கமான ராஜீயப் "புரட்சி"யின் தத்துவங்

களைக்கூட நிர்ப்பயமாகப் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். ஓரரசன் தனது கடமையில் தவறியவனாய், தர்ம நெறி (அறநெறி) பிறழ்ந்தொழுகுவானாயின், அவனை உடனே அப் பதவியினின்றும் அப்புறப்படுத்தி, அவனது ஸ்தானத்தில் தகுதியுள்ள வேறொருவனை நியமனஞ் செய்யவேண்டும் என்கிற முக்கிய தத்துவமானது மிகவும் அழுத்தமாக ஒவ்வொருவராலும் வற்புறுத்தப்பட் டிருக்கிறது. மனுவும், அவருக்குப்பின் தோன்றிய அரசியல் அனுபவவாதிகளும், அரச பதவியானது தர்ம நெறியையும், அரசாங்கச் சட்ட திட்டங்களையுங் காட்டிலும் எந்த விதத்திலும் உயர்ந்ததன்று என்பதை மிகத் தெளிவாக—யாதொரு ஐயத்திற்கு மிடமின்றி—விளக்கியிருக்கிறார்கள். "உண்மையில் அரசன் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் உட்படாமல், குடிகளை வரம்பின்றி வதைத்து, ஹிம்சித்துவருவானாயின், அத்தகைய கொடுங்கோலனைத் தூக்கிவிட வேண்டுமென்றும். அவனது பந்து வர்க்கத்தைச் சேர்ந்தவர் ஒருவரேனும் பாக்கியின்றி இராஜ்யத்தினின்றும் பிரஷ்டம் செய்யப்பட வேண்டும்" "தம் ஹன்யு: ப்ரஜா:" என்பதே பண்டை நூலாசிரியர்கள் கொள்கையாகும்.

இந்த உபதேசங்கள் அனைத்தும் நாம் "காப்பி நோட்டுகளின்" தலைப்பிற் காணும் நீதிமொழிகளைப் போன்றவைகள் அன்று; அவை ஒவ்வொன்றும் மக்கள் சமூகத்தில் அனுஷ்டானத்தில் மிகுந்த பயபக்தியுடன் பின்பற்றி யொழுகிவந்தனவாகும். இந்திய தேச சரித்திரம் முழுவதிலுந் தமது கடமையை மறந்து, தர்ம மார்க்கத்தினின்றும் பிறழ்ந்து, திறமையற்ற விதமாக ராஜ்ய நிர்வாகத்தை நடத்தி, அதனைச் சீர்குலையச் செய்த அரசர்களையும், அதிகாரிகளையும் இராஜ்யத்தினின்றும் விரட்டி, அவர்களது பதவியில் தமது பொறுப்பை நன்குணர்ந்த வேறு பலரை நியமித்திருக்குஞ் சான்றுகள் பல காணக் கிடக்கின்றன. நமது தேச வரலாறுகள் "குடிகளின் ஒருமித்த கோரிக்கையானது ஆண்டவனின் ஆக்ஞையே" என்னும் உண்மையைச் சந்தேகமின்றி விளக்கியிருக்கின்றன. அன்றியுங் கூர்ந்து நோக்குங்கால், மேனாடுகளிற் பிரஜாவுரிமை யென்பது பெயரளவிலேனும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுமானால், இந்தியாவில் அத் தெய்வீக உரிமையானது செயலிலும் வற்புறுத்தப்பட்டு வந்ததென்பது தெளிவாகும்.

எனினும் மனித இயற்கையானது, முதலெடுப்பிலே எதையுஞ் சந்தேகப் பான்மையுடன் நோக்குவது இயல்பே யாதலின், ஹிந்துக்களின் ராஜீயச் சித்தாந்தங்களும், அரசியற் கோட்பாடுகளும் வாஸ்தவத்தில் அனுஷ்டானத்தி லிருந்து வந்தனவா என்று சிலர் வினவக்கூடும். ஹிந்து ராஜ நீதி சாஸ்திரங்களிற் பிரஸ்தாபிக்கப்படும் அர

சியல் தர்மங்களும், குடிகளின் ராஜீய வாழ்க்கையும் முரண்பாடுகளுக் கிடமின்றி ஒன்றோடொன்று பொருந்தியிருந்தனவா? அத்தகைய ஒற்றுமையான அரசியல் வாழ்வு பிரத்தியக்ஷமாக நிலவி வந்திருப்பதற் காதாரங்கள் ஏதேனும் உண்டா? என்று அவர்கள் வினவுகிறார்கள். அத்தகைய சந்தேக மனோபாவங் கொண்டவர்களுக்கு ஐரோப்பாவின் பண்டைச் சரித்திரத்தைச் சிறிது நினைவூட்டுவோம்.

மேனாடுகளில் ஜனநாயகம்.

ஐரோப்பியச் சரித்திரத்தின் வாயிலாக நமக்குத் தெளிவாக விளங்குவது யாதென முதலில் ஆராய்வோம். இந்தியாவின் முற்கால அரசாங்க அமைப்புகளுடன் பண்டைக் காலத்தில் ஐரோப்பாவில் நிலைபெற்றிருந்த அரசியல் ஸ்தாபனங்களை யொப்பிட்டு, இவ் விரண்டையுஞ் சீர்தூக்கிப் பார்ப்பது ருசிகரமானதாக யிருக்கும். ஐரோப்பாவில் ஜனநாயக தத்துவத்தைத் தீவிரமாகப் பிரசாரஞ் செய்துவந்த ராஜீய வாதிகள் பலர் வாழ்ந்துவந்தனர் என்பதை மறுப்பார் ஒருவருமிலர். அதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். எனினும், உண்மையான ஜனநாயக ஆட்சி—அதாவது "விடுதலை யுணர்ச்சி" யென்பது 10-வது நூற்றாண்டிலேதான் பிரான்சு தேசத்திலே மகத்தான அரசாங்கப் புரட்சியி லேற்பட்டு: அதனுடைய விஜய கோஷமானது வானையளாவிய பின்னர்தான் மக்களின் உள்ளத்தில் உதயமாயிற்றென்று கூறவேண்டும். பிரான்சு தேசத்துக் குடிமக்கள் அரசாங்கத்திற்கு விரோதமாக எழும்பிக் கலகம் செய்து வெற்றிபெற்ற பிறகுங்கூட, மெட்டர்னிச் (Metternich) என்னும் உலகப் பிரசித்திவாய்ந்த அரசியல் நிபுணர், "ஐரோப்பியப் பிரஜைகள் விடுதலையை வேண்டுகிறார்களில்லை; அவர்கள் வேண்டுவது அமைதியே," என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார். அரசர்கள் தெய்வீக சம்பந்தம் பெற்றவர்களென்னும் (Devine right of kings), அவர்களுடைய "தெய்வீக;' ஆக்ஞைகளை உல்லங்கனஞ் செய்வது மன்னிக்கத் தகாத குற்றமாகும் என்ற அசட்டு நம்பகம் பல நூற்றாண்டுகளாக மேனாடுகளில் உலவிவந்துள்ளது. 'நவீன ஐரோப்பாவின் ராஜீய-சமூக சரித்திர வரலாறு (The Political and Social History of Modern Europe) என்ற அரிய நூலை யியற்றிய ஆசிரியர் ஹேஸ் (Prof. Hays) என்பவர் "இதுபோழ்து ஜனநாயக தத்துவமானது எங்ஙனம் பெரும்பான்மையான மக்களின் ஆதரவிற்கும் பாராட்டுதலுக்கு முரியதாக இருக்கின்றதோ, அதைப் போலவே அரசர்கள் தெய்வீக உரிமை வாய்ந்தவர்கள் என்னும் தத்துவமும் 17-வது நூற்றாண்டுவரையில் பிரஜைகளாற் பெரிதும் கௌரவிக்கப்பட்டு வந்த"தாகக் குறிப்பிடுகிறார். இங்கிலாந்தில்

தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) என்பவரும் பிரான்சு தேசத்தில் பிஷப் போஸ்ஸெட் (Bousset) என்பவரும் அரசர்களின் யதேச்சாதிகாரத்தைத் தாங்கி நிற்கும் "மஹா உபதேசிகளாகவே" இருந்துவந்திருக்கிறார்கள். நேற்றுவரையில் ஜெர்மனியில், உறுதியான ஆட்சியும், யதேச்சாதிகாரமுமே தலையெடுத்துத் தாண்டவமாடியது. பிரஷியக் கொடுங்கோன்மைக்கு உதாரணம் உலகத்தில் வேறெங்குங் காணப்படுவது அரிது. அன்றியும் கடந்த 2,000 ஆண்டுகளுக் கதிகமாக ஐரோப்பாக் கண்டத்தில் அடிமை வியாபாரமென்பது தங்கு தடையின்றி நடைபெற்று வந்துள்ளது. மேனாட்டை யீடேற்ற வந்த "அவதார புருஷர்களாவது, மதாச்சாரியார்களாவது," அல்லது அத் தேசத்திய ஆசார அனுஷ்டானங்களாவது இக் கொடிய முறையைத் தாக்ஷண்யமின்றிக் கண்டித்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அதற்கு மாறாக, அரசியல் நிபுணர்கள் வழித் தோன்றியவர்களாகத் தம்மைப் பறை சாற்றிக்கொள்ளுந் தற்கால ஐரோப்பியர்களின் மூதாதையர், இக் கொடிய பழக்கத்திற்கு மிகுந்த ஆதரவு அளித்து, அதன்மூலம் மனிதவர்க்கத்தின்பால் தமக்குள்ள ஆழ்ந்த அனுதாபத்தைக் கிரியாம்சையிற் காட்டி வந்திருக்கிறார்கள்! பண்டை யுலகில்—நாகரீகத்தின் அருணோதய காலத்தில்—கலை யுணர்விலும், ஆட்சி முறை போன்ற லௌகிக வியவசாரங்களிலும் மிகச் சிறந்தவர்களாகப் பாராட்டப்படும் கிரேக்கர்களும், ரோம் நாட்டினரும் பந்தமற்ற சுயேச்சை வாழ்க்கையிற் கட்டுக்கடங்காத மோகங் கொண்டவர்களென்றும், பிறரிடம் அடிமைப்பட்டு வாழ்வதில் வெறுப்பு மிகுதியுங் கொள்ளும் இயல்பினரென்றும் அடிக்கடி நமக்குக் கூறப்படுகிறது. ஆனால் அவையனைத்தும் ஏட்டளவில்தான் என்று நாம் கூறக்கூடும். ஏனெனில் "அவர்கள் தாம் பிறர்க் கடிமைப்பட்டு வாழ்வதை வெறுத்து, அவ் விஷயத்தில் மிகவுந் திடச்சித்த முள்ளவர்களாய் இருந்துவந்த போதிலும், தமது சக்தி யனைத்தையும் மனித வர்க்கத்தின் இதர பிரிவினர்களைத் தமக் கடிமைப்படுத்தும் முயற்சியிலேயே பெரிதும் ஈடுபடுத்துவதற்கு அவர்கள் சிறிதுந் தயங்கவில்லை" என்று தாமஸ் பெய்ன் (Thomas Pain) என்னும் அமெரிக்க அரசியற் சாஸ்திரியார், அவர்களைப்பற்றி உரைக்கிறார். பண்டைக்கால ரோம் ராஜ்யத்தை ஓர் பெரிய ஏகாதிபத்தியமாகவே வருணிக்கத்தகும். அது விஸ்தீரணத்தில் மிகப் பரந்ததாகப் புகழிலும், மேன்மையிலும் மிகச் சிறப்புற்று விளங்கியது உண்மையே. எனினும் அதனுடைய அமைப்பிற் குறிப்பிடத்தக்க விசேஷம் யாதெனில் அது தம்பால் வெற்றிகொள்ளப்பட்ட நாட்டுக் குடிமக்கள்மீது அடிமைத்தனம் என்னும் இரும்புத் தளைகளைத் திணிப்பதிலே நாட்டங் கொண்டதும், செல்வாக்கும் வலிமையும் மிகுந்ததுமான அரசாங்க

உறுப்புகள் பலவற்றின் சேர்க்கையினுலாய ஓர் சமஷ்டி அரசாங்கமே" என்பதேயாம்.—(The World's Debt to India—Dr. Sudhindra Bose, Modern Review, 1920)

ஆங்கிலச் சரித்திராசிரியரான **கிப்பன் (Gibbon)** என்பவர் உரோம ராஜ்யத்தில் ஓர் காலத்தில் 6,00,00,000-க்கு மேற்பட்ட அடிமை மக்கள் வாழ்ந்திருந்ததாகக் கணக்கிட்டிருக்கிறார்.

பண்டைக் கிரீஸ் தேசத்தின் நிலைமையோ இதனினும் மோசமானது. உரோம தேசத்தைக் காட்டிலும் ஜன நாயக ஆட்சி முறையைக் கருதிய வரையில் கிரேக்க நாடு எவ்விதத்திலும் மேம்பட்டதாக யிருக்கவில்லை. ஆங்கிலத்தில் "டேமாக்ரஸி"(Democracy) என்று வழங்கும் பதம், கிரேக்க மொழியினின்றும் தோன்றியதேயாகும். அந்த வார்த்தை "குடிகளின் ஆட்சி" என்று பொருள்படும். ஆனால் உண்மையில் நடந்த தென்ன? கிரேக்கர்கள் சர்வ ஜன ஆட்சியைத் தமது அரசாங்கத்தின் முடிவான லட்சியமாக ஒருபொழுதுங் கருதியதே கிடையாது. சுயேட்சை வாய்ந்த பிரஜைகளின் ஆட்சியையே (Rule of the free citizans) அவர்கள் நடத்தி வந்தார்கள். அத்தகைய பிரஜா உரிமை யளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைதான் யாது? ஏதென்ஸ் ராஜ்யம் முதன் முதலர்க ஸ்தாபிக்கப் பட்டபோது, சில ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கு மாத்திரமே பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருந்தது. பெரிக்ளீஸ் (Pericles) என்பவரது நாட்களில் அந் நகரில் 20.000 சுயேட்சை வாய்ந்த பிரஜைகள்தான் இருந்ததாகவும், அதே காலத்தில் அடிமை வாழ்வு வாழ்ந்துவந்த மக்களின் எண்ணிக்கை 2,00,000-க்கு மேற்பட்டிருந்ததாகவும் ஓர் வரலாற்றினால் தெரிய வருகிறது. இந்த அடிமை மக்களுக்கு எவ்விதமான உரிமையுங் கிடையாது. அவர்கள் ஆளுங் கணத்தாரையாவது, குடி மக்களின் இனத்தையாவது சேர்ந்தவர்க ளல்லர். அவர்களுக்கு ராஜீய உரிமைகளுக்காவது, பிரஜா உரிமைகளுக்காவது இவை யொன்றுக்கும் பாத்தியங் கொண்டாட முடியாது. 19-வது நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் அடிமைத்தன மென்பது, மேனாடுகளிற் சட்டபூர்வமாய் அங்கீகரிக்கப் பட்டதோர் ஸ்தாபனமாகவே விளங்கி வந்தது. இப் பெருந் தீமையை யொழிக்க, அதுவரையில் யாதொரு உண்மையான—மனப் பூர்வமான—முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவேயில்லை யென்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலே கூறியவைகளனைத்தையுந் தொகுத்துக் கூறுங்கால், மேனாட்டு அரசியல் தத்துவங்களுக்கும், பிரஜைகளின் அரசியல் வாழ்க்கைக்கு மிடையே வேறுபாடுகளும், முரண்பாடுகளுங் காணப்படுவது சகஜமாக யிருப்பின் இந்தியாவிலும் அவ்விதம் இருக்கக்கூடுமே யொழிய,

197885

அதையொரு காரணமாகக் கருதி நமது தேசத்தின் பூர்வீக அரசாட்சி முறைகளைக் குறித்து, மேனாட்டினர் [illegible] குறை கூறுவதற் கிடமில்லையென்பது தெளிவாக விளங்கும்.

பூர்வ இந்தியக் குடியரசு நாடுகள்.

நாம் இன்னும் ஓரடி முன் சென்று இந்தியாவிற் குடியரசாட்சி முறையே பரிபூர்ணமாக நிலவி வந்ததென்பதைக் கூசாமல் உரைக்க முடியும். பண்டை நாள் தொட்டு நமது தேசத்திற் பற்பல குடியரசு நாடுகள் தோன்றி, பொறுப்பாட்சியை யாதாரமாகக் கொண்ட நிர்வாகத்தை நடத்தி வந்திருக்கின்றன. ஸ்ரீமான்கள் **வினய குமார சர்க்கார், காசிப்ரஸாத் ஜயஸ்வால், R. C. மஜூம்தார், அவினச சந்திர தாஸ், முகந்தி லால்** முதலிய அறிஞர்கள் கிறிஸ்து ஜெனிப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கும் முன்னரே பரிபூர்ண சுயேட்சையுடன் கூடியதும், பிறருக்குப் பணிந்து ஓரளவு உள் நாட்டுச் சுயேச்சாதிகாரத்துடன் திருப்தி யடைந்ததுமான பற்பல குடியரசு ஸ்தாபனங்கள் நமது நாட்டில் ஏற்பட்டுத் தமது அதிகாரத்தைச் செலுத்தி வந்திருப்பதாகத் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்திருக்கிறார்கள். பௌத்த ஜைன மத நூல்களில் மட்டுமே யன்றி இந்தியாவைப் பற்றி கிரேக்க லத்தீன் நூல்களிற் காணப்படுங் குறிப்புகளி லிருந்தும், இராமாயண, பாரத காவியங்களிலும், ராஜநீதி சாஸ்திரங்களிலும் அவைகளைப் பற்றி விவரமான தகவல்களைக் காணலாகும்.

கி. மு. 326-ஆம் ஆண்டில், அலெக்ஜாந்தர் அரசன், இத் தேசத்தின் மீது படையெடுத்து வந்தபோது, அதுகாலை பஞ்சாபிலும், ஸிந்துவிலும் ஆட்சி புரிந்து வந்த குடியரசு நாடுகளை யெதிர்த்துப் போராடித், தனது பலாபலத்தை யளவிடவேண்டி யிருந்தது.

இந்தக் குடியரசுகளின் பிற்காலச் சரித்திரம் யாதாயிற்று என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதிலளிப்பதுஞ் சிரமமானதன்று. பூர்வீகக் கிரேக்கக் குடியரசுகள், நாளுக்கு நாள் செல்வாக்கு மிகுதியுற்று வளர்ச்சி யடைந்துகொண்டே வந்த மாஸிடோனிய ஏகாதிபத்தியத்துடன் எங்ஙனம் இணைக்கப்பட்டனவோ, அங்ஙனமே இந்தக் குடியரசுகளும், மகத்தான மகத ராஜ்யத்தோடு ஐக்கியமாகிவிட்டன. (பூர்வீக இந்தியக் குடியரசு நாடுகளைப் பற்றிய விவரங்களை இவ் வாசிரியரால் சுதேச மித்திரன் பத்திரிகையில், தொடர்ச்சியாகச் சென்ற 5—7—30, 8—7—30, 25—7—30, 2—8—30, 5—8—30-ம் தேதிகளில் எழுதப்பட்ட கட்டுரைகளிற் காண்க).

மிகுந்த சுயேட்சை வாய்ந்திருந்த இக் குடியரசுகள் (Republics) இந்திய தேச சரித்திர அரங்கத்தினின்றும் மறைந்தவுடன், தேசமெங்கும் பலவாறாகச் சிதறுண்டு கிடந்த 'கிராமக் குடியரசுகள்' அதன் ஸ்தானத்தை வகித்து வந்தன. கிராமாந்தரக் குடியரசுகள் அல்லது 'சமுதாயங்களை'க், கிரேக்கர்களின் நகரக் குடியரசுகளுக்கு (City States) ஒருவாறாக ஒப்பிட்டுக் கூறலாம். கிராமாந்தரங்களை நிர்வகித்துவரும் விஷயத்தில் இவைகளுக்குப் பரிபூரண சுயேச்சை—அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. சிறப்பாக உள் நாட்டு நிர்வாகம், ஸ்தல சுய ஆட்சி இவ்விரண்டும் பெரும்பாலும் இக் கிராமச் சமுதாயங்களிடமே ஒப்புவிக்கப்பட்டிருந்தன. இதனிடையே அரசாட்சிக் கரம் உருண்டுருண்டு எத்தனை கை மாறிடினும், ஆங்கில ஆட்சி இந் நாட்டில் உறுதிப்படும் வரையில், அவைகளுடைய நிர்வாகமே தேசமெங்கும் மேலோங்கி யிருந்தது. அதன் பிறகு இங்கே நாம் குறிப்பிடுவதற்கியலாத காரணங்களால் நெடுங் காலமாய் நிலைபெற்றிருந்த அவ் வேற்பாடுகளும், கிராம அமைப்புஞ் சீர்குலைந்து, உருமாறிப் போயிற்று. மிஸ்டர் ஹாவெல் (Havell) என்பவர் "இந்தியாவில் ஆரிய ஆட்சியின் சரித்திரம்" (History of Aryan Rule in India) என்று தம்மா லியற்றப்பட்ட புத்தகத்தில் அதைப்பற்றிக் கூறுங்கால் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"மேனாட்டுப் பார்லிமெண்டுக்குத் தாயகம் என்று அழைக்கப்படும் ஆங்கிலப் பாராளு மன்ற அன்னைக்கு, இந்தியாவில் மிகவும் நெருங்கிய ஆரிய உறவினள் ஒருத்தி யிருந்தனளென்பதை யறிய இதைப் படிக்கும் வாசகர்களிற் பலர் வியப்புறுவார்கள்; இவ்விரண்டிற்கு மிடையே காணப்படும் ஒற்றுமை மிகவுங் குறிப்பிடத்தக்கது. அந்த ஆரிய மாதாவின் வழித் தோன்றியவர்கள் நார்மானியர்கள் (Normans) இங்கிலாந்தை ஜெயிப்பதற்கு முன்னமேயே ஏராளமான சக்தியும், வலிமையும் படைத்ததோர் வல்லரசு நாட்டினராக உலகிற் பிரசித்தி பெற்றிருந்தார்கள்"

மேலே கூறியவைகளிலிருந்து நவீன நாகரீகத்தில், முற்போக்கின் சிறந்த அறிகுறியாகவும், உறுதியான அஸ்திவாரமாகவுங் கருதப்படும் பொறுப்பாட்சி முறையானது எத்தனையோ காலமாக ஹிந்துஸ்தானத்தில் நிலைபெற்று வந்துள்ளதென்று சந்தேகமின்றி விளங்கும். ஹிந்துக்கள் புராதனப் பழக்க வழக்கங்களாலும், அனுபவ அரசியல் ஸ்தாபனங்களை யமைத்து அவைகளைத் திறம்பட நிர்வகித்து வந்திருப்பதாலும், பொறுப்பாட்சிக்குத் தம்மை எவ்விதத்திலுந் தகுதி யுள்ளவர்களே யென்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

ராஜ நீதி சாஸ்திரம்.

பாரத நாட்டின் பண்டைச் சரித்திரத்திற் சிறியனவும், பெரியனவுமான பற்பல அரசியற் கூறவயவங்கள்—சிற்றூர்கள் பல ஒன்று சேர்ந்த குறுநிலப் பகுதிகள் முதல், உலக வல்லரசுகளில் ஒன்றாக விளங்கிய ஏகாதிபத்தியங்கள் வரை—ஏற்றத்தாழ்வுள்ள நிலப் பரப்புகள் பல தோன்றி ஆட்சி நடந்துவந்திருப்பதை நாமறிவோம். ஆதலின் அவைகளை நிர்வகிக்கும் விஷயமாகவும், குடிமக்களின் சமூக வாழ்க்கையை யோர் நெறிப்படுத்தி, அவர்களை யோர் ஹத்துக் குட்படுத்தவும், அனுபவசாத்யமான முறைகளைக் கையாண்டு வரும் முயற்சியிற் பூர்வகாலந்தொட்டு அறிஞர்களும், அரசர்களும் பெரிதும் ஈடுபட்டிருத்தல் வேண்டுமென்பதில் ஐயமில்லை. அரசியல் வாழ்க்கை யென்பது மக்களின் ராஜீய, சமூக, பொருளாதார வாழ்வையே பெரிதுங் குறிப்பிடுவதாகும். இத்தகைய அருமுயற்சியிலீடுபட்ட அறிஞர்கள், தமது அனுபவ ஞானத்தை "ராஜநீதி சாஸ்திரம், நீதிஸாரம், தண்டநீதி" என்ற பல்வகைப் பெயரினால் எழுதிவைத்தனர். அவைகளிற் கண்ட, நீதி நெறியையும், உபதேசங்களையு மொட்டியே ராஜ்ய பரிபாலனம் நடந்து வந்துள்ளது. பூர்வீக ஹிந்துக்கள் ராஜ நீதி சாஸ்திரத்தையே மற்றவைகள் யாவற்றினும் உயர் கலையாகக் கருதிப் போற்றி வந்தனர். ராஜ நீதி சாஸ்திரத்திலே தண்ட நீதி, வார்த்த சாஸ்திரம் (பொருளாதார சாஸ்திரம்) ஆகிய இரண்டும் அடங்கியுள்ளன.

நமது தேசச் சரித்திர நிகழ்ச்சிகளைச் சூழ்ந்திருக்கும் பேரிருளை—இறந்தகால மென்னும் இருட் டிரையை விலக்குஞ் சரித்திர நூல்கள் அவ்வளவாக இல்லையாயினும், ராஜீயப் பொருளாதார நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. ராஜ நீதியைப் பிரசாரஞ் செய்துவந்த தனிப்பட்ட சிரேஷ்டர்களைத் தவிர, பற்பல 'கோஷ்டிகளும்' இருந்துவந்தார்கள். அவர்களால் வரையப்பட்ட நூல்களிற் பெரும்பான்மையானவை காலப்போக்கில் மறைவுற்றன. எனினுங் காரிருளிடையே கதிரொளி யிலங்குவதுபோன்று, பூர்வீக இந்திய அரசியல் வானத்தைத் தமது அறிவுச் சுடரொளியால் அலங்கரித்த, அரசியற் சிரேஷ்டர்களுடைய பெயர்களும், அவர்களுடைய சிந்தனை வலிமை நிறைந்த உள்ளத்தினின்றும் எழும்பிய, விழுமிய கருத்துக்களை யடக்கிக்கொண்டிருக்குங் கிரந்தங்களும், சிலவேனும் இது போது நமக்குக் கிடைப்பதாயிருப்பது நமது பாக்கியமேயாகும். அவைகளை ஆய்ந்து வெளிப்படுத்தும் பிரயத்தனங்களைத் தளர்து ஊக்கத்துடன் நடத்திவருவோர் நீடூழி வாழ்க!

இந்தியாவின் அரசியற் சிரேஷ்டர்கள்.

பூர்வீக இந்திய அரசியல் வாதிகளின் அணியிலே, "மாணவர்கள், பார்ஹஸ்பத்யர்கள், ஔசானஸர்கள், அம்பியர்கள், பாராசரர்கள்போன்ற அரசியற் 'கோஷ்டியை'ச் சேர்ந்தவர்களைத் தவிர பரத்வாஜர், விசாலாக்ஷர், பிசுனர், கௌனபதந்தர், வாதவ்யாதி, பாஹுதந்திபுத்ரன் முதலியவர்கள் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தவர்கள். அதற்கடுத்த படியாக மனு, வியாஸர், சுக்ரன், யாக்ஞவல்கியர், காமந்தகர், ஸோமதேவர், நீலகண்டன் என்பவர்களைக் குறிப்பிடலாம். சமீப காலத்திற்கூட ராமதாஸ், வித்யாரண்யர் போன்ற துறவிகள் அரசாங்கப் புனருத்தாரணத்தில் தமது கவலையைச் செலுத்தித், தேசத்தில் மகத்தான அரசாங்க மாறுதல்களைத் தோற்றுவித்திருப்பது வெளிப்படையாகும்.

கௌடில்யரும் காமந்தகரும்.

பாரத நாட்டிலே முதன் முதலாக மகத்தானதோர் ஏகாதிபத்தியத்தை யமைத்து, விஸ்தாரப் பரப்பிலும், ஆட்சி முறையின் நேர்மையிலும், அக் காலத்தில் உலகத்திலுள்ள நாடுகளில் தம்மினும் மிக்கார் ஒருவரு மில்லையெனப் பிரசித்திபெற்று, மகத ராஜ்ய சிம்மாசனத்தினின்றும் ஓர் தனிக் குடையின் கீழ் சற்றேறக்குறைய இந்தியா முழுவதையும் ஆட்சிபுரிந்த மௌரிய வம்சத்து மன்னனும் சந்திரகுப்த சக்கிரவர்த்தியின் இணையற்ற மந்திரி சிரேஷ்டரான கௌடில்யர் எனப் பெயர் வழங்குஞ் சாணக்கியருடைய பெருமையைக் குறிப்பிடாவிடில், அரசியற் கலையைப்பற்றி யெழுதப்படும் இக் கட்டுரை பூர்த்தியானதாகமாட்டாது. ஏனெனில் இதுவரையில் உலகங் கண்ட அரசியல் நிபுணர்களில் அவருக்கிணையாக மிகச் சிலரே யிருக்கக்கூடும். அவரால் எழுதப்பட்ட "அர்த்த சாஸ்திரம்" இந்திய தேச சரித்திரத்தின் மிகச் சிரேஷ்டமான பகுதி யொன்றின் நிலைமையைக் குறித்து விரிவான செய்திகளை வெளியிடும் அரசாங்கச் சரித்திர நூலாகும். அன்றியும் உலகம் போற்றும் பெரியார் ஒருவரின் அற்புதமான ஆராய்ச்சி—அனுபவ சாஸ்திரமுமாகும்.

மகத்தான இவ்வரிய நூலிற், சந்திரகுப்த மன்னனின் பொக்கிஷ மந்திரி பதவி யேற்றிருந்த கௌடில்யர், அக் காலத்திற் குடிமக்களின் ராஜீய வாழ்க்கையின் பற்பல அம்சங்களின் தன்மையைக் குறித்து விசேஷமாக எடுத்துக் கூறுகிறார். அன்றியும் பற்பல தேசங்களுக்குமிடையே யிருக்கவேண்டிய உறவின்முறை, ராணுவ சாஸ்திரம் (போர்க் கலை), வியாபாரம், கைத்தொழில், சுரங்க வேலைகள், உலோக சாஸ்திரம் முதலியவைகளைப்பற்றி அர்த்த சாஸ்திரத்-

தில் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் நீர்ப்பாசன வசதிகள், தொழிற்சாலை யேற்படுத்துவது, மேய்ச்சல் தரையையும் காடுகளையும் ஒதுக்கி வைப்பது, ஜலாதாரப் போக்குவரத்து வசதிகள், கடற் சுங்கம், ரஸ்தாக்கள், கடை, கடைத் தெருக்கள், ஏரிக்கரைகள், அணைகள், வாராவதிகள் மராமத்து, நந்தவனம், தோப்பு, துறவு, ஓஷதிகள், கால்நடை இலாகா, பஞ்சம், ஜனக் கணிதி, நகராட்சி போன்ற விஷயங்கள் அனைத்தையும் அவரது புத்தகத்திற் காணலாம்.

ஆரம்பத்திற் சாமான்யச் சிற்றரசு நாடுகளில் ஒன்றாக இருந்த மகத ராஜ்யத்தை, உலக வல்லரசு நாடுகளின் மதிப்புக்கு உயர்த்தித் தற்காலம் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற் குட்பட்டிருக்கும் பிரதேசங்களின் விஸ்தீரணத்திற்குச் சமமாயுள்ளதோர் நிலப் பரப்பைத் திறமையுடன் பரிபாலித்து வருவதற்கேற்ற அரசியலமைப்பைத் தயாரித்து, அரசாட்சி யந்திரம் முன்னிலும் நேர்மையாகவும், ஒழுங்காகவும் இயங்கிவருமாறு செய்வதற்குக் கௌடில்யரது அர்த்த சாஸ்திரம் எத்துணை அருந்துணைக் கருவியாக அமைந்திருக்க வேண்டுமென்பதை இப்போது மறுப்பார் ஒருவருமிலர்.

"காமந்தக நீதிஸாரம்" அர்த்த சாஸ்திரத்தின் வழிநூலேயாகும். அதை அர்த்த சாஸ்திரத்தின் சுருக்கமான மறுபதிப்பென்றுகூட ஒருவாறு கூறிவிடலாம். அதனை இயற்றியவர் சாணக்கியரின் சீடர்களில் ஒருவராக இருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். சமூக நூலாகக் கருதுங்கால் காமந்தகிய நீதிசாரத்தில், கௌடில்யரது அர்த்த சாஸ்திரத்தைக் காட்டிலும் விசேஷமாக ஒன்றுங் காணப்படவில்லையாயினும், கௌடில்யரது "ம்ண்டல நியாயத்"தைப்பற்றி விவரமான குறிப்புகள் அதில் காணப்படுவதால், இரண்டோர் அம்சங்களில் இந் நூல் அதிக மதிப்பிடற்குரியதாக இருக்கிறது.

சுக்ர நீதிஸாரம்.

உசானஸ் என்பவரால் எழுதப்பட்ட சாஸ்திரத்திற்குச் "சுக்ர நீதிஸாரம்" எனப் பெயர் வழங்குகிறது. ராஜ நீதி சாஸ்திர விவகாரங்களில் தமது அறிவைச் செலுத்திய ரிஷிகளின் கோஷ்டியிற் கடைசியானவர் சுக்ராச்சாரியர் அல்லது உசானஸ் என்பவரே. சுக்ராச்சாரியார் இவ் வுலகிலுள்ள "ராஜ குருக்களின்" ஸ்தானத்திலே, முதற் பதவியில் வீற்றிருக்கத் தகுந்தவராவர். அவருடைய நீதிஸாரம் ஒன்றே "ராஜாதி ராஜாக்களுக்கும், ராஜ தந்திரிகளுக்கும் வழி காட்டுஞ் சிறந்த நூலென்றும், அதிற் கண்ட அரசியல் தர்மங்களையே அரசர்களும் ஏனையோரும் உதாரணமாகக் கொள்ளவேண்டுமென்றும்" கூறப்பட்டிருக்கிறது.

நூற் பெருக்கத்திலும், பொருட் செறிவிலுஞ் சுக்ரநீதி ஸாரத்திற் கிணையாகக் கூறக்கூடிய கிரந்தங்கள் நமது தேசத்தில் மிக மிகச் சிலவே யுள. சுக்ரநீதி ஸாரத்தை யவ்வளவு புராதனக் கிரந்தமாகக் கருதுவதற்கில்லை யாயினும், காமந்தக நீதி சாஸ்திரத்தைக் காட்டிலும் ஒரு படி உயர்ந்ததாகவே கூறலாம்.

அரசியற்-பொருளாதார நூல்கள்.

நீதி சாஸ்திரங்களின் தர்மங்களை விளம்பரப்படுத்துங் கிரந்தங்கள் ஏராளமாக உள. அவைகளைப் பாகுபாடு செய்து, அவைகளின் ஏற்றத் தாழ்வைக் குறிப்பிடுவது இக் கட்டுரையின் நோக்கமன்று. நாமறிந்தவரையிற் சுக்ரநீதி ஸாரமும், போஜ மன்னனால் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் "யுக்தி கல்பதருவும்" சமூகப் பொருளாதார, ஸமூக—ராஜீய இயல்புகளைப் பற்றி யுரைக்கும் நூல்களின் இனத்திலே மிகவும் உயர்ந்தனவாகக் கருதப்படக் கூடியவைகளாகும்.

இவைகளே யன்றி வடமொழிக் கிரந்தங்கள் பலவற்றில் அக்காலத்திய ஹிந்துக்களிடையே நிலவி வந்த அரசியற் கொள்கைகளைப் பற்றியும், பொருளாதார வாழ்க்கையைப் பற்றியும் அளவற்ற குறிப்புகள் செறிந்து கிடக்கின்றன. நீதி சாஸ்திரத்தைப் பற்றிய வரையில், இந்தியாவின் முதல் பிரஜாபதியும், தர்ம சாஸ்திரியுமான மனுவினால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் "மனு ஸம்ஹிதையிலும், யாக்ஞவல்கிய ஸ்மிருதியிலும் பற்பல சட்ட வியவகாரங்களும் அரசியல் நுட்பங்களும் அடங்கி யிருப்பதைக் காணலாம். மேலும் ராமாயண, மஹா பாரத காவியங்களிலும், பஞ்ச தந்திரம், ரகு வம்ஸம், கிராதார்ஜ்ஜுனியம், ஹிதோபதேசம், தசகுமார சரித்திரம், தனுர் வேதம் முதலியவைகளில் அருமையான அநுபவக் குறிப்புகள் பொதிந்து கிடக்கின்றன.

மேற் கூறியவைகளைத் தவிர நீதிப்ரகாசிகை, ஹரிவம்சம், உற்பல பரிமாலா, சரணவ்யூகம், க்ருஷ்ண வித்யாப்யாஸ ப்ரகரணம், ஸங்கல்ப சூர்யோதயம், ப்ரஸங்க ரத்னாவளி, வாத்ஸாயனர் காம சூத்ரம், விதுர நீதி, வைஸம்பாயன நீதி, ப்ருஹத்ஸம்ஹிதை, கடகர்ப்பர நீதி சாஸ்திரம், நீதிவாக்யாம்ருதம், ஜைன நூல்களான நந்தி சூத்ரம், ரிஷிமண்டல ப்ரகரண விருத்தி முதலிய அருமையான கிரந்தங்களில் ராஜீய சம்பந்தமான நுட்பங்கள் பரந்து கிடக்கின்றன. (சுதேச மித்திரன் பத்திரிகையின் 19—8—31, 5—9—31, 7—9—31 வெளியீடுகளில் 'ராஜ நீதி சாஸ்திரம்' என்ற தலைப்பில் இவ் வாசிரியரால் எழுதப்பட்ட கட்[illegible] [illegible]க் கூறப்பட்டுள்ளது.)

டாக்டர் சாமுவேல் ஜான்ஸன்.

திரு. பரமசிவம் அவர்கள்.

இவ் வுலகில் ஓர் நூலாசிரியரின் பெயர் பெரும்பாலும் அவராக்கிய நூல்களைக் கொண்டே நிலைபெறுகிறது. நாடக உலகத்திற்குக் கவிச் சக்கரவர்த்தி ஷேக்ஸ்பியர், நினைப் புலகத்திற்கு மஹாத்மா திருவள்ளுவர். அவர்களின் கீர்த்தி ஒவ்வொரு நூற்றாண்டும் வளர்ந்து கொண்டு போவது அவர்கள் சாசனஞ் செய்து சென்ற நூல்களின் உயர்வாலும், பெருக்கத்தாலுமே. அவர்களுடைய ஜீவிய சரித்திரங்களை அள்ளள்ளி அறியும் பாக்கியம் உலகிற்குக் கிடைக்கவில்லை. ஜான்ஸன் எழுதிய நூல்களோ சில; அவற்றிலும் வெகு சிலவே இன்று விரும்பிக் கற்கப்படுகின்றன. ஆனால் அவருடைய பெயர் இவ்வளவு பிரஸ்தாபம் பெறக் காரணம், அவரது ஜீவியச் சரிதம் மிக மிக விரிவாக பாஸ்வெல் என்பவரால் எழுதப்பட்டதேயாகும். இப் புவியில் வேறெந்த நூலாசிரியருடைய ஜீவிதமும், ஜான்ஸன் சரிதம்போல் விரிவாக எழுதப்படவில்லை. ஜான்ஸனை வியந்த பாஸ்வெல், அவரது திருவாக்கிலிருந்து உதிர்ந்த நறுமணங் கமழும் வாடா மலர்களை, அவ்வப்போது சேகரித்துவைத்துப் பின், அவைகளை ஜான்ஸன் சரிதத்தில் தெளித்து வைத்திருக்கிறார். அக்கால மாந்தர், ஜான்ஸனுடைய சுஜ்ஞசம்பங்களையும், வாக்கு வன்மையையும் புகழ்ந்ததுபோன்றே இக்கால மக்களும், பேசும் படக் காட்சியே

இந்தியர்களின் அரசியல் அறிவைப் பற்றி நன்கறிந்துகொள்ள வேண்டுமானால் நமது மூதாதையர்களின் சிரேஷ்டமான கிரந்தங்களாகிய காவியங்கள், புராணங்கள், நாட்டிய சாஸ்திரங்கள், கதைகள், தந்திர நூல்கள், வாஸ்து வித்யைகள், சிற்ப சாஸ்திரங்கள், அர்த்த சாஸ்திரங்கள், நீதி சாஸ்திரங்கள், தர்மச் சூத்ரங்கள், ஸ்மிருதி சாஸ்திரங்கள் முதலியவற்றைச் சரித்திர—சமூகப்—பொருளாதார நூல்களாக ஆராய்ந்து நோக்குவோருக்குப், பூர்வீக ஹிந்துக்களின் அரசிய லறிவு எத்தகைய மாண்புடையதாக இருந்திருக்க வேண்டுமென்பதும், அதனுடைய அளவற்ற பெருமையும் உள்ளங் கை நெல்லிக் கனியென விளங்கும்.

போல், அவரை அப் புத்தகத்திற் கண்ணுற்று வியந்து போற்றுகிறார்கள். ஜான்ஸனின் சரிதம், பாஸ்வெலின் புகழை நாட்டினது மன்றி, ஜான்ஸனின் கீர்த்தியையும் எவ்வளவோ ஓங்கும்படி செய்திருக்கிறது. பாஸ்வெல் இல்லாவிடில் ஜான்ஸன் பெயர் ஆங்கில இலக்கிய வுலகில் இவ்வளவு பிரசித்தமாயிராது. எனவே ஜான்ஸன் தமிழ் உலகத்தில் அறிமுகஞ் செய்யப்படவேண்டியவன் என்பதோர்ந்து இஃது எழுதுகிறோம்.

இளமை.

கடலாடை யணிந்த இங்கிலாந்தில், லிச்பீல்டு என்னும் கிராமத்தில், ஓர் எளிய குடும்பத்தில், 1709-ம் வருஷத்தில் ஜான்ஸன் பிறந்தார். அவருடைய தந்தை ஓர் புத்தக வியாபாரி. அத்தொழிலால் வருஞ் சிறு வருவாயைக்கொண்டு, குடும்பக் காலக்ஷேபம் நடந்துவந்தது. அக்காலத்தில் டோரிக் கட்சி (Tory), விக் கட்சி (Whig) ஆகிய இரு அரசியற் கட்சிகள் இங்கிலாந்தில் இருந்தன. முன்னது அரசியல், மதம், சமூகம் ஆகிய சகல துறைகளிலுஞ் சீர்திருத்தம் வேண்டாது, அரசனை ஆதரித்து நின்ற யதாபூர்விகளின் கட்சி; பின்னது சகல துறைகளிலும் மாற்றம் வேண்டி, ஜனநாயக ஆட்சியை விரும்பிக் கிளர்ச்சி செய்த சீர்திருத்தக் கூட்டம். ஜான்ஸனுடைய தகப்பனார் டோரிக் கட்சியை பலமாக ஆதரித்தார். இவருடைய தாயார் தினந்தோறுந் தவறாது விவிலிய வேதத்தை (Bible) வாசிக்குந் தெய்வ பக்தி வாய்ந்தவர். ஜான்ஸனுந் தாய் தந்தையரின் அரும்பெருங் குணங்கள் அமையப்பெற்று, சுடர் விளக்கெனப் பிரகாசித்தா ரென்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை. ஏனெனிற் பெற்றோரைப் போலல்லவா பிள்ளை!

ஜான்ஸன் லிச்பீல்டிலுள்ள ஓர் பள்ளியிற் கல்வி பயின்றார். அங்கு ஆங்கிலத்துடன் லத்தீன், கிரேக்க பாஷைகளுங் கற்பிக்கப்பட்டன. "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்கிற முதுமொழிக் கிணங்கக் கல்வியின்மேலுள்ள ஆர்வமேலீட்டால், ஜான்ஸன் சிறுவர்களோடு விளையாடத் தானுஞ் செல்லாமல், சதா புத்தகமுங் கையுமாக விருப்பார். புத்தகப் புழுக்களுக்கு (Book-worms) மாணவர் உலகில் மதிப்புக் கிடையாது. ஆனால் கலைவாணியின் கடாட்சம் பெற்ற ஜான்ஸனுக்கு, மாணவர்கள் மட்டுமிதமின்றி மரியாதை செய்தார்கள். நண்பர்கள் இவர்மீதெழுந்த அபிமான மிகுதியால் வீட்டுக்கு வந்து அவரைப் பள்ளிக்கூடத்திற்குத் தூக்கிக்கொண்டு செல்வது வழக்கம். ஒருநாள் ஜான்ஸனுடைய தாயார் கிறிஸ்து புராணத்திற் சில வசனங்களை மனனம் செய்யக் கட்டளையிட்டுவிட்டு மேல்மாடிக்குச் செல்லச் சில படிகள் ஏறுவதற்குள் இவர் அவ் வசனங்களை மனப்பாடஞ் செய்துவிட்டதாகக் கூவி

யழைத்துக்கொண்டு பின்தொடர்ந்தார். அவ் வசனங்களை இருமுறைதானும் வாசிக்க நேரமிருந்திராது. என்றாலும் பாடஞ் செய்துவிட்டார். இந்த அபார ஞாபக சக்திதான் அவருடைய வாழ்வின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

பதினாறாவது வயதிற் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தவுடன், ஜான்ஸன் கல்லூரியிற் சேராது, இரண்டு வருடகாலம் வீட்டில் வீணாவிருந்தார். இக் காலத்திலேயே தன் தகப்பனாரின் கடையிலிருந்த அநேக ஆங்கிலப் புத்தகங்களையும், கிரேக்க, லத்தீன் நூல்களையும் ஜான்ஸன் ஆர்வத்துடன் வாசித்துத் தனது கல்வியறிவை வளர்த்துக்கொண்டார். இவரது மனம் ஓட்டைப் பாத்திரம் போன்றிராது, படித்த விஷயங்களை மறவாமல் தன்னதாக்கி வைத்துக்கொண்டது. ஐம்பத்து மூன்றாம் வயதில், "எனது பதினெட்டாம் பிராயத்தில் நான் படித்ததிற்கு மேல் அதிகமாக ஒன்றையும் வாசித்ததில்லை" எனச் செப்பினார். சுயபடிப்பே கல்விச்சாலைகளிற் பயில்வதைப்பார்க்கிலும் மேலானது. கவி சிரேஷ்டர் ரவீந்திரநாத தாகூர் எந்தச் சர்வகலாசாலையிற் படித்துத் தேர்ந்தவர்? கலாசாலைக் கல்வியால் மாணவர் மனம் ஒருவாறு பண்படுகிறதென்றும், அப்படிப்பு முடிந்த வுடனேயே வாழ்விற்குப் பயன்படும் உண்மைக் கல்வி ஆரம்பமாகிற தென்றும், சுயாபிவிருத்தியின் உயர்வையும், அவசியத்தையும்பற்றி மகாத்மா காந்தி மாணவர்களுக்கு அடிக்கடி உபதேசித்துவருவதை இங்கு ஞாபக மூட்டுகிறோம்.

இவ்வாறு ஜான்ஸன், வீட்டிலிருந்த காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று இங்கே குறிப்பிடத்தக்கது. வியாதியினாற் படுக்கையிலிருந்த ஜான்ஸனின் தகப்பனார், லிச்பீல்டுக்குப் பக்கத்திலுள்ள ஓர் கிராமச் சந்தைக்குச் சென்று, புத்தகம் விற்றுவரும்படி ஜான்ஸனுக்குக் கட்டளையிட்டார். அவர் அஃது தனக்குக் கௌரவக் குறைவென நினைத்து, அவ் வாணைக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார். அவருடைய வாழ்நாளிலேயே பிதாவின் விருப்பத்திற்கு மாறாக நடந்தது இந்த ஒரு தடவைதான். தந்தைக்கு ஆற்றிய இக் குற்றம் இவருடைய மனதைச் சதா வாட்டி வருத்திக்கொண்டிருந்தது. வயோதிகப் பருவத்தில், சொந்த ஊரிலிருந்தபோது ஒரு நாள் அக் கிராமத்திற்கு வண்டியிற் சென்று, எக் கடையிலிருந்து தான் புத்தகம் விற்கவேண்டுமென்று தன் பிதாவால் கேட்டுக்கொள்ளப்பட்டாரோ அக் கடைக்கு முன் தொப்பியை எடுத்துவிட்டு, அண்டையிற் செல்லுவோர் நகைக்க, ஜான்ஸன் ஒரு மணி நேரம் வருத்தத்துடன் நின்று பிராயச் சித்தஞ் செய்து, மனசாந்தி யடைந்தார். ஜான்ஸன் பிதாவின்மேற் கொண்டிருந்த பக்தி போற்றற்பாலதன்றோ?

ஜான்ஸன் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையைச் சார்ந்த பெம்புருக் கல்லூரியில், 1728-ம் ஆண்டு சேர்ந்தார். இவருடைய காலேஜ் படிப்புக்கு, லிச்பீல்டிலிருந்த சிலர் சிறிது பணவுதவி செய்தனர். பண்டிதர்களாலும் மாணவர்களாலும் வியந்து மரியாதை செய்யப்பட்டபோதிலும், வறுமையின் கொடூரத்தால் ஜான்ஸனுக்குக் கல்லூரி வாழ்வு சந்தோஷகரமாயிருக்கவில்லை. என்றாலும் வறுமையிலுந் தனது சுயமதிப்பை ஜான்ஸன் எவ்விதம் போற்றிக் காத்துவந்தாரென்பதைக் குறிக்குஞ் சம்பவம் ஒன்று இங்குக் குறிப்பிடத்தக்கது. ஜான்ஸன் தனது பாதங்களில் அணிந்திருந்த கிழிந்த பாதரட்சைகளைக் கண்ணுற்ற ஓர் அபிமானி, ஒரு ஜதை புதிய பூட்ஸுகளை அவரது அறைக்கு முன் வைத்துச் சென்றார். மறைமுகமாய் யாராலோ செய்யப்பட்ட அந்த உபகாரத்தை ஏற்பது இழிவெனக் கருதி, அவர் அவைகளை எடுத்து வெளியில் எறிந்துவிட்டார். ஜான்ஸன் மூன்று வருட காலங் கல்லூரியிலிருந்தும், தன் தகப்பனார் 1731-ம் ஆண்டு இறந்ததினாற் கலாசாலைப் பட்டம் பெறாமலே படிப்பை நிறுத்த நேர்ந்தது. கல்லூரி வாழ்வில் இவர் கஷ்டப்பட்டபோதிலும் எப்போதுந் தான் படித்த ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையை மறவாது, பிற்காலத்தில் அடிக்கடி அங்குச் செல்லுவது வழக்கம். அஃதும் அவரது அறிவாற்றலை வியந்து டாக்டர் பட்டம் (L.L.D) அளித்து மகிழ்ந்தது. இவ்வாறே இந்தியச் சர்வகலாசாலைகளும் இந்தியாவில் தோன்றியுள்ள, சர்வகலாசாலைப் பட்டங்கள் பெறாத பேரறிவாளர்களுக்குப் பட்டங்கள் கொடுத்துக் கௌரவித்து, மென்மேலும் அவர்களை நாட்டுக்கும், மொழிக்கும், சாஸ்திர வளர்ச்சிக்கும் பணி செய்து பயன்படுமாறு உற்சாகப்படுத்துவது நலம்.

கலாசாலையை விட்டகன்றது முதல் ஜான்ஸனுக்குக் கஷ்ட காலம். தந்தை வைத்துச் சென்ற ஆஸ்தி இருபது பவுன்கள் பெறுமானத்திற்கு மேலில்லை. ஆகையால் உபாத்திமைத் தொழிற் புரிந்து, சிறிது பணம் பெற்றுத் தன்னையும் தன் தாயாரையுங் காப்பாற்றிக்கொள்ள வறுமையோடு போராடினார். மணப் பருவமுங் கூடிக்கொண்டது. வாழ்க்கைத் துணையொருத்தியை வரித்துக்கொள்ள எண்ணினார். இருபத்தாறாவது வயதில் நாற்பத்தாறு வயதுடைய ஓர் மாது மணியை வதுவை முடித்துக்கொண்டார். காளை ஜான்ஸனுக்த ஓர் இளம் மாது கிடைக்கவில்லையா? இக் கல்யாணத்தால் அவர் பிள்ளைப் பேறு பெற்றிலர். ஜான்ஸனுடைய விவாகத்தின் வயதுப் பொருத்தமின்மையைப் பற்றி நண்பர்கள் நகைக்கும்போதெல்லாம், தம்மிருவரின் கருத்தொருமித்த காதலைக் கூறி சமாதானப்படுத்துவார். தாரமிழந்து முப்பது வருஷ காலந் தனி வாழ்வு லண்டன்மா நகரத்தில் நடத்தியபோதும், அவர் அவ்

வம்மையை நினைந்து நெஞ்சுருகினார். பிணி, மூப்பு, சாக்காடைக் கடந்ததன்றோ காதல்!

ஜான்ஸனின் மனைவியிடம் எண்ணூறு பவுன்கள் இருந்தன. இப் பணத்தைக் கொண்டு ஜான்ஸன் லிட்ச்பீல்டுக்கு அருகிலுள்ள ஓர் கிராமத்தில் லத்தீன், கிரேக்க பாஷைகளைக் கற்பிக்க ஓர் குருகுலம் (Boarding School) நிறுவினார். அக் கல்விச்சாலை ஒன்றரை வருஷங்கள் நடைபெற்று, மாணவர்கள் அதிகமாய் வாராததினாற் றழைத்தோங்காது பலத்த பண நஷ்டத்துடன் மூடப்பட்டது. அங்குப் படித்தவர்களில் அக்கால பிரபல நடிகரான கேரிக் (Garric) என்பவரும் ஒருவர். மனைவியின் பணமும் இவ்வாறு நஷ்டமாய்ப் போய்விட்டதால், ஜான்ஸன் என்ன செய்வதென்று தோன்றாது திகைத்து, வருந்திப், பின்னாற் பேனா முனையினால் சம்பாதிக்கலாமென ஒருவாறு மனந்தேறி 1737-ம் வருஷம் லண்டனை அடைந்தார்.

லண்டனிற் கஷ்டம்.

லண்டனிற் கிரப் தெரு (Grub Street) பரம ஏழைகள் வதியும் ஓர் அசுத்தமான இடம். பதினெட்டாம் நூற்றாண்டில், வறுமை வாய்ப்பட்ட ஆங்கில நூலாசிரியர்கள் இந்தத் தெருவிலேயே வசித்தார்கள், அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமாயிருந்தது. அவர்கள் மேற்கொண்ட எழுதுந் தொழிலால், உணவுக்கும், உடைக்குங்கூடப் போதிய வருமானம் வரவில்லை. வீட்டு வாடகையும், கடைப் பற்றுவழியுங் கொடுக்க இயலாது அவர்களில் அனேகர் சிறைக்குச் சென்றனரென்றால், அவர்களுடைய நிலைமை சீர்கேடாய் இருந்ததென்பதை விவரிப்பானேன்? அக்கால கிரந்த கர்த்தர்களின் (நூலாசிரியர்) தரித்திரத்திற்குக் காரணம், அந்நாட்டிற் கல்வி பரவாததும், புத்தகங்கள் தேவைப்படாததுமேயாம். ஆனால் தற்காலத்து நாவலர்களாகிய தாமஸ் ஹார்டி, வெல்ஸ், உலகப் பிரசித்தி பெற்ற நாடகாசிரியரும் பொதுவுடைமைக் கட்சியை ஆதரிப்பவருமான பெர்னாட் ஷா முதலானோர் புத்தகங்கள் எழுதிப் பெரும் பொருள் ஈட்டுகின்றனர். இதற்குக் காரணம், இப்போது இங்கிலாந்திற் சகலருக்கும் எழுதப் படிக்கத் தெரிவதினால் உள் நாட்டுப் புத்தகத் தேவையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் அடங்கிய தேசங்களிலும், ஆங்கிலம் பேசப்படும் பிற நாடுகளிலும், ஆங்கில நூல்களுக்குக் கிராக்கி ஏற்பட்டிருப்பதேயாகும். கையில் ஒரு காசுமின்றி லண்டனை அடைந்த ஜான்ஸன், வறிய சகோதர நூலாசிரியர்களோடு கிரப் தெருவில்

வசித்துக்கொண்டு ஜெண்டில்மென்ஸ் மாஸிகைக்கு (Gentlemen's Magazine) கட்டுரைகள் வரைந்தும், கிரேக்க, லத்தீன் புத்தகங்களை மொழிபெயர்த்தும், அவ்வப்போது குடும்பச் செலவுக்குப் பிரசுரர்களிடமிருந்து சிறிது பொருளை எதிர்பார்த்துக் கொஞ்சக் காலங் கொடிய வறுமையாற் கஷ்டப்பட்டார்.

பத்திரிகைகளுக்கு எழுதிய உயரிய கட்டுரைகள் மூலம் நாட்டில் ஜான்ஸனுடைய புகழ் மெதுவாகப் பரவிற்றால், வருமானம் அதிகப்பட, வறுமையும் ஒருவாறு மறைய ஆரம்பித்தது. 1739-ம் வருஷம் "லண்டன்" (London) என்னுங் கவிதையை வெளியிட்டு ஐந்து பவுன்கள் பெற்றார். அச் சமயம் இலக்கிய உலகிற்கு சர்வாதிகாரியா யிருந்த போப் என்பவரே இதைப் புகழ்ந்திருக்கிறார். 1744-ம் வருஷம் ஜான்ஸனுடைய நண்பரும், கிரப் தெரு புத்தகாசிரியருமான சாவேஜ் (Savege) என்பவருடைய சரித்திரமும், 1749-ம் ஆண்டு மானிடரின் வீணாசை (The Vanity of Human Wishes) என்னுங் கவிதையும் வெளிப் போந்தன. 1750-ம் ஆண்டு ஐரேன் (Irene) என்ற நாடகத்தை யெழுதித் தனது மாணவரான கேரிக் என்பவரைக் கொண்டு நடிக்கச் செய்து, இருநூறு பவுன்கள் பெற்றார். 1750-52 ஆகிய இரண்டு வருடங்களும் வார மிருமுறை வெளிவந்த ராம்பிளர் (The Rambler) என்னும் பத்திரிகைக்கு ஆசிரியரா யிருந்து, நல்ல ஊதியம் பெற்றார். "ராம்பிள"ரில் ஜான்ஸனுடைய அரும் பெரும் வியாசங்கள் வெளி வந்ததால் அவருடைய கீர்த்தி நாடெங்கும் பரவிற்று. இவ்விதம் புகழ் பெற்று, வறுமை நீங்கி, மனம் மகிழ்வெய்தியபோது அவரது மனைவி 1752-ம் வருஷம் இறந்து போனார். காதலியின் மரணம் ஜான்ஸனைத் துக்க சாகரத்தில் வீழ்த்தியது.

புகழடைதல்.

ஆயிரத்தைந்நூறு பவுன்களுக்கு, மூன்று வருஷத்தில் ஆங்கில அகராதி யொன்று தொகுத்துக் கொடுப்பதாக ஜான்ஸன், பிரசுரர்களுக்கு 1747-ம் வருஷம் வாக்களித்தார். ஆனால் அது முடிவதற்கு ஏழு வருஷங்களாகி, 1755-ம் ஆண்டுதான் வெளிவந்தது. இந்த வெளியீட்டுக்குப் பின் அவர் 'அகராதி ஜான்ஸன்' (Dictionary Johnson) என்று அழைக்கப்பட்டார். மொழிக்கு ஆற்றிய இந்தத் தொண்டால் பொது ஜனங்களின் மதிப்பையும், அன்பையும் பூரணமாய்ப் பெற்றார். அகராதி தயாராகிக்கொண் டிருக்கும்போது, உள்நாட்டு மந்திரியும், இலக்கிய அபிமானியுமான லார்டு செஸ்டர்பீல்டு என்பவரிடம் பண வுதவியை நாடிச் சென்றார். அப்போது அவர் ஜான்ஸனைக் கவனிக்காது அசட்டை செய்து விட்டார். அகராதி வெளியாகப் போகுஞ் சமயத்தில் அவர் தனக்கு அர்ப்பணஞ் செய்ய ஜான்ஸனைத் தூண்ட நினைத்து ஒரு பத்திரிகையில் வெகுவாகப் புகழ்ந்து எழுதியிருந்தார். அதைக் கண்ணுற்ற ஜான்ஸன் சினந்தெழுந்து அந்தப் பிரபு வெட்கித் தலை குனியும்படி ஒரு கடிதம் விடுத்தார். ஏழு வருட காலங் கஷ்டப்பட்டு அகராதி தயாரிக்கும்போது யாதொரு உபகாரமுஞ் செய்யாது, அஃது முடிந்தவுடன் ஆதரவு கொடுக்க முன் வருவது, ஆற்றில் வெள்ளம் இழுத்துக்கொண்டு போகும்போது வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்துவிட்டுச் சுய முயற்சியாற் கஷ்டப்பட்டுக் கரையேறும்போது கை கொடுப்பதுபோ லிருக்கிறதென அப் பிரபலம் பொருந்திய கடிதத்தில் இடித்துக் கூறி யுள்ளார். இதனால் ஜான்ஸன் அஞ்சா நெஞ்சம் படைத்தவரென அறியக் கிடக்கிறது.

நாடெங்கும் ஜான்ஸனின் புகழ் முழக்கங் கேட்கப்பட்டபோதிலும், அவரது கையிற் பணம் மீதப்படும்படி வருமானம் அவ்வளவு அதிகப்படவில்லை. 1759-ம் ஆண்டு ராசலாஸ் (Rasselas) என்னுங் கதையை ஒரு வாரத்திற் சாயங்கால வேளைகளில் எழுதி முடித்துத் தாயாரின் மரணச் செலவுக்குப் பணம் பெற்றதாகத் தெரிகிறது. ஜான்ஸன் சோம்பலை உதறித் தள்ளிப் பேனாவை எடுத்துவிட்டால் வெகு வேகமாக எழுதக் கூடியவர். "சோம்பேறி" (The "Idler") என்னுந் தலைப்பிற் சில வியாசங்கள் 1758-60 ஆகிய இரண்டு வருஷங்களாக ஓர் பத்திரிகையில் வெளியாயின. இவைகளும் "ராம்பிளர்" போன்று ஒழுக்கத்தைப் பற்றி உபதேசஞ் செய்யும் வியாசங்களே. 1760-ம் வருஷம் மூன்றாம் ஜார்ஜ் மன்னர் பட்டத்துக்கு வந்தவுடன், ஜான்ஸன் பாஷைக்கு இயற்றிய தொண்டைப் போற்றி, வருஷத்திற்கு முன்னூறு பவுன்கள் உபகாரச் சம்பளம் கொடுத்தார். அது முதல் ஜான்ஸன் பணக் கஷ்டம் அறவே நீங்க, கிரப் தெருவை விட்டு பிலீட் தெருவில் (Fleet Street) ஒரு நல்ல வீட்டில் வசித்து வரலானார்.

அரசனின் உபகாரச் சம்பளத்தால் பணக் கஷ்டந் தீர்ந்தவுடன் ஜான்ஸனின் இயற்கைச் சோம்பல் அவரைப் பற்றிக்கொண்டது. இதற்குப் பின் அவரது பேனாவிற்கு அதிகமாக வேலை கொடுக்கப்படவில்லை. ஜான்ஸன் பேச்சில் விருப்பமுடையவராகையாற் சிநேகிதர்களிடத்தும், கிளப்பிலும் பேசியே தன் காலத்தைப் போக்கினார். 1764-ம் வருஷம் இலக்கியக் காலக்ஷேபச் சங்கம் (Literary Club) ஆரம்பமானது. அதில் ஓவிய நிபுணர் ரேயினால்ட்ஸ், பார்லிமெண்டு மெம்பரும், அரசியல் நிபுணரும் பெரும் பிரசங்கியுமான எட்மண்ட் பர்க், சரித்திரக் காரராகிய கிப்பன், நாடகாசிரியராகிய ஷெரிடன், அர்த்த சாஸ்திர வல்லார் ஆடம் ஸ்மித்,

ஜான்ஸனின் சரித்திரம் எழுதிய பாஸ்வெல், நூலாசிரியர் கோல்டுஸ்மித் ஆகியோரும், இன்னும் பலரும் அங்கத்தினராகயிருந்தனர். ஜான்ஸன் சம்பாஷணையிலும், வாக்கு வாதத்திலும் வல்லவராகையால், இக் கிளப்பில் அவருடைய வார்த்தையையே மற்ற அங்கத்தினர்கள் விருப்பத்துடன் செவிமடுத்துக் கொண்டிருப்பார்கள்.

ஜான்ஸன் தன் இல்லத்திற் சில எளிய சுற்றத்தார்களுக்கு வசிக்க இடங் கொடுத்தும், பொருளுதவியுஞ் செய்துவந்தார். இவர்கள் ஒருவருக்கொருவர் சதா சச்சரவுசெய்து கொண்டிருந்ததால் அவர்கள் மத்தியில் மன அமைதி காணாது, சிநேகிதர் வீடு, கிளப், ஆகிய இடங்களிலேயே தனது பெருங் காலத்தைக் கழித்தார். மேலும் இன்னுயிர்க் காதலியும், மழலைச் சொல் மக்களும் இல்லாத இல்லமும் இல்லமாமோ? சுடுகாடன்றோ? 1765-ம் ஆண்டு ஜான்ஸன் தன்னை வியந்து போற்றிய ஒரு தனவானாகிய திரேல் என்பவருடைய நட்பைப் பெற்றார். இவருடைய வீடு ஜான்ஸனின் வாழ்வாகிய வறண்ட பாலை வனத்தில், தெய்வ சங்கற்பத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தண் பொழிலாக இருந்தது. இவரைத் திரேல் குடும்பத்தார் எப்பொழுதும் உவந்து, வரவேற்று, உணவளித்ததுமன்றி, இவருக்கென ஓர் அறையையும் ஒதுக்கிக் கொடுத்திருந்தனர். 1765-ம் வருடம் ஷேக்ஸ்பியர் நூல்களுக்கு உரை அன்னாருடைய சரித்திரத்துடன் எட்டுப் பாகங்களில் பிரசுரமாயது. முக்கிய ஆங்கிலப் புலவர்களின் பாக்களைத் தனித்தனியே திரட்டி ஒவ்வொன்றிற்கும் முகவுரை எழுதித் தருமாறு பிரசுரர்கள் ஜான்ஸனை வேண்டிக் கொண்டனர். அதற் கிணங்கி முந்நூறு பவுன்கள் பெற்று, ஒவ்வொரு புலவருக் குடைய வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளையும், குணாதிசயங்களையும், கவிகளின் நயமிகத்தையுஞ் சீர்தூக்கி முன்னுரை எழுதிக் கொடுத்தார். இந்தப் புலவர் புராணம் (Lives of the poets) 1780-ம் வருடம் அச் சேறியது. 1781-ம் ஆண்டு ஜான்ஸனின் ஆப்த நண்பர் திரேல், பரமபதம் அடைந்தார். ஸ்ரீமதி திரேல் இத்தாலிய தேச வாசியும், கத்தோலிக்கருமாகிய ஒரு பாடகரை ஜான்ஸனின் விருப்பத்திற்கு முற்றிலும் மாறாக, மணந்து கொண்டாள். ஆகையால் திரேல் மரணத்திற்குப் பின் ஜான்ஸன் அந்த வீட்டினரின் ஆதரவுமின்றி, அவரது வாழ்வில் எஞ்சியிருந்த மூன்று வருஷங்களும் அதிகக் கஷ்டப்பட நேர்ந்தது.

விபரீத குணம்.

ஜான்ஸன் உயர்ந்து, பருத்த, பிணியுள்ள சரீரமுடையவர். நல்ல உடையை விரும்பாது, அழுக்கு ஆடையையே சதா அணிந்து

கொண்டிருப்பார். ஸ்ரீமதி திரேலின் தூண்டுதலால் இவரது உடை சற்றே சீர் பெற்றது. ஒரு நாள் திரேலோடு வேட்டைக்குச் சென்று வந்தார். வீட்டை யடைந்தவுடன் திரேல் களைப்புடன் உட்கார, ஜான்ஸன் தான் அலுத்துப் போகவில்லை எனக் காட்ட ஒரு ஸ்டூலைத் (Stool) தாண்டினார். ஐம்பத்தைந்தாம் வயதில் ஒரு சிநேகிதரோடு இவர் ஒரு குன்றுக்கு உலாவச் சென்றார். அக் குன்றிலிருந்து உருள வேண்டுமென ஓர் எண்ணந் தோன்றவே சட்டைப் பைகளிலிருந்த சாமான்களை எடுத்துவிட்டு, அவ்வாறே உருண்டு சந்தோஷப்பட்டார். ஜான்ஸன் ஒவ்வோர் சமயம் வீதியிலுள்ள விளக்குத் தூண்களைத் தொட்டுக் கொண்டும், வீதியின் பாவு கற்களின் மத்தியில் அடியெடுத்து வைத்துக்கொண்டும் சென்று மகிழ்வார். சில வேளை குதூகலத்துடன் ஓடியும், காம்பவுண்டுக் கதவுகளைத் தாண்டியும், சிநேகிதர்கள் தடுப்பதையுங் கேளாது, ஆற்றிற் பயங்கரமான நீர்ச் சுழல்களிருக்குமிடத்தில் நீந்தியும், மரங்களில் ஏறியும் இன்புறுவார். பெரிய மனிதர்களுக்கு ஏதாவது ஓர் விபரீத குணம் (Eccentricity) இருப்பது இயற்கையே.

தெய்வ பக்தி.

ஜான்ஸன் தெய்வ பக்தி மிகுந்தவர். கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்தும், விவிலிய வேதத்தை வாசித்தும், ஆராதனையில் ஆழ்வர். கடமையைச் செய்து முடிப்பதில் அதிகக் கருத்துடையவர். கடவுள் எம் மனிதனை எந் நிலையில் வைத்திருக்கிறாரோ, அந் நிலையில் தனக்குப் பணித்துள்ள வேலையைச் சரியாகச் செய்து, ஈசனைத் திருப்தி செய்ய வேண்டுமென்னும் நம்பிக்கையுடையவர். வயோதிகப் பருவத்தில் ஜான்ஸன் தனது பழைய வாழ்வைத் திருப்பிப் பார்க்கும்போது, நாற்பது வருஷங்களுக்கு மேலாக நூலாசிரியராக விருந்தும், அதற்குத் தக்கபடி அநேக நூல்களை எழுதாது, கடமையிலிருந்து வழுவிய குற்றத்தை மன்னிக்குமாறு இறைவனை இறைஞ்சுகிறார். 'பணஞ் சம்பாதிக்கக் கருதாது நூல் எழுதுபவன் முட்டாளே' எனக் கூறினும், ஸோக்ரதரைப் (Socretes) போன்று, சென்ற விடமெல்லாஞ் சத்காரியங்களைப் பேசியும், எழுதுகிற நூல்களிலெல்லாஞ் சன்மார்க்கத்தை உபதேசித்தும், பெருந் தொண்டு செய்திருக்கிறார். ஜான்ஸன் மரணப் படுக்கையில் இருக்கும் போதுகூடத் தன் வீட்டில் நெடுங்காலம் வேலைக்கிருந்த பிரான்ஸிஸ் என்பவனுக்கு, லௌகிகப் பொருள்களில் இச்சை கொண்டு, இடர்ப்படாது; அவைகளை பகவானுக்கு அர்ப்பணஞ் செய்து, ஆத்மார்த்திகமான அற வாழ்வு நடாத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார். பதினாறு வருஷங்கள் திரேல் குடும்பத்திற் சகல வசதிகளையும்

ஜான்ஸன் அனுபவித்துவந்தார். ஆனால் இவேல் மரணத்திற்குப் பின்னர், முதுமைப் பருவத்தில் அவைகளை இழக்க நேர்ந்தபோது மனமுடைந்துவிடாமல், எல்லாம் ஈசன் செயலெனக் கஷ்டங்களைத் தாங்கி, மனோ சாந்தியுடனிருந்தார். இறைவனின் வேலைக்காரர்களாகக் கருதிக், கஷ்ட நஷ்டங்களை தைரியத்துடன் சகித்து, உண்மையுடன் இடைவிடாது வேலை செய்வது, ஆன்ம விடுதலைக்குரிய மஹா மார்க்க மென்பதை யாரே மறுக்க வல்லார்? மஹரிஷி ஜான்ஸனின் வாழ்வு இதற்கு ஓர் இலக்கியமாய் விளங்குகிறது.

இளகிய இருதயம்.

ஜான்ஸன் அன்பாலும், அருளாலும் ஆக்கப்பெற்ற அறசொரூபி. நண்பர்களுக்குஞ் சுற்றத்தார்களுக்குங், காலத்தில் உதவும் பரோபகாரச் சிந்தையும், ஏழைகளுக்கு இரங்கும் மனமும் உடையவர். சொந்த ஊருக்கு அடிக்கடி சென்று, கிழ அன்னையை உற்சாகிப்பார். நாற்பது வருஷங்கள் தன் வீட்டில் வேலைக்கிருந்த ஓர் ஸ்திரீ இறக்கும்போது ஜான்ஸன் அவளண்டை முழங்காற்படியிட்டு ஜெபித்து, முத்தமிட்டு "நாம் வானுலகத்திற் சந்தித்துப் பிரியா வாழ்வு வாழ்வோம்" எனக் கூறிக் கண்ணீருகுத்தார். சிநேகிதரிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, இராவில் இல்லஞ் செல்லும்போது வீதியில் தூங்கிக்கொண்டிருக்கும் ஏழைகளின் கைகளில் பென்னிகளை (ஆங்கில நாணயம்) வைத்துச் செல்லுவார். ஒரு சமயம், கோல்டுஸ்மித் வீட்டு வாடகை கொடுக்க முடியாமையாற் கைதிசெய்யப்பட்டார். அதைக் கேள்வியுற்ற ஜான்ஸன் உடனே அங்குச் சென்று, பணங் கட்டி அவரை மீட்டினர். மேலும் கோல்டுஸ்மித் எழுதிவைத்திருந்த "விக்கார் ஆப் வேக் வீல்டு" (The Vicar of Wakefeild) என்னும் புத்தகத்தைப் பிரசுரக்காரர்களிடம் அறுபது பவுனுக்கு விற்று, அவருடைய பணக் கஷ்டத்தை ஒழித்தார். மன்னரின் உபகாரச் சம்பளத்தில் நூறு பவுன்களையே சொந்தச் செலவுக்கு வைத்துக்கொண்டு, மீதத்தைத் தர்மமாகச் செலவிட்டார். வாக்குவாதத்தில் வெற்றிபெறக் கருதிச் சில சமயங்களில் சிநேகிதர்களுடைய மனம் புண்படக் கடின வார்த்தைகள் உபயோகித்ததைக்கொண்டு, ஜான்ஸன் கன்னெஞ்சம் படைத்தவரெனக் கொள்ளுவது தவறு. அவரால் அடிக்கடி கேலி செய்யப்பட்ட கோல்டுஸ்மித் "ஜான்ஸன் முரட்டுச் சுபாவமுடையவரெனத் தோன்றினும், உண்மையில் உருகுங் குணமுடையவர்" எனக் கூறியிருப்பது கவனிக்கற்பாலது. தனக்கென வாழாப் பிறர்க்குறியாளரெனப்படும் பெருந்தகைமை ஜான்ஸனின் வாழ்வில் விரவி மிளிர்கிறது.

உலகியல் ஞானம்.

சுருதி, யுக்தி, அனுபவங்களால் அடையப்பெறும் அறிவே மேலானது. வெறும் புத்தகக் கல்வி மாத்திரம் வாழ்விற்குப் பயன்பட்டு விடாது. ஜான்ஸன் மானிட சுபாவத்தையும், உலகியலையும் ஒருங்கே உய்த்துணர்ந்து, காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி நடந்த ஓர் உலகியல் ஞானி. எத் தொழிலிற் சந்தோஷ மிருக்கிற தென்பதை ஆராய்ந்து, அறிந்து, அதைச் செய்து, உலகிற் சந்தோஷமாயிருக்கக் கருதி, ராஸலாஸ் என்னும் இளவரசர் "சந்தோஷ நீரோடை" (Happy Valley)-யை விட்டுக் கெய்ரோ நகரை அடைகிறார். அந் நகர மாந்தரை வீதிகளிற் கண்ணுற்றபோது, அவர்கள் அனைவரும் மகிழ்வுடன் இருப்பதாக முடிவுகட்டி, அந் நகரில் வசித்தாற்றான் சந்தோஷங் கிட்டுமெனத் தீர்மானிக்கிறார். இந்த அபிப்பிராயத்தைத் தனது ஆசிரியராகிய இம்லாக் என்பவரிடம் தெரிவிக்க, அவர் வெளுத்ததெல்லாம் பாலல்லவாகையால் வெளித் தோற்றத்தைக் கண்டு மருளுவது அறியாமை என்றும்: நம் மனத்தில் எவ்விதத் துக்கமிருக்கிறதோ, அவ்விதமே பிறர் உள்ளத்திலும் இருக்குமென அனுமானித்தல் வேண்டுமென்றும் அவ் வரசகுமாரனுக்கு அறிவுச் சுடர் கொளுத்துகிறார். ராஸலாஸ் என்னும் அக் கதையில் இம்லாக்காக வருபவர் ஜான்ஸன்தான். ஒரு நாள் பாஸ்வெல், ஜான்ஸனை அவருடைய ஆப்த நண்பர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால், என்ன செய்வரெனக் கேட்க, அவர் அச் சிநேகிதனை மரண தண்டனையினின்றும் விடுவிக்கத் தன்னால் இயன்றதையெல்லாஞ் செய்வாரென்றும், அம் முயற்சியிற் சித்தி பெறாவிட்டால், அச் சிநேகிதனின் மரணத்தை நினைத்துப் பயனின்றி வருந்திக்கொண்டிருக்க மாட்டாரென்றும் பதிலளித்தார். ஒரு பிரபுவின் வீடு, ஏராளமான பணச் செலவில் லண்டனில் கட்டப்பட்டது. ஆனால் அதன் அமைப்பு ஜான்ஸனுக்குத் திருப்திகரமாயில்லை. ஒரு நாள் அவர் அவ் வீட்டிற்குச் சென்றிருந்தபோது, அதன் அமைப்பைப்பற்றிப் பேசாது அவ்வளவு மிகுந்த பொருள் செலவிற் கட்டப்பட்ட எந்த வீட்டையுந் தான் பார்த்ததில்லையென முகமன் கூறி, அந்தப் பிரபுவை மகிழ்வித்தார். ஜான்ஸனுக்கு வயோதிகத்தில், கண்கள் மங்கலாகவும், காதுகள் மந்தமாகவும் போய்விட்டன. மேலும் நாடகத்திலுஞ் சங்கீதத்திலும் இவருக்கு விருப்பங் கிடையாது. ஒரு நாள் அபிங்டன் என்ற பிரபல நாடக மாது நடிக்கும் நாடகத்திற்குச் சென்றார். மறுநாள் நாடகம் எவ்விதமிருந்ததென ஒருவர் அவரை வினவ, தான் நாடகத்தைக் கண்டு களிக்கச் செல்லவில்லையென்றும், அந் நாடகக் கணிகை ஜனங்களால் மிக மதிக்கப்படுவதாற் பொதுஜன அபிப்பிராயத்திற்குக்

கௌரவங் கொடுப்பதற்காக மட்டுமே, தான் அந் நாடகத்திற்குச் சென்றதாகவும் பதிலளித்தார். மேற்கூறிய உதாரணங்களால் ஜான்ஸன் ஓர் தெளிந்த உலகியல் ஞானி என்பதறிகிறோம்.

சீர்திருத்தக்காரரா?

ஜான்ஸன் ஓர் சீர்திருத்த வாதியல்ல. அரசியல், மதம், சமூகம் ஆகிய எத் துறையிலும் மாற்றம் வேண்டாது அக் காலத்தில் அரசனை ஆதரித்த டோரிக் கட்சியைச் சேர்ந்தவர். அப்போது பல துறையிலுஞ் சீர்திருத்தம் வேண்டாமெனக் கிளர்ச்சி செய்த, இக் கட்சியை ஜான்ஸன் வெறுத்தார். "இக் கட்சியை ஆரம்பித்தவன் ஒரு பிசாசு" என இவர் கூறுவது வழக்கம். கிறிஸ்தவ புராணப்படி, எவ்விதம் பிசாசு அதிகாரத்தை விரும்பிக் கடவுளுக்குக் கீழ்ப்படியவில்லையோ அவ்விதமே இக் கட்சியினரும் அரசனிடமிருந்து அதிகாரத்தைப் பறிக்க விரும்புகின்றனர் என்பது அவ் வாக்கியத்தின் கருத்து. அக்காலத்தில் அமெரிக்கர் "பிரதிநிதித்துவமின்றி வரியில்லை" என நடத்திய சுதந்திர இயக்கத்திற்கு இங்கிலாந்தில் ஒரு சாரார் ஆதரவளித்தனர். ஆனால் ஜான்ஸன் நீக்ரோ அடிமைகளை வைத்துக்கொண்டிருக்கும் அமெரிக்கர், எவ்விதம் ஆங்கிலேயரிடஞ் சுதந்திரங் கேட்கலாமெனக் கூறி அவ் வியக்கத்தைக் கண்டனஞ் செய்தார். இவர் புராதன ஸ்தாபனமாகிய "இங்கிலாந்துக் கோவிலை"ச் (Church of England) சேர்ந்தவர். ஸ்ரீமதி திரேல் மதம் மாறி ஒரு கத்தோலிக்கரை மணந்துகொண்டதற்கு அளவற்ற துக்கங்கொண்டார். இவரோடு பழகிய ஓர் மங்கை கிறிஸ்தவ மதத்தின் ஓர் பிரிவாகிய "குவாக்கர்" (Quaker) மதம் பைபிளுக்குப் பொருள் கூறுவது, அவள் மனதிற்குச் சரியாகத் தோன்றினதால் அம் மதத்தைத் தழுவினாள். பிறந்த மதத்தை விட்டு மதம் மாறுவது கடவுள் சித்தத்திற்கு விரோதமெனக் கூறி ஜான்ஸன் அந்தப் பெண்ணை வெறுத்தார். சமூகத்தில் உயர்வு தாழ்வு இருத்தல் அவசிய மென்பதும், பெண்களுக்குச் சமத்துவங் கொடுப்பது கூடாதென்பதும் இவரது கொள்கை. ஜான்ஸன் இவ்விதம் எத் துறையிலுஞ் சீர்திருத்தம் வேண்டாத பிற்போக்கான கொள்கையுடையவராக இருந்ததற்கு, டோரிக் கட்சியைச் சேர்ந்த குடும்பத்திற் பிறந்து வளர்ந்ததும், சீர்திருத்தம் தேசத்திற் குழப்பம் உண்டாவதற்கு வழியாகுமென அஞ்சியதுங் காரணமெனக் கூறுவர்.

வாக்கு வன்மை.

வாக்கு வன்மை அடைதற் கரியதோர் ஆஸ்தி. சொல்வன்மையுடையோரே மக்கள் மனதைக் கவர்ந்து, உலகிற் பெருங் காரியங்களைச் சாதிக்க முடியும். சொல்லம்பே கொல்லம்பிற் கூரியது! ஐரோப்பாவை ஆட்டி அசைத்த நெப்போலியனும், துருக்கிக்குப் புத்துயிர் அளித்த முஸ்தபா கமால் பாஷாவும், நாவன்மை மிக்கவர்களே. அதற்கே ஜனங்கள் பயந்து மரியாதையுஞ் செய்கின்றனர். ஜான்ஸன் வாக்கு வன்மை வாய்ந்தவர்; பேச்சாளி. அர்த்த புஷ்டியுடைய வார்த்தைகள் இவரது நாவிலிருந்து வெளிக் கிளம்பின. கிளப்பிலும், விருந்திலும் இவருடைய பேச்சோங்கிச் சிநேகிதர்கள் மத்தியில், நக்ஷத்திரங்களுக் கிடையில் பூரண பிரகாசத்தோடு விளங்கும், முழு மதிபோல் விளங்கினார். பெருஞ் சொற் பெருக்காளராகிய எட்மண்ட் பர்க், "சம்பாஷணையிலும் வாக்குவாதத்திலும் ஜான்ஸனுக்கு நிகர் ஒருவருமில்லை" என வியந்து கூறியிருக்கிறார். பிரபல சித்திரக்காரராகிய ரெயினால்ட்ஸை எவ்விதம் ஜான்ஸன் வாக்குவன்மை யடைந்தாரெனக் கேட்க, அவர் பால்யத்திலிருந்தே சரியான வார்த்தைகளை உபயோகித்தும், பேசும் முன் நன்றாக யோசித்துக், கருத்துக்களைச் சரியாக ஒழுங்குபடுத்தியும் பேசிவந்த பயிற்சியே காரணமெனக் கூறியுள்ளார். ஜான்ஸன் எவ் விஷயத்திலும் ஓர் திடமான அபிப்பிராயம் உடையவராக யிருந்ததால், எதைப்பற்றிப் பேசினும் உணர்ச்சியுடன் பேசுவார். அவருடைய அபிப்பிராயம் மறுக்கப்பட்டால், தன் முழுச் சக்தியையும் உபயோகித்து, வாதித்து அதை நிலைநிறுத்துவார். இக் காரணங்களாலேயே அவரது பேச்சில் ஆர்வம் நிறைந்திருந்தது. ஜான்ஸனின் ஆவேசமுள்ள பேச்சுக்களையே பாஸ்வெல் எழுதிவைத்து, அவரும் அழியாப் புகழ் எய்தினார். ஜான்ஸனுக்கு முன்னால் பயனற்ற வார்த்தைகளைப் பேசவும், வாக்குவாதஞ் செய்யவும் எவரும் அஞ்சுவர். ஜான்ஸன் இன்று பெரும் புகழ்பெற் றிலங்குவதற்குக் காரணம் பெரும்பாலும் அவருடைய வாக்கு வன்மையெனச் சொல்லுவது மிகையாகாது.

இறுதிகாலம்.

பழுத்த இலைகள் உதிர்வதுபோலச் சுற்றத்தாரும் நண்பரும் இறந்து பட்டதாலும், மூப்பும் பிணியும் ஒருங்கே ஜான்ஸனை வாட்டியதாலும், இவருடைய இறுதிக் காலம் வெகு வெகு துக்ககரமா யிருந்தது. 1784-ம் வருஷத்தின் இறுதியில் ஜான்ஸன் வியாதியுற்றார். லண்டனிலுள்ள பிரபல டாக்டர்கள் அவருக்கு இலவசமாகச் சிகிட்சை செய்தார்கள். எஞ்சிய சிநேகிதர்களாகிய லாங்டன், எட்மண்ட் பர்க் முதலியோர் அடிக்கடி சென்று அவரை உற்சாகப்படுத்தி வந்தனர். பர்க் வருத்தமான குரலுடன் "என்மீது தாங்கள் எப்பொழுதும் அன்பாகவே யிருந்திருக்கிறீர்கள்" எனக் கூறி ஜான்ஸனைக் கடைசியாகப்

தோட்டக்காரன் மகள்.

(ஒரு சிறு கதை.)

("தினமணி")

[இந்தப் பெயர் சூட்டப்பட்ட எத்தனையோ கதைகள் வெளிவந்திருக்கின்றன. ஆனால் அவைகள் ஒன்று சொல்லுவதை இன்னொன்று சொல்லாது. கற்பனையிலுங், கதா சாரத்திலும், வர்ண விஸ்தாரத்திலும் ஒன்றைப் போல் மற்றொன்றிராது. பேர் மாத்திரத்திலேதான் ஒற்றுமையெல்லாம். இப்பொழுது எடுத்துக்கொண்ட இக் கதையின் முதல் பரிச்சேதத்தை இரங்கூன் "தேசோபகாரி" பத்திரிகையில் எழுதியிருந்தேன். "பாரதி"யின் பாக்கியமில்லாமல் இது நிறைவுற்றதாக முடியவில்லை. கதையின் இயற்கை ரஸனையைக் கதா ப்ரியர்களுக்குச் சமர்ப்பிப்பதே முதல் பரிச்சேதத்தோடு சேர்த்துக் கதை முற்றுமட்டும் இங்குப் பிரசுரிப்பதற்கு மன்னிப்பாகும்].

விடியற்கால வானம், பனி மப்பாயிருக்கிறது. கையெழுத்துக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தோன்றி இப்பொழுது துலக்கமாய்விட்டது. வீடுகளும், தெருக்களும், புஷ்பங்களும் சிவப்பு வர்ணத்தில் நீலங் கலந்த புது நிறத்தில் முலாஞ் செய்யப்பட்டிருக்கின்றன. மரங்களெல்லாம் பொன்னம் பொன்னிறத்தில் கண்ணுக்கினிமையான பசுமையையும் மென்மையையுங் காட்டுகிறது. குளிர்ந்த வாசனையால் ஜீவ ஜாதியைக் கொள்ளைகொள்ளும் மனோ லஹரிதமான மலர்கள் இந்திர நீலம், ஸ்யாமளம், சிவப்பு, மஞ்சள் முதலிய வான தனுசின் வர்ண வரிசைகளை வாரி வாரி யிறைக்கின்றன. புது மகளிரைப்போல் அவைகளுக்கும் ஒரு புது வனப்பு! புது ஜோதி! புது மணம்! புது உற்சாகம்! எல்லாங் கலந்து மனித மனத்தைக் கவ்வுகின்றன. ஒரு மிருதுவான தென்றலும் வீசுகிறது. மணமகனைக் கடைக்கண்ணாற் கண்ட மணவறைப் பெண்போல அவைகள் ஒரு சிறு சிரிப்புஞ் சிரிக்கின்றன.

பிரிந்தார். மரண பயத்தாற் கலக்கமடைந்து அதிக மன வியாகுலமுற்று, ஜான்ஸன் ஒரு நாள் டாக்டரிடம் "என் மனோ வியாதியைத் தீர்க்க உங்களிடம் ஓர் மருந்தில்லையா?" எனக் கேட்க, அவர் "மனோ வியாதிக்குப் பிணியாளியே சிகிட்சை செய்துகொள்ளவேண்டும்" எனப் பதிலளிக்கத் திருப்தியடைந்தார். 1784 டிசம்பர் 13-ம் நாள் வானுலக வாசல் திறந்து தன்னை ஏற்றுக்கொள்ளப் பிரார்த்தனை செய்து, மண்ணுலகு நீத்து விண்ணுல கடைந்தார்.

கீழ்த் திசைத் தேவி, லோக சஞ்சாரம் செய்யப்போகின்ற தனது பிரேமஸ்வாமியும் யுவராஜனுமாகிற தினமணியின் பிரிவாற்றாமற் சோபத்தாலுந் தாபத்தாலுஞ் சிவந்துபோனாள். யௌவன ஆதித்தன் ஆறுதல் தேறுதலாக அவளை ஆயிரங் கோமளக் கரங்களாலும் வாரியெடுத்து, மெய்ப்பாடுறக் கலந்து ஆசீர்வதித்துவிட்டு, வான பாட்டை வழியே தனது பிரபஞ்ச யாத்திரையை ஆரம்பிக்கின்றான். எவ்வளவோ முயன்றும் தன்னகத்தே பிடித்துவைத்துக்கொள்ள முடியாத நாயகனை நினைந்து உருகி உருகி சலவைக் கல்லாய் வெளுத்துப்போய் விட்டாள். எட்டியெட்டிப் பார்த்து என்னதான் செய்கிறது? இன்னொரு இருபத்தாறேகால் நாழிகையும் அப்புறம் இரவு அவ்வளவு நேரமும் ஆகிறவரையினும் அவன் முகம் திரும்பித்தான் பார்க்கப் போகிறானா?

மாட்டைக் கறந்து ஆட்டைப் பட்டி கலைக்கும் நேரமும் ஆகிவிட்டது. கட்டைவண்டிகள் கிரிச்சிடுஞ் சப்தமும், பசுநிறைகளின் கழுத்து மணி கலகலெனும் ஓசையும், காட்டகத்துப் பட்சிகளின் கூட்டமுதப் பாட்டும், பிள்ளைகளைப் பெற்றெடுத்தார் பண்ணோடு பாட்டோடு நீலாம்புரி யிசைக்கும் இனிமையும், கோலமிடுங் கோமளங்களின் நாண் ஒலியும், சாணமிடுந் தங்கையரின் வளையலிடு நாதமும், பாத்திரந் துலக்கும் பண்புடையார் பரவு குரலொலியும், அந்த நேரத்திற்கோர் அமரகளை தந்து, அற்புதமான சோபையை வீசிக்கொண்டிருந்தன.

பாலாறு குடிலவேகமாய்க் கிழக்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறாள். தன்னைப் பெற்றெடுத்த நந்திதுர்க்கனிடமிருந்து ஸ்ரீதனப் பொருளாக இயற்கைத் தாய் அளித்த அணிகளையும், ஆடைகளையும், செல்வங்களையும் எடுத்துக்கொண்டு நதிமகள் தனது காதற் கணவனாகிய கடல்மகனோடு பிரேம சங்கமம் ஆகிறதற்காகப் போகிறாள். அந்த அவசரத்தில் ஆத்திரமும் பரபரப்பும் அலையலையாக மோத, இருமருங்கிலுங் காவலாக யிருக்கிற கரைகளாகிற தோழிகளையும் இடிக்கிறாள். இப்படி முப்பது காதமுங் கடந்து கணவனோடு கலந்து சுப யோகந் துய்க்க எந்தக் குமரிக்குத்தான் ஆசையிராது?

II

பக்கத்திலே புஷ்கரணி. அதன் மேலக் கரையிலே ஒரு கூரைக் குடிசை. ரொம்பச் சின்னது. அவை யிரண்டையுஞ் சூழத் தோட்டம். அந்தத் தோட்டத்திற்குள்ள பவிசு "பாரதி"யின் காணி நிலத்துக்கும் வராது. நீலக் குயில்களெல்லாம் எங்கெங்கு சுற்றினாலும் அங்கு வந்துதான் மூச்சாறவேணும்; தமது மார்த்தவம் வாய்ந்த குரலால் குயீல் குயீல் எனப் பாடவேணும். மயில்களுக்கு அது

நடனசாலை; கிளிகளுக்குப் பிரசங்க மேடை. பட்சிகள் பாடுகிற தீம்பாட்டு ஆஸ்மான உலகம்வரை யெட்டுகிறது. இவ்வளவு இன்பக் களஞ்சியத்திற்குஞ் சர்வ மான்யனாக ஒரு வயோதிகன் வந்துகொண்டிருக்கிறான். அவனுடைய மெல்லிய மேனியை மூடப் போதிய துணி யில்லை. வயிறு முதுகோடு ஒட்டிப்போயிருக்கிறது. வறுமைமையைத் சுமந்து சுமந்து கூனிக் குறுகிப்போனான். அகன்ற நெற்றியிலே ஆழ்ந்த கவலையின் கடினமான கரம் படிந்து வரை வரையாயிருக்கிறது. ஓயாத உழைப்பு அவனது சதையை யெல்லாந் தின்றுவிட்டு வெறும் எலும்பையுந் தோலையுந்தான் வைத்திருக்கிறது. அதுவும் இன்ஸால்வெண்டானவன் பணப் பையைப்போற் சுருங்கல் சுருங்கலாகத் தொங்குகிறது. உடலுக்குள் ளிருக்கும் இயந்திரங்கள் இயங்குகிற வேகத்தைத் தாங்கமாட்டாமல் சரீரம் ஆட்டமெடுத்துவிட்டது. அந்தத் தளர்ந்த வயதில் அவனுக்கு எவர் உதவிசெய்வார்? அவன் ஊன்றி ஊன்றி நடக்கின்றானே அந்தத் தடி யொன்றுதான். அதுவையும் அவன் தானே கொட்டை நட்டுத் தண்ணீர் வார்த்து வேலியிட்டு வளர்த்த கருவேலா மரந் தந்தது. ஹா! முள்ளும் முடலுமாயுள்ள வேல்கூட மனிதனுக்கு இவ்வளவு பிரயோஜனமாயிருக்கிறதே? அது ஆண்டவன் சங்கல்பம்!

பிரகிருதி மாதாவுக்குப் பிறந்தகமாகவோ, புகுந்தகமாகவோ இருக்கிற அந்தத் தோப்புக்கு உயிர் உணர்ச்சி யில்லாமலா சம்சார சாகரத்தில் அடிபட்டு, எங்கு போனாலுங் கூடவே சுமந்துகொண்டு திரிகிற, துக்க மூட்டையை மனுஷ்யனின் மண்டையிலிருந்தும் இறக்கிவிடுகிறாள்? ஆசாபாசங்களிலே சலித்துப்போய் சஞ்சலச் சுமையை முதுகொடியத் தூக்கிக்கொண்டு, அந்தத் தோட்டத்தின் அக்கம் பக்கத்திலே யாரும் போய்விடக்கூடாது. பிரகிருதி தேவி வலை போட்டுப் பிடித்துக்கொண்டுவிடுகிறாள். சிறிது நேரம் அவளது மடியிலே கிடந்து, அன்பார்ந்த கரங்களாலே தடவிக்கொடுக்கப் பெற்றால் போதும், துக்கமெல்லாம் பறந்துவிடுகிறது. முகத்தோடு முகம் வைத்து மூச்சுத் திணற முத்தமிட்டுவிட்டால் மின்சார சக்தி புகுந்ததுபோ லிருக்கிறது. துக்கிகளுடைய துன்பத்தையுந் துயரையுந் துடைக்க பிரகிருதிக்கு யார் நிகர்? கூழாங் கற்களின்மீது தவழ்ந்தோடுகின்ற நீல ஓடையினுடைய கீத நாதங் காதிற் படுகிறது. அதன் கரையிலே நிற்கின்ற தாழையானது காற்றடிக்கப் பூத்துக் கமகமவென மணங் கமழ்கின்றது. அதோ அந்தப் பாதிரி மரந் தனது ஆசை நாயகியான பலாவை எவ்வளவு கனிவோடும் பார்க்கின்றான்? பக்கத்திலே நிற்கின்ற புன்னையும் புன்னகை பூக்க மாதுளையை நோக்குகிறது. கல்யாண மூர்க்கன் (முள்முருக்க மரம்) ஏனோ தனது தணல் போன்ற மலர்க் கண்களால் ஒசிந்தாடுகின்ற பசுங் கமுகைப் பார்க்கின்றான்?

தோட்டத்திலுள்ள மரங்களுக் கெல்லாம் ஆதிபீஜமாயிருந்து பிதுர் ஸ்தானம் வஹிக்கின்ற வயோதிகத் தந்தையைக் கண்டும் அந்த நாணமற்ற நாயக நாயகிகளாகிற தாவர ஜாதிக்கு மனோ வாக்குக் காயங்களை மீறிக்கொண்டு புறப்படுகின்ற காதலை ஒளிக்க முடியவில்லை. தலை குனிந்து, தளர்ந்த நடையில் தள்ளாடித் தள்ளாடிச் செல்லுகிற கிழவன் இவைகளைப் பார்த்தும் பார்க்காதவனைப்போலத் தனது மக்கள் மருகிகளின் மன மெய் மருவிய கோவையைக் கண்டு, உள்ளூறப் பூரிக்கின்றான். அவனது தொங்கிய உதடுகளிலே ஒரு சிறு சிரிப்புத் தவழுகிறது. பீழை சாடிய கண்களிற் சிறு பிரகாசம்! நடை மெலிந்த நடையில் சிறு வேகம்! ஒவ்வொரு மரமாய்ச் செடியாய்ப் பார்த்துக் கொண்டே போகிறான். அவைகளின் துளிர்த்த இலைகளிலும், பூத்த பூக்களிலும் அவனது கை பட்ட மாத்திரத்திலே அவைகளுஞ் சிரிக்கின்றன. தழுதழுத்த குரலில் ஏதோ பேசுகிறான். கோமள ஸ்வரத்தில் அவைகளும் ஏதோ பேசுவதுபோலக் கொம்பசைக்கின்றன; இலை குலுக்குகின்றன. காலை வந்தனஞ் செய்கின்றனவோ, யோக க்ஷேமம் விசாரிக்கின்றனவோ அல்லது புது விருந்துக் கழைக்கின்றனவோ தெரியவில்லை. அந்த ஜெகதீச சந்திர வஸுவைக் கேட்டால் தான் மர்மம் விளங்கும். அவனுக்குத்தானே தாவர பாஷை தெரியும்.

இவ்வாறு காதலனைப்போலக் கனிந்து பார்த்துக்கொண்டும், இடையிடையே அவைகளை வாத்ஸல்யத்தால் பிள்ளைகளைப்போலத் தழுவிக்கொண்டுஞ் செல்லுகிற தோட்டக்காரன் அந்த இரண்டு ஆசைக் கட்டங்களுங் கடரப் பூக்களைக் கொம்போடு முகருகிறான்; கன்னஞ் சிவக்க முத்தமிடுகிறான். பறித்து முகர்ந்தால் வாசனை குன்றிவிடும்; அழகு மெலிந்துவிடும் என்பது அவனது சித்தாந்தம். பூத்திருக்கிற புஷ்பத்தைப் பிரகிருதியின் அலங்காரப் பொருளாகக் கண் பூத்துப்போகும்படி குளிரக் குளிரப் பார்ப்பதைவிட்டுக் கிள்ளுகிறார்களே! கசக்கி முகர்ந்தால் வாசனை யிருக்குமா? ரஸனை வீணாய்ப் போகாதா? இப்படியெல்லாம் இயற்கைச் சீமாட்டியின் கர ஸ்பரிசத்தாலும், மணங் கமழ்ந்த நிச்சுவாசத்தாலும் ஆகிருஷிக்கப்படாவிட்டால் துன்பப் பேயும், வறுமைப் பைசாசமும் இந்தத் தோட்டக்காரனைப் பிய்ச்சுப் பிடுங்கித் தின்றிராதா? இன்னேரமெல்லாம் ஒரு மூலையிலே புதைக்கப்பட்டிருப்பான். அந்த இடத்திலே ஒரு புல்லோ, பூண்டோ, மரமோ, செடியோ முளைத்திருக்கும். நில்லு! இறையாதே! காற்றே கூச்சலிடாதே! மரங்களே உங்களுக்குப் புண்யமாய்ப்போகக் கொப்புக் குலுக்காதீர்! அதோ பாடுகிறதே அதுவென்ன கோகிலமா? புல்புலா? பாரஸீகத்துக் கிளிப் பிள்ளையா? இல்லை யில்லை. எவரோ சாரங்கி மீளற்றுகிறார்கள். புல்லாங்குழலா யிருக்குமா? அதற்குத்தான் இவ்வளவு மீசுரமேது? வானத்து மோகினியாள் வண்ண

இசைக்கின்றாளா? அல்லது கமலைதான் கவிதை செய்கின்றாளா? ஆம். பாடிக்கொண்டே தோட்டக்காரன் மகள் ஜோதிபாய் வருகிறாள்.

III

மஹா ரூபவதி. அழகு என்னும் பொருளே அவதார மெடுத்திருப்பதுபோலச் சௌந்தர்யமாயிருக்கிறாள். அந்த உத்தியான காவியத்துக்குள்ளே நமது கதாப் பெண்ணுக்கு உவமைப் பொருளாக ஒன்றைக்கூடக் காணோம். நேற்று மாலையிலே அஸ்தமான சூரியனைப் பிரிய மாட்டாமல் மேற்கு நோக்கிச் சோர்ந்திருந்த சூர்ய காந்த மலர் இன்று காலமே கிழக்கிலே யுதித்திருக்கிற தனது பிரேமப் பிரியனாகிற பால சூர்யனோடு கலந்த கர்வத்தால் சர்வ சௌந்தர்யத்தோடு பிரகாசித்தாலும் ஜோதி பாய்க்கு இயல்பில் இருக்கிற அந்த ஜோதி அதற்கில்லை. அதோ அந்தச் சரோவரத்திலே பூத்திருக்கின்றதே அத் தாமரைப் புஷ்பத்திற்காவது ஜோதியின் ஸ்வயம் பிரகாசமான வதனப் பிரபை வருமா? கண்ணிலிருக்கிற கருமை நெய்தலுக்குக் கூட இல்லை குமுத மலருக்குள்ள செம்மையும், மென்மையும் அவளுடைய ரோஜா நிறத்து இதழ்களுக்கு ஈடாகுமா? நாளைக்கு முற்றிவிடப் போகிற மாந்தளிரைப் பாதத்திற்கு இணையாகப் புலவர்கள் கூறி யிருக்கிறார்களே அச் சொல்லானது ஜோதியின் அனிச்சப் பைம்பூவடிக்கு அவச் சொல்லாகாதா?

ஜோதிக்கு வயது பதினைந்து முடிந்து பதினாறைத் தொடப் போகிறது. அவயவங்க ளெல்லாம் உருண்டு திரண்டு, யுவ நிலை யெய்தப் பூத்திருக்கின்றன. அழகு கண்ணையுங் கருத்தையுங் கவ்வுகிறது. மணம் மனத்தைத் தின்னுகிறது. ஆனால் முகரும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கப் போகிறதோ?

தகப்பனும் மகளுமாகத் தோட்ட முழுவதையுஞ் சுற்றிப் பார்த்துவிட்டுப் பத்து நாளிகைக் கெல்லாம் குடிசைக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தச் சின்னஞ் சிறிய கூரை வீட்டிலே நமது தோட்டக்காரன் அவன் மகள்—அந்த இரண்டு ஆத்மாக்களைத் தவிர வேறு மனிதப் பிராணியே கிடையாது. என்றாலுஞ் ஜீவகளை நிரம்பி யிருந்தது. அங்கிருந்த தூண்களும் இதர அசேதனப் பொருள்களுங் கூட உயிர் உணர்ச்சி பெற்றிருப்பது போலத் தோன்றின. மலிவான மண் பாண்டங்களும், விலை யேற்ற மில்லாத தட்டுமுட்டுச் சாமான்களும் அவையவை யிருக்க வேண்டிய யிடத்தில் அழகு பெற அடுக்கி வைக்கப்பட் டிருக்கின்றன. இவைகளைக் கண்ணுற்ற போது ஜோதிபாயின் குடித்தனப் பாங்கும், வாழ்க்கைச் செட்டும் நன்கு விளங்குகிறது. மகளிடத்திலே தந்தைக்கிருந்த வாத்சல்யத்திற்கும், தந்தைக்கு மகள் செய்யுஞ் சிஷ்ருஷைக்கும் வரம்பு இவ்வளவுதான் என்று சொல்லும்

படி, அன்பு மகள் அக் குடும்பத்திலே சாக்ஷாத்தாகக் குடி புகுந்திருக்கிறாள். அன்போடும் ஆதர்ஸத்தோடும் அவள் ஊட்டுகிற கஞ்சியின் ருசி எந்த நளபாகத்துக்கு வரும்? தேவாமிர்தம் என்று ஏதோ ஒன்றிருப்பதாகக் கதைகளிலே கேட்டிருக்கிறோமே அதற்காவது ஜோதிபாயின் கூழுக்குள்ள சத்து இருக்குமா?

இருவரும் ஏதோ பசியாறிவிட்டு, வெளித் திண்ணையிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது ஜோதிபாய் கேட்டாள் "ஏன் அப்பா! இந்த மரங்களை யெல்லாங் கஷ்டப்பட்டுக் குழி வெட்டிக் கன்று நட்டு, நிதம் நிதம் நீர்வார்த்துக், களையெடுத்து, இன்னும் எவ்வளவெவ்வளவோ சிரமப்பட்டு, இந்த மூன்று வருட காலமாக வளர்க்கிறோமே இன்னும் இவைகள் ஏனோ பலன் தரவில்லை?"

"ஜோதி! இந்த இரகசியம் இன்னும் உனக்குத் தெரியாதா? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு. அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். பருவத்தாலன்றி எதுவும் பழுக்காது."

"ஆனால் அந்த வாழை மிக நல்ல தப்பா! எவ்வளவு பழத்தைக் கொடுக்கிறது? அது ஒன்றில்லாவிட்டால்—அதன் பழத்தை விற்று, அரிசி முதல் உப்புவரை வாங்கிவராவிட்டால், அன்றாடம் அடுப்பு மூட்ட முடியுமா? வயிறு வளர்க்க முடியுமா?

"வாஸ்தவந்தான் ஜோதி! வாழை மிக்க நல்லதுதான். நாம் பட்ட பாட்டிற்குப் பலனாக அந்த வாழைத் தோப்பு ஏராளமான பழத்தைத் தருகிறது. அப்படியே மற்ற மரங்களுந் தரத்தான் போகின்றன. ஆனால் அதுவரை நான் ஜீவித்திருப்பேன் என்பது என்ன நிச்சயம்? உன் அம்மாளைப்போல் நானும் ஒரு நாள் இறந்துவிடப் போகிறவன். அவள் இறந்தாள்; நானிருந்தேன் உன்னை வளர்க்க. இனி நானும் இறந்துவிட்டால் உனக்கு ஒரு துணை வேண்டுமே அந்தச் சிந்தனை சில தினங்களாக என்னை அந்தரங்கத்திலே அரித்துத் தின்னுகிறது. ஆண்டவன் உனக்கு, உன் மனதுக்குப் பிடித்த—வாழ்விலும், தாழ்விலும் உன்னை விட்டுப் பிரியாத—ஹிததற்பரனை ஒருவனை வரனாகத் தந்து, உன்னையும், இந்தத் தோட்டத்தையும் என் மருமகனுக்குச் சொந்தமாக அவனிடத்திலேதானே ஒப்படைத்துவிட்டு, நிம்மதியாக நான் சாகவேண்டும்" என்று ஆயிரம் பெருமூச்சுகளுக்கிடையே சொல்லி முடித்தான்.

ஜோதிபாயின் முகத்தில் அவளை யறியாமலே ஒருவிதமான லஜ்ஜை தவழ்ந்தது. நாண மேலீட்டால் அவளுக்குப் பேசத்தானும் நாவெழவில்லை. எத்தனையோ முறை முயன்றும் பேச முடியாமல் அடுப்பங்கறைக்குச் சென்றுவிட்டாள் ஜோதி.

இந்த நாணமென்பது என்ன? எங்கிருந்து வந்தது? கல்யாணமென்கிற பேச்சைக் கேட்ட மாத்திரத்திலே பெண்கள் ஏன் கூச்சப்படுகிறார்கள்? ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவம் வந்தவுடனே ஒருவரையொருவர் காதலிக்கக் கூடியவர்கள்தானே? கட்டிக்கொள்ள வேண்டியவர்கள்தானே? பின்னரேன் இருவருக்கு மிடையே இந்த நாணம் நுழையவேணும்? இது தேவ ரகசியம்! அதன் அத்யாத்ம அந்தரங்கத்தை நம்மால் காண முடியாது; கூற முடியாது.

கல்யாணப் பேச்சு ஜோதிபாயின் கடமையைத் தடுக்கவில்லை. வழக்கம் போலச் சமையலைச் செய்து அத்துடன் பிதுர்ப் பிரீதியையுங் கலந்து தந்தைக்குப் பரிமாறித் தானும் உண்டு முடித்தாள். மேற்கே பொழுது சாய்ந்து காற்று வீசத் தோட்டக்காரன் தோட்ட வேலைக்குப் போய்விட்டான். அவனுடைய மகள் மாத்திரம் முற்றத்திலே நெல்லுக் குத்துகிறாள். ஹா! இந்தத் தேவ சரீரத்துக்கு ஆண்டவன் இவ்வளவு கடினமான வேலையை ஏன் கொடுத்தான்? சண்டமாருதத்திலே அலைக்கழிக்கப்படும் பூங்கொம்பு போலல்லோ அவளது மிருதுவான சரீரம் ஒசிந்தாடுகிறது. எவ்வளவு வியர்வையைத்தான் வழித்தெறிகிறாள்? அவயவங்கள் எவ்வளவு அதிர்ச்சியோடுங் குலுங்குகின்றன? பெண்ணென்றால் பேயும் இரங்குமென்கிறார்களே! இந்த நெல்லுக்கன் இவ்வளவேனும் இரக்கமில்லாமல் போய்விட்டது? மாலை நாலு மணி வரை உலக்கைச் சேவகம் முறையாகத்தானே நடந்தது.

IV

இப்பொழுது ஜோதிபாய் இடுப்பிலே குடமேந்திக் கொண்டு குளத்துக்குப் போகிறாள். காலா காலத்திலே வீட்டு வேலையை முடித்துவிட்டு தந்தைக்கு உதவி செய்வதற்காகச் செல்லுகிற கோமளத்தின் மீது கர்ம தேவதையின் கடாட்சம் பூரணமாகப் பிரகாசிக்கிறது. எத்தனையோ செடிகளுக்கு நீர் வார்க்க வேண்டுமே அதை நினைத்துக் கொஞ்சமாவது மலைக்கிறாளா? குதூகலத்தோடு வேக வேகமாக நடக்கிறாள்.

பக்கத்தி லிருக்கிற தடாகத்திலே தாமரைப் புஷ்பங்கள் ஏகபோகமாகப் பூத்திருந்தும் அவைகள் மலர்ந் திருக்கவில்லை—குவிந் திருக்கின்றன. இலைகள் பச்சைப் பசேலெனக் காடாந்தகாரமாகத் தண்ணீரைத் தன்னுள்ளே நன்றாய் ஒளித்து வைத்துக்கொண்டு தடாகம்போ லில்லாமல் தாமரைத் தோட்டம்போ லிருக்கின்றது. அதன் மேலைக் கரையிலே போடப்பட்டிருக்கிற மூங்கிற் பாலம் தடாகத்தின் நடுவரை பெட்டி யிருக்கிறது. அகலம் இரண்டடிகள் தானும்

இராது. ஜோதியாய் அப் பாலத்திலே சென்று நீரெடுத்துச் செடிகளுக்கு ஊற்றிக்கொண் டிருக்கிறாள். மாலைச் சூரியன் மேலைக் கடலிலே மறையுந் தருணம். வீட்டில் விளக்கேற்ற வேண்டும் என்கிற அவசரத்திலே வேலை ஓட்டமும் நடையுமாக நடைபெறுகிறது.

மனுஷ்ய உயிர் அநித்தியமானது. எந்த நிமிஷத்தில் மிருத்யு தேவன் தன்னைத் தழுவிக்கொள்ளப் போகிறான் என்று யாருக்குத் தெரியும்? மனுஷ்ய வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் விபத்திருக்கிறது. அதைக் கடப்பது அசாத்தியம். ஏனெனில் விபத்தானது சிற்சில சமயங்களில் மனிதக் கண்ணுக்குப் புலப்படாமலே சம்பவித்து விடுகிறது.

ஜோதிபாய் குடத்திலே நீர் நிறைத்து இரண்டு கையாலுந் தூக்கி இடுப்பிலே வைக்கிறாள். அந்த வேகத்திலே கால் சருக்கிவிட்டது. தடாலெனக் குடமுந் தானுமாகத் தடாகத்திலே விழுந்து விட்டாள்.

குளம் ரொம்ப ஆழம். எவ்வளவு உயர்ந்த ஆளுக்கும் நிலைக்காது. எப்பேர்ப்பட்ட நீச்சாளியுந் தாமரைக் கொடிகளை யறுத்துக் கொண்டு கரை யேற முடியாது. ஜோதி—மின்னற் கொடி போன்ற ஜோதி குளத்திலே விழுந்துவிட்டாள். ஒரு முறை அவள் சரீரம் நீருக்கு மேலே கிளம்பிற்று. மறுபடியும் ஜலம் விழுங்கிவிட்டது. அப்புறம் ஒரு தரம் ஜோதியின் தலை தோன்றி மறைந்தது. இனி மூன்றாம் முறை. அதற்கு மேலுங் கங்கை, பிழை பொறுக்கப் போகிறாளா?

பக்கத்திலிருக்கின்ற புதரினின்றும் செடி கொடிகளின் கொப்புகளையும் கொங்கைகளையும் ஒடித்துக்கொண்டு ஒரு வாலிபன் குளத்தை நோக்கி வேகமாக—வெகு வேகமாக ஓடிவந்து அவனும் அக்குளத்திலே தானே விழுகிறான். அந்தோ! இரண்டு ஆத்மாக்களும் ஐயோவென்று அடங்கப்போகின்றன. விழுந்த வாலிபன் இரண்டொரு நிமிஷங்கள் வெளிக் கிளம்பவே யில்லை. ஹா! பஞ்ச பூதங்களில் ஒன்று சினந்து விட்டாலும் மனிதன் எம்மாத்திரம்?

யுவனையுங் காணோம்; யுவதியையுங் காணோம். இரண்டு இளஞ் சரீரங்களையும், நீர்க்காளி விழுங்கி விட்டாள் என்றிருந்த கடைசி நேரத்திலே தாமரை இலைகளை முட்டிக்கொண்டு வாலிபத் தலை கிளம்புகிறது. வலக் கரத்திலே ஒரு பெரிய பாரத்தைத் தன்னோடணைத்துக்கொண்டு பாதாளத்திலிருந்து உதங்கன் பாய்ந்தது போல இளைஞன் பாலத்தை நோக்கிப் பாய்கிறான். தாமரைக் கொடிகள் அவனையும் அவனது சுமையையும் பின்னிக்கொண்டு பின்னுக் கிழுக்கின்றன.

இடக் கையால் அலைகளை விலக்கிக்கொண்டும் நீந்திக்கொண்டும் அங்குல அங்குலமாக வருகிறான். கடைசியில் தெய்வ கிருபையாலோ அல்லது அவனது சரீரத்தின் சக்தியாலோ தாமரைக் கொடிகளையும், தண்ணீர் காளியையும் ஜெயித்து ஜோதிபாயின் பிரக்ஞையற்ற சரீரத்தைப் பாலத்தின் மீது கிடத்தித் தானுங் கரையேறி விட்டான்.

V

அன்றிரவு நடு நிசி, தோட்டக் குடிசையின் ஓர் அறையிலே சின்னஞ்சிறிய கயிற்றுக் கட்டிலிலே ஜோதிபாய் கிடத்தப்பட்டிருக்கிறாள். ஒரு சிறு விளக்கெண்ணெய்த் தீபம் தலைமாட்டிலே எரிந்துகொண்டிருக்கிறது. வலப் புறத்திலே வாலிபன் சோகாக்ராந்தனைத் தேங்கிய முகத்தோடு ஜோதியைக் கூர்ந்து பார்த்தவண்ணமாக வீற்றிருக்கிறான். இடப் பக்கத்திலே வயோதிகத் தந்தை அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாய் விம்மிக்கொண்டும் பொருமிக்கொண்டுமிருக்கிறான். ஜோதிபாய்க்குப் பிரக்ஞை வரவில்லை. மூக்கிலே கொஞ்சம் சுவாசம் மாத்திரம் வந்துகொண்டிருந்தது. நெஞ்சிலே கொஞ்சம் சூடு; மற்றைய பாகங்களெல்லாம் பனிக் கட்டியைப்போல் ஜில்லிட்டிருந்தது.

மறு நாட் காலமே பொழுது புலர்ந்ததும் ஜோதிபாயின் வதனமாகிற செந்தாமரைப் புஷ்பம் பூத்தது போல மலர்ந்தது. வாலிபனும் அந்த யிடத்திலேதானே அசைவற்று நட்டு வைத்த பிரதிமைபோல் வீற்றிருக்கிறான். தந்தையும் சலனமற்றிருக்கிறான். ஜோதிபாய் ஒரே பார்வையில் அந்த இரண்டு பேரையும் பார்த்துவிட்டு ஏதோ பேசத் தொடங்குகிறான். இப்பொழுது அவளது அதரங்கள் கட்டுக் கடங்கியது போன்று அசைகின்றன. "அன்பரே!" என்ற வார்த்தைகள் அரிதிற் புரப்பட்டன. வாலிபன் ஜோதியின் ஜோதிக் கண்களைப் பார்த்தான். யுவதியும் பார்த்தாள். இருவரது விழிகளினின்றும் ஜலம், மலர் உதிர்வதுபோல உதிர்ந்தது. சில நிமிஷங்கள் நிஸ்ஸப்தம்! யுவாவுக்கும் பேச நாவெழவில்லை; யுவதிக்கும் அப்படியே. அப்புறம் ஜோதி மறுபடியும் "அன்பரே! எனக்கு எல்லாம் இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக ஞாபகத்திற்கு வருகிறது. நான் குளத்திலே விழுந்தேன். நீர் என்னைக் கரையேற்றினீர். இதுதானே நடந்தது?" என்றாள்.

"ஆம்" என்கிற இரண்டு வார்த்தைகள் ஏக காலத்தில் இரு புறங்களிலிருந்தும் வந்தன.

"இறந்தனர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?
மறந்தனர் அறிந்து உணர்வு வந்தனர் கொல் என்கோ?
துறந்த உயிர் வந்து இடை தொடர்ந்தது கொல் என்கோ?
திறந் தெரிவது என்னை கொல் இந் நன்னுதலி செய்கை?"

ஆராய்ச்சி மேடை.

உடற் பயிற்சி (முதற் பாடம்)

சரீரத்தால் விடுபட்டாலன்றி ஆத்ம விடுதலை யென்பது கீதா ஸாரம். அப்படியானாற் சரீர பலமில்லாமல் மனோ பலமோ ஆத்ம பலமோ இல்லை யென்று நாம் எண்ணுகிறோம். ஆசிரியர் ஸ்ரீ லெ. சோமசுந்தரம் அவ் வெண்ணத்தை வலியுறுத்திச் சரீர பலம் பெறுமாறு வழி காட்டுகிறார். அவர் முயற்சியை நாம் வாழ்த்துகிறோம்.

மனிதன் இவ்வளவு பலமுடையன் என்பதை உலகினுக் கறிவித்த ராமமூர்த்தியின் கீர்த்திப் பதாகை இன்னும் பறந்துகொண்டிருக்கிறது. அவரது திக்விஜய காலத்திலே அவர் தமது சரீர பலத்தை மாத்திரந்தான் காண்பித்தாரா? உடற் பயிற்சியின் அத்யாத்மத்தைப் பற்றியும் பிரசங்கங்கள் செய்தார்; நாமுங் கேட்டிருக்கிறோம்.

இப்படி நாலைந்து நாள் பிரக்ஞை போவதும் வருவதுமாயிருந்து, கடைசியில் ஜோதிபாய் எமன் வாயிலிருந்து பிழைத்துக்கொண்டாள். இந்த நாட்களிலே அவள் சாவுக்குப் பயந்து சாம்பிக்கொண்டிருக்கவில்லை. மானஸமாக வாலிபனை வாழ்த்தினாள். அவனிடத்திலே அன்பு நிமிஷக் கணக்கில் வளர்ந்து, காதலாக மாறிவிட்டது. ஒருவரை யொருவர் முன்பின் னறியாமலும், வாய் வார்த்தைகள் பேசிக்கொள்ளாமலும், கண்ணளாவ அதிகம் பார்த்துக்கொள்ளாமலும் எப்படிக் காதலித்துக்கொண்டார்கள் என்பதைக் கூற நம்மிடத்திலே வார்த்தைகளில்லை. மௌனமணிப் பெட்டகத்தே, காதற் பொக்கிஷம் புகுந்தது என்பது பரம ரகஸியம்—தேவகாரியம்.

வாலிபனைப்பற்றிய கதை அதிகம் இல்லை. அவன் ஒரு அநாதி. பரம ஏழை. ஆனால் அழகிலுங் குணத்திலும் ஜோதிபாய்க்கு அவன் தான் ஜதையாகவேணும். விபத்திலே இரண்டு யுவ சரீரங்களை யொன்றவைத்த தெய்வம், விபத்திலேதானே காதலையும் வளரச் செய்தது. இன்றைக்கு யாராவது அந்தத் தோட்டத்திற்குக் காற்று வாங்கச் சென்றால், ஜோதிபாயும் அவளது காதலனும் எந்த நேரமும் இணைபிரியாமல் இருப்பதையும், தோட்டக்காரன் அக் காதலர்களைக் கண்டு உடல் பூரித்திருப்பதையுங் காணலாம்.

தமிழ் நாடு பறிகொடுத்த பண்டைப் பெருமைகளிற் சரீர பலமும், வீரமுஞ் சேர்ந்தவை—மஹா முக்கியமானவை. அவ் விரண்டு மில்லாதபோது தான், தமிழன் தோல்விக் கட்டத்திலே யிறங்கினான். நோய், நொடி, துர்பலம் முதலிய ராக்ஷதர்களுக்கு மனிதன் அடிமையானபோது, கொடுங் கோன்மைக்கும் அடிமை யாகிறான். இனி அதினின்றும் விடுபட வேண்டுமானால், நாட்டு மக்கள் நல்ல பலசாலிகளாய், வீரர்களாய்ப் பிறக்க வேண்டும். இது தமிழ் நாட்டுக்குப் புனர் ஜென்மம்.

நண்பர் ஸ்ரீ லெ. சோமசுந்தரனார் தமிழ் நாட்டின் தவப் பயனாய்த் தமிழர்களைப் பலசாலிக ளாக்க உடற் பயிற்சி ஆசிரிய பீடத்திலே கொலு வீற்றிருக்கின்றார். அவருடைய ஆசிரியக் கருத்து 48 பக்கங்களும் நன்கு சமைந்திருக்கின்றன. தமிழருக்கு அது புது விருந்து! அப்பியாசங்கள் 30-ம் 48 படங்களால் விளக்கம் பெறு கின்றன. இறுவாயாக யிருக்கும் சுவாமி விவேகானந்தரின் மெய் யுரை, மனுஷ்யரின் உய்யுரையாக இருக்கிறது. இப் புத்தகத்தை ஒவ்வொரு தமிழருக்குஞ் சிபார்சு செய்கிறோம். ஆர்ட் காகிதத்தில் அழகுறப் பிரசுரிக்கப்பட் டிருக்கிறது. கீழச் சீவற்பட்டி சாண்டோ லெ. சோமசுந்தரன் அவர்களிடமே கிடைக்கும்.

புகழேந்திப் புலவர் வரலாறு:

எமது கெழுதகை நண்பரும், "பாரதி"யின் கட்டுரையாளர் களில் ஒருவருமாகிய திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் ஆக்கிய **புகழேந்திப் புலவர் வரலாறு** எம்து ஆராய்ச்சி மேடைமிசை யேறுகிறது. இரு வருணந் தீட்டப்பெற்ற அதன் அட்டை முதல் அட்டை வரை ஆராய்ந்து, எம் மதிப்பிற் பட்டவை களை யீண்டு உரைக்கின்றோம். புகழுரை யல்ல; மதிப்புரை; ஆராய்ச்சிக் குறிப்பு.

நள காதையை வெண்பாவாற் சரித்திரஞ் செய்த புலவர் பெரு மான், புகழேந்தியாகப் புகழேந்துகிறார். அவரது காவிய உத்தியா னத்திலே கவினுறுங் கற்பனா சக்தி, கவிதா விலாசம், அணியலங்கா ரம் இவைகள் ஒப்பு, உவமை யில்லா ஒளி பெறுகின்றன.

ஒட்டக் கூத்தரும் புகழேந்தியும் நல்ல கவிகள்தான். ஒருவரோடு ஒருவரை ஒப்பிட்டுச் சொல்ல எமக்குத் தெரியாது. ஆனால் தர்க்க சாஸ்திரத்திலே புகழேந்தி ஒட்டிப் பாட (Constructive Criticism) வும் வெட்டிப் பாட (Destructive Criticism) வுந் தெரிந்தவர். ஒட்டக் கூத்தருக்கு வெட்டிப் பாடத்தான் தெரியும்.

ஆசிரியர் குறிப்புகள்.

4884-நிர். கைதி:

நமது "பாரதி"யின் பிரதம ஆசிரியர் ஸ்ரீ ரா. நாராயணஸ்வாமி அவர்கள், வரும் மார்கழி மதி 24-ம் நாள் (7—1—'33) தமது தவச் சாலையிலிருந்தும் வெளிவரக் கூடுமென் றறிகிறோம். அவர் செய்த நோன்பு மஹா பயங்கரமானது. இரண்டு மூன்று மாதங்கள் கொடி யதோர் நோயினால் அவர் பட்டிருக்குங் கஷ்டங்கள் வேலூர்ச் சிறை யின் நாலு சுவர்களுக்குள்ளேதானே க்ஷேமிதஞ் செய்யப்பட்டிருந் தன. வெளி யுலகத்திற்கும், எமது காதுகளுக்குங்கூட அச் செய்தி எட்டவில்லை. மருந்து வேண்டி அவர் விடுத்த நிருபத்திலும் நோயின் யாதனை உள்ளவாறு உரைக்கப்படாமற் சாந்தி செய்யப் பட்டிருந்தது. பல பக்கங்களிலிருந்தும் மருந்துகள் பறந்து சென் றன. மனித சகாயம் தக்க சமயத்திற் கிடைக்காதபோது, தெய்வ

மஹா கவிகளை நாமேன் தாரதம்மியப்படுத்த வேண்டும்? அவர்க ளது காவ்ய ரசனைகளை மாத்திரம் ரஸிப்போம். அதற்கே நேர மில்லாதபோது புலமையிற் பெருமை, சிறுமைகளை விவாதிக்க வேலையில்லை; வேளையுமில்லை. கம்பனை ரஸி! காளமேகத்தைப் படி! புகழேந்தியைப் புகழ்! ஒட்டக் கூத்தனை உவ! வள்ளுவனை வாழ்த்து! இளங்கோவை இன்புறு! சாத்தனைச் சரணடை! அவ்வளவுதான் நமக்கு வேலை. நாமெல்லாம் ரஸக்ராஹிகள்; ரஸிப்போம்.

புகழேந்தியின் பெயரால் ஒட்டக் கூத்தனை உயர்த்தவோ தாழ்த் தவோ யாருக்கு அதிகார மிருக்கிறது? புகழேந்தி வரலாறு கூற வந்த ஆசிரியர், எத்தகைய அபிமானத்தாலோ ஒட்டக் கூத்தர் வர லாற்றை 100 பக்கங்களுக்கு மேல் உரைக்கின்றார். மஹா புலவர்களை அகண்டிதமான தமிழ் சாகரத்திலே தவழ்ந்து விளையாட விடாமல் சிறு குட்டையிலே யேன் அடைத்து வைக்க வேண்டும்?

ஆசிரியர் நாராயணசாமி அவர்களின் ஆராய்ச்சி விரிவானது— 144 பக்கங்கள் கொண்டது. நல்ல பதிப்பு. விலையும் ரொம்ப மலிவு—எட்டணாத்தான். சி. கு. நாராயணசாமி முதலியார், தாமஸ் வீதி, கோயமுத்தூர் என்ற விலாசத்தில் இப் புத்தகங் கிடைக் கிறது.

சகாயங் கிடைத்ததாம். ஒரு சாதாரணப் பச்சிலை. **வேலிப் பரித்தி.** ஆம். அது நோய்க்கு வேலிதான்; பரிதி (சூரியன்)தான். அந்த மஹா மூலிகையைச்-சமய சஞ்சீவியை எவரோ சொல்லி, எப்படியோ சாப்பிட்டாராம். பரிதியைக் கண்ட பனிபோல நோயும் மறைந்து விட்டதாம்.

அடுத்த மாதப் "பாரதி", ஆசிரியர் திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்களாற் பிரதிஷ்டை செய்யப்படுமென்பதைக் கேட்க வாசகர்கள் ஆனந்திப்பர்; அப்புறம் அதற்கடுத்த மாஸிகைகளில் அவரது அமுத ஊற்றை அள்ளிப் பருக அமரமெய்துவர். அவரது வரவு "பாரதி"க்குப் பெரு மகிழ்வாகவும், தமிழகத்திற்குப் புது வரவாகவும் இருக்கட்டும்!

மரமேறிக் கை விட்டவன்:

"கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும், மரமேறிக் கை விட்டவனுங் கெட்டான்" என்றொரு பழமொழியிருக்கிறது. அதன்படி பிரிட்டனும் அமெரிக்காவினிடமிருந்து ஏராளமாகக் கடன் வாங்கிப் பிற நாடுகளுக்குக் கடன் கொடுத்து கெட்டுப்போய் விட்டது. கொடுத்த கடனை, எடுத்த கடனுக்கு ஈடாக்க முடியவில்லை. தவணையும் நெருங்கிவிட்டிருக்கிறது.

டிசம்பர் 15-ம் நாள் அமெரிக்காவுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் கட்டப்பட்டாக வேண்டும். கடன்பட்ட தேசங்கள் கலங்குகின்றன. பிரிட்டனும் பிரான்ஸும் கடனை ரத்துச் செய்ய வேண்டுமென்று அமெரிக்காவைப் பிரார்த்தித்தும் அமெரிக்கா இணங்கவில்லை; சல்லி குறையாமற் சொக்கத் தங்கமாகத் தானே கொடுத்துவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறது. பிரிட்டன், அமெரிக்காவுக்குச் செலுத்த வேண்டிய மூன்று கோடியே யிருபது லட்சம் பவுனுக்குப், பிற தேசங்களில் பிரிட்டனுக்கு வரவேண்டிய நிலுவை, மூன்று கோடியே எழுபது லட்சம் பவுன்களிருந்தும் பயன்படவில்லை. மரமேறிக் கை விட்டவன் கெதி பிரிட்டனுக்கு ஏற்பட்டிருக்கிறதை மறுப்பார் யார்?

நீல நூல் அல்லது முக்காலி:

வட்ட மேஜையைப் பற்றிப் பலர் பலவாறாக வெட்டிப் பாடுகிறார்கள்; நாம் ஒட்டிப் பாடப் போகிறோம். அது ஒரு மிருகம். முதலிலே ஒற்றைக் காலிலே நின்றது. அப்புறம் காந்திஜீயின் கருணை கடாக்ஷத்தால் இரட்டைக் காலிலே நடந்தது. இப்பொழுது மூன்றிலே முடக்குவாதப் படுகிறது. இனிமேல் நாலு காலிலே

நின்றபோதுதான் தட்டுண்டு தடுமாறாமல் ஒரு நிலைமைக்கு வர முடியும் என எண்ண வேண்டியிருக்கிறது.

நீல நூல் என்பது பிரிட்டிஷ் சர்க்காரால் வெளியிடப்படும் பிரசுரங்களுக்குப் பெயர். வட்டமேஜை யாதாஸ்துகளும் நீல நூலிற் பதிப்பிக்கப்படுகின்றன. இப்பொழுது லண்டனில் நடப்பது வட்ட மேஜையல்ல; நீல நூலின் மூன்றாம் பாகம். அதன் இரண்டாவது பாகத்திற்கு ராய்ட்டர் எழுதிய மதிப்புரை இங்கே எமது ஞாபகத்திற்கு வருகிறது. "600 பக்கங்கள்; 13 அங்குல நீளம், 8 அங்குல அகலம், 1 அங்குல கனம். கிறிஸ்து புராணத்திலிருப்பதற்கு மேற்கொண்ட வார்த்தைகள்" என்று வர்ணித்திருக்கின்றார். கழுதை ஒரு மிருகம். நாலு காலும், இரண்டு நீண்ட காதுகளும், முழு நீளமுள்ள முகமும், பொதி சுமப்பதற்கேற்ற முதுகும் அதற்கிருக்கிறது என்று நாம் பள்ளிக்கூடத்திலே படித்திருக்கிறோமே அந்த வியாக்கியானத்திற்கும், ராய்ட்டரின் நீல நூல் வியாக்கியானத்திற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா?

வட்டமேஜையின் நீல நூற் பதிப்புகள் ஒவ்வொன்றிற்கும் ஏற்றஞ் சுருக்கமாக ஏழெட்டு லட்சங்கள் செலவு. இதுவரை மூன்று மேஜைக்குமாகச் சேர்த்து 25 லட்சங்களை யழுதுவிட்டோம். என்றாலும் புத்தகம் பூர்த்தியாகவில்லை. நீல நூலைச் சமாப்தி செய்ய, இந்தியா இப்பொழுது முடிவுரை எழுதிக்கொண்டிருக்கிறது. காந்திஜீதான் அதன் கடைசிப் பாகத்தைப் பிரசுரிக்கப்போகிறார். அவராலேதான் அது முடிவுறும்.

ஜெர்மனி:

ஜெர்மனி மஹா பலாஷ்டிகமான வல்லரசுகளில் ஒன்று. அதன் வன்மையைக் கண்டு பயப்படாத தேசம் ஐரோப்பாவிலும், அகில உலகத்திலும் இல்லை. போன பாரதப் போருக்கும் ஜெர்மனிதான் ஆதி பீஜமாயிருந்தது. ஆனால் இப்பொழுதைய ஜெர்மனியின் நிலைமையோ பரிதாபம்! இத்தீன ஸ்திதி ஜெர்மனியை யெங்கு கொண்டு போய் விடுமென்பதைப்பற்றி இப்போதொன்றுந் திட்டமாய்க் கூறி விட முடியாது. அகில ஜெர்மனியிலுங் குழப்பம்! கட்சிப் பிரதி கட்சி! வேலையில்லாத் திண்டாட்டம்! பண முடக்கம்! இந்தக் கண்டத்திலிருந்து ஜெர்மனியின் தலை தப்பவேண்டுமே!

ஆயுதப் பரிஹரண மகாநாட்டில் ஜெர்மனிக்கு நீதி வழங்க வல்லரசுகள் மறுக்கின்றன. உள்நாட்டுக் குழப்பம் ஜெர்மன் சர்க்காரைத் திக்குமுக்காடச் செய்கிறது. தேசத்தின் நாலா மூலைகளிலும் நாஜியர்களுக்கும், பொதுவுடைமைக்காரர்களுக்கும் போராட்டங்

கள் நடந்தமணியமா யிருக்கின்றன. நாச வேலைகளும், நரஹத்திகளுங் கணக்கின்றி நடக்கின்றன. பார்லிமெண்டிற் பிளவு பலத்திருக்கின்றது! தென் ஜெர்மனிக்கும் வட ஜெர்மனிக்குந் தாவா!! புராட்டஸ்டண்டுக் கிறிஸ்தவர்களுக்கும், கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்குங் கட்சி! அபேதவாதிகளுக்கும் பொதுவுடமைக்காரர்களுக்கும் போர்! நாஜியர்களுக்கும் பொதுவுடமையாருக்குஞ் சண்டை! இவ்வளவு தீக் காட்டினிடையே ஜெர்மனியை ஆண்டவனலன்றி யாரால் காக்க முடியும்?

முடியாட்சியைத் திரும்பவும் ஸ்தாபிக்க வேண்டுமென்கிற ஒரு கட்சியு மிருக்கிறது. அதற்கு மாஜி கெய்சரின் வக்கீலாகிய டாக்டர் எவர்லீஸ் தலைவராயிருக்கிறார். அவரது கூற்றிலிருந்தும், ஜெர்மன் பிரதம மந்திரி வான் பேப்பன், மாஜி வர்த்தக மந்திரி டாக்டர் வர்ட்டன் பாக் கூறுவதிலிருந்தும் முடியாட்சி முயற்சி தீவிரமாக நடப்பதாகத் தெரிகிறது.

ஜப்பான் போக்கு:

மஞ்சூரியாவைப் பிடித்து ஜப்பான், சீனர்களுக்குச் செய்துவரும் இன்னலும், இடைஞ்சலும் அம்மவோ! வட்டிலடங்கா. மஞ்சூரியாவிற் சமீப காலத்திலே ஜப்பான் செய்துவரும் அக்ரமங்களைப் பொறுக்கமாட்டாமல் சர்வதேச சங்கத்தில் ஓர் கண்டனத் தீர்மானத்தை அயர்லாந்து, ஜெக்கோஸ்லோவோக்கியா, ஸ்பெயின் தேசங்களின் பிரதிநிதிகள் கொண்டுவரப் போவதாகத் தெரிந்து, ஜப்பான் பிரதிநிதி உறுமுகிறார். அட! ஜப்பானே! உனக்கு அழிவுகாலஞ் சமீபத்திலிருக்கிறது. அணைந்துபோக இருக்கும் விளக்கானது ஜெகஜ்ஜோதியோடும் பிரகாசிப்பதுபோ லிருக்கிறது ஜப்பான் செயல். போர்க் கருவிகளுக்காகப் பணத்தைக் கொட்டி, கஜனுக் காலியாகிவிட்டது. வறுமையும் பஞ்சமும் ஜப்பானில் தாண்டவமாடுகிறது. இதே இராணுவப் போக்கில் இனியுஞ் செல்லுமானல் இன்றோ நாளையோ ஜப்பான் வீழ்ந்தேவிடும்.

அறிவிப்பு:— இட மின்மையால, **சிறு மணித்திரள்** அடுத்த சஞ்சிகையில் வெளிவரும். ஆ—ர்.

பொறுப்பாசிரியர் திரு. ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டுப் பிரசுரிக்கப்படுகிறது.

"பா ர தி"

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

நான்காம் ஆண்டு நடைபெறுகிறது.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாலிகை

"பரதி" ஒன்றே யாகும்.

உடனே சந்தாதார்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதார்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2/= அல்லது 3 ஷிலிங்
வெளி நாடுகளுக்கு ,, ரூ 3/= ,, 5 ,,
போஷக சந்தா குறைந்தது ரூ 100/=
தனிப் பிரதி விலை அணு 3. அயல் நாடு அணு 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை எதிர்பார்க்கப் படுகின்றது.

விபரத்திற்கு 2 அணு ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,

"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

197885
சென்னை-600 002

விளம்பரங்கள்

"பாரதி"

பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ'வெனப் புகழப்பெற்று,
சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளி வந்துகொண்டிருக்கும்

"பாரதி"ப் பத்திரிகையின் பைண்ட் வால்யம்

உங்கள் புத்தகசாலையை
அழகு செய்வதாயிருக்கின்றது.

இவைகளில் பல பெரியோர்கள் சரிதைகளும்,
தேசாபிமானச் செல்வர்களின் சரிதைகளும்,
அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

தமிழ் நாட்டின் அறிஞர் சிகாமணிகளும், பண்டிதப்
பெரியார்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் எழுதிய
அரிய கட்டுரைகள் என்றும் படித்துணரத்
தக்கவையாய்த் திகழுகின்றன.

விஷயங்களுக்கும் அச்சுக்கும் ஏற்ற விதம் உறுதியாக
பைண்ட் செய்யப்பெற்றிருக்கிறது.

800 பக்கங்கள்; நேர்த்தியான காலிகோ; கில்ட் பிரிண்ட்.

1930-ம் வருட வால்யம் 1-க்கு விலை ரூ. 2—8—0.
1931-ம் " " ரூ. 2—8—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன்
ரூ. 3½ அல்லது 5½ ஷிலிங்.

'பாரதி' ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.